

# இலக்கை நோக்கி...

(நெல்சன் மண்டேலாவின் வரலாறு)



க.பொ.இளம்வழுதி

நூலாசிரியர்
க. பொ. இளம்வழுதி



முத்துப் பதிப்பகம்
விழுப்புரம்

# இலக்கை நோக்கி...

(நெல்சன் மண்டேலாவின் வரலாறு)

க. பொ. இளம்வழுதி

முத்துப் பதிப்பகம்

5, பார்த்தசாரதி மனைப்பிரிவு

கன்னியாகுளம் சாலை

விழுப்புரம்- 605 602.

தொலைபேசி : 3375

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | டிசம்பர் 1991 |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| விலை | : | 16-00 |
| படைப்பு | : | இலக்கை நோக்கி...<br>(நெல்சன் மண்டேலாவின் வரலாறு) |
| படைப்பாளி | : | க. பொ. இளம்வழுதி<br>38, அண்ணாநகர், கடலூர்-607 001 |
| பக்கங்கள் | : | 124+iv |
| அச்சுத்தாள் | : | 11. 6 கி.கி. |
| அச்சு | : | 10 புள்ளி |
| வெளியீடு | : | முத்துப் பதிப்பகம்,<br>5, பார்த்தசாரதி மனைப்பிரிவு<br>விழுப்புரம் 605 602. |
| அச்சிட்டோர் | : | அலைகள் அச்சகம்<br>36, தெற்குச் சிவன் கோயில் தெரு,<br>கோடம்பாக்கம், சென்னை—600024. |

# மனவாயில்

''போராட்டமே எனது வாழ்க்கை'' என்றார் நெல்சன் மண்டேலா. அவருடைய போராட்டம் வயிற்றுக்கான போராட்டமோ வசதிக்கான போராட்டமோ அல்லது பதவிக்கான போராட்டமோ அல்ல. உரிமைக்கான போராட்டம். நாட்டு மக்களின் நலனுக்கான போராட்டம். அந்த பொது நலப் போராட்டவாதியின் அரிய வாழ்க்கை வரலாறு, நாட்டு நலனில் மட்டுமல்ல, தங்கள் நலனில்கூட அக்கறையற்று இலட்சியமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் - இல்லை, காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கும் —இளைய தலைமுறைக்கு உதவக்கூடும்.

அரசியல் இருட்டில், நடிப்பு நட்சத்திர வெளிச்சத்தில் நடைபோட்டுக்கொண்டிருப்பவர்கள்தான் நமது இளைஞர்களில் பலர்.

சிற்பம் வடிக்கப் பனிப்பாறையைச் செதுக்கிக் கொண்டிருப்பவர்கள் இங்கே ஏராளம்.

தெரிந்து கொள்ளப் படிக்கவேண்டுமென்பதை விட, தெரிந்தவர்களின் எழுத்தைத் தேடிக் கொண்டிருப்பவர்கள் தமிழர்கள்.

நான் காற்றடிக்கும் திசையில் படகைச் செலுத்த விரும்பவில்லை. எனது இலக்கை நோக்கியே கலத்தைச் செலுத்த முயல்கிறேன்.

பொருளாதார வறுமைக்கு மட்டுமே இன்றைய அரசுகள் திட்டம் தீட்டுகின்றன. பண்பாட்டு வறுமைக்கும் இலட்சிய வறுமைக்கும் இங்கே திட்டம் ஏதுமில்லை.

நாளை என்பதற்காகச் சிந்திக்க யாருக்கும் பொறுமை இல்லை.

தென்னந்தோப்பை உருவாக்க ஆர்வப்படாமல், கீரைப்பாத்தியையே சுற்றிக் கொண்டிருப்பவர்கள் தான் நம்மில் பெரும்பாலோர். உடனடி ஆதாயத்துக்காக அரசியல்வாதிகள் தொலைநோக்கின்றி தங்கள் காலத்துக்கு மட்டுமே சிந்திப்பதன் விளைவு இது.

கூழாங்கற்களையே கோமேதகமென்று கூவிக்கூவி விற்க முயல்கிறார்கள், வறியவர்களுக்கு வைரத்தை அடையாளம் காணும் திறமை ஏது?

அண்ணாந்து பார்க்கக்கூட ஆற்றலற்று கோபுரத்தைக் கூட தரை நிழலிலேயே காண முயலும் அளவுக்கு இங்கே முயற்சியின் முனை கூரொடிந்து கிடக்கிறது.

ஒதுங்கி நிற்பவர்களும், ஒதுக்கப்பட்டவர்களும் மட்டுமே இதையெல்லாம் எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

விற்பனைக்காகவே நூல்கள் படைக்கப்படும் காலத்தில், உணர்த்துவதற்கென்றும் ஓரிரு நூல்கள் வரத்தான் செய்கின்றன.

இந்த நூலை வெளியிடத் துணிந்த முத்துப் பதிப்பகத்திற்கும், அதன் உரிமையாளர் திரு மு. இலட்சுமணனுக்கும் நன்றி.

எனது நல்ல நண்பர்கள், எனது எழுத்துப்பணிக்கு எப்போதும் துணைநிற்பதால்தான் என்னால் இத்துறையில் இன்னும் நிலைத்திருக்க முடிகிறது. அவர்கட்கெல்லாம் நான் நன்றிக் கடன் பட்டவன்.

படைப்பு உயர்ந்ததாக இருந்தால் மட்டும் போதுமா? அதன் அமைப்பும் உயர்ந்த தரத்தோடிருந்தால் தான்

படிப்பாளிகளை அதனால் ஈர்க்க முடியும். இந்த வகையில் தங்களை அடையாளம் காட்டியிருக்கும் அச்சகத்தார்க்கும் தொழிலாளர்களுக்கும் நன்றி. படித்திருத்தம் பார்த்துதவிய புலவர் திரு. வ. கலியபெருமாள், பாவலர் திரு. இலக்கியன் ஆகியோருக்கும் என் நன்றி.

கடலூர்-1

அன்புடன்

க. பொ. இளம்வழுதி

# பதிப்புரை

கவிச்சித்தர் க. பொ. இளம்வழுதி அவர்கள் தமிழ்க் கவிதை உலகுக்கு நன்கு அறிமுகமானவர்.

கவிச்சித்தரின் மூன்று கவிதை நூல்கள் தமிழக மற்றும் புதுவை அரசுகளின் பரிசையும், பாராட்டையும் பெற்றுள்ளன.

இவருடைய முதல் உரைநடை நூலான 'வெற்றியின் அறிமுகம்' ஜவகர்லால் நேருவின் வரலாற்று நூல் வரிசையில் சிறப்பிடம் பெற்ற படைப்பு.

உலகப் புகழ் பெற்ற உரிமைப் போராட்டத் தளபதி, தென்னாப்பிரிக்க தேசியக் காங்கிரசின் விடிவெள்ளி நெல்சன் மண்டேலாவின் வரலாறு 'இலக்கை நோக்கி......' உங்கள் கரங்களுக்கு வந்துள்ளது.

அறிவார்ந்த தமிழுலகும், இளைய தலைமுறையும் இந்நூலை வரவேற்குமென நம்புகிறோம்.

இந்த நூலை வெளியிடும் வாய்ப்பை எங்களுக்களித்த கவிச்சித்தர் அவர்கட்கெங்கள் நன்றி,

மு. இலட்சுமணன்
முத்துப் பதிப்பகம்
விழுப்புரம்

# பூபாளம்

மழை மேகத்திற்கு நிறங்கொடுத்த நிற மக்களின் தலைவனே!

கண்மாய்க் கோரையென கறுப்பின மக்களை வெள்ளையரெனும் வெள்ளம் அழுத்தி நடக்கிறது. கவிழ்ந்து கிடக்கும் 'ட'கரமாகிவிட்ட கறுப்பர்களுக்கு; முதுகெலும்பாக மூச்சுக் குழலாக ஆனவனே!

அடக்குமுறை அல்லலுக்கு விடைகொடுத்து வைகறைக்கு வழிகோலுபவனே!

குடிசையில் பிறந்து, கொள்கைக் கோபுரமேறி நம்பிக்கைக் கலசமாகிவிட்ட நாயகனே!

பேதப்படுத்தும் இனப்பாகுபாட்டை மோதித் தகர்க்கும் வெள்ளம் நீ!

வெள்ளையர்களின் கறுப்புத்தனத்தை வியனுலகுக்கு விளங்க வைத்தவனும் நீ தான்.

அச்சங்களுக்கு மச்சு கட்டித் தராமல், எச்சங்களாக்கிய இரும்பு மனிதன் நீ!

உன்னைப் பார்ப்பதே உயிரணுக்களுக்கு ஊட்டச் சத்து!

உரிமை மூச்சுக்குழல்களுக்கு, உன் பேச்சு தானே பிராண வாயு!

இதழ்களோடு சிறையேகிக் காம்பாக வெளியே வந்தவனே!

இதழ்களை இழந்தாலும் ரோஜா வாழ்விழந்து விடுவதில்லை. மகரந்தங்களே மலர்களின் மங்கலநாண்!

மண்டேலா! உன் கொள்கை மகரந்தம் கொட்டிப் போகவில்லை!

போராட்ட வாதிகளுக்குகொள்கைதானே நாசி! நாடி! இளைத்திளைத்துப் பருப்பது சுவாசப்பை! இளைப்பை வென்றவை எலும்புகளே!

நீ உரிமை இயக்கத்தின் எலும்பு! இளகிவிடும் பந்த பாசக் காச நோய் கவ்விப் பற்றாதவை உன் மார் பெலும்புகள்!

அசாதாரணங்களே அதிசயங்கள்!

நீ அசாதாரணம் மட்டுமல்ல, அகிலத்திற்குக் காட்டக் கிடைத்த உயர்ந்த உதாரணம்!

உடைக்க முடியாதது ஒன்றுமில்லை என அறைகூவல் விட்டது அறிவியல். அணுவையே உடைத்துக்காட்டி, இமைகளுக்கு இறங்க ஏணி தேவைப்படுமளவுக்கு உயரச் செய்தார் ஐன்ஸ்டீன்:

உடைக்க முடியாத ஒன்று உன்னிடம் இருப்பதைக் கண்டு விஞ்ஞான உலகம் மட்டுமல்ல, அரசியல் உலகமும் நாணிக் குனிந்து நாணலாகிப் போனது! உடைக்க முடியாதது உன் உரிமை உணர்வு! பிளக்க முடியாதது உனது இனப்பற்று!

இளமையைச் சிறைக்குக் கொடுத்து, முதுமையை வாங்கிக் கொண்டு வெளியே வந்த முதல் மனிதன் நீதான்!

இருபத்தேழாண்டுகள்!

எண்ணிப் பார்த்தாலே இதயம் கனக்கிறது.

இருந்து பார்த்த உன் இலட்சிய ஊட்டத்தின் முன், அந்தக் கனத்த நாள்களே காற்றாகிவிட்டன.

விஞ்ஞான சோதனைகள் எத்தனையோ புதுமைகளை இப்பூவுலகிற்கு அறிமுகப்படுத்தி அதிசயிக்க வைத்திருக் கின்றன.

நீயும் மரணப்படுத்த முடியாத ஒன்றை உலகரங்கில் உலாவரக் கொடுத்திருக்கிறாய்.

அதுதான் உனது இலக்கு, இலட்சியம்! வசதிக்கு அடிமையாகாதவர்களின் இலட்சியம் இளைப்பதுமில்லை, இறப்பதுமில்லை!

புராணப்புளுகாக ஈசன் வரம் இருக்கலாம்! வைராக்கிய வரம் கொடுக்கும் சக்தி உன் வாழ்க்கைக்கு மட்டுமே உண்டு!

எங்கள் அண்ணலின் போர் வழியையே நீ தேர்ந்தெடுத்தாய். ஆனால்... காலக்காற்று உன்னை இலெனின் பாதைக்குத் தள்ளிச் சென்றுவிட்டது.

எனவே, ஆயுதப் பேரராட்டம் உனக்குத் தாய் மொழி அல்லவென்றாலும், அவசியமான அந்நிய மொழியாகி விட்டது. காலத்தின் கட்டாயத்தால் ஆயுதங்களும் உனக்கு அண்ணன் தம்பிகளாகி விட்டன.

யண்டேலா! நீ மதிப்பதற்கு மட்டுமல்ல, துதிப்பதற்கும் தகுதியானவன். ஆம்..

மலைகளே அண்ணாந்து பார்த்து மலைத்துப்போகக் கூடியது உன் தியாகம்!

பரந்து கிடப்பதால் பரவை எனப்படும் ஆழிகளுக்கே அழுக்காறு உண்டாக்க வல்லது உன் புகழ்!

பட்டுப்புழுக்களின் எச்சில் இழைகளின் பளபளப்பையும் மங்கச் செய்யும் மகத்துவம் பெற்றது உனது மக்கள் கவர்ச்சி!

தாய்மை உணர்வும், தூய்மை எண்ணமும் தலைமைக்குத் தேவையான தகுதிகள். இந்த எண்ணப் பறவைகளுக்கு நீயொரு வேடந்தாங்கல்!

கட்டிலேறாத உனக்கு முடி சூட்டப்படுகிறது! ஆட்சி இல்லாவிட்டாலும் நீதான் அரசன்!

நீ புதிய மத போதகனல்ல. ஆனாலும் உலகம் உன்னைப் போற்றுகிறது!

நீ எந்த நாட்டுக்கும் அதிபரல்ல, ஆனால் பல நாட்டுப் நாடாளு மன்றங்களில் உன் கருத்துரை கதவைத் தட்டி யிருக்கிறது - எதிரொலித்திருக்கிறது.

புனைவே இல்லாமல் புறப்பட்டு வரும் உன் வார்த்தை களை வரவேற்க, உலகத்தின் செவியே ஒற்றைக்காலில் நின்று கொண்டிருக்கிறது.

உன் நெற்றியில் விழுந்திருக்கும் கோடுகள் முதுமையின் முத்திரையல்ல, கவலையின் நித்திரை!

நயாகரா நீர்வீழ்ச்சியைப் போன்ற உனது ஓயா முழக்கம், அந்த நித்திரைக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கப் போவதில்லை.

உன் உழைப்பு நெம்பு கோல், இன வேற்றுமைப் பாறையை அசைக்கத் தொடங்கிவிட்டது.

அது புரண்டு விழுந்து பொடிப்பொடியாவதைக் காண உரிமை வேட்கை உள்ளங்கள் பயணப்பட்டுக் கொண்டி ருக்கின்றன.

இங்கே ஓர் அண்ணல் காந்தி; அங்கே ஓர் ஆபிரகாம் லிங்கன், மூன்றாவதாக, முத்தாய்ப்பாக கறுப்பினமக்களின் அவலத்தை அழித்தொழிக்க 'குனு' கொடுத்த கொடை யாக நீ!

இலட்சியப் போராட்ட வாதிகளில் பலர் அது கைகூடி வந்தபோது காலமாகிப் போனதுண்டு. ஆனால், வெற்றி வெல்லக் கட்டியாக அல்லாமல், கற்கண்டு மலர்களாக உன் காலடியில் கொட்டப்படுவதைக் காண முடிகிறது.

பாறையைக் கொண்டு வந்து பாதைபோட முடியாது. அதைச் சிதைத்துச் சில்லுகளாக்கினால், பாதை சமைக்க அது பக்குவமாகிவிடுகிறது. உன் முயற்சியால், நீ ஊட்டிய மக்கள் உணர்வு எழுச்சியால், இனப்பாகுபாட்டின் இமயமே

கரைந்து கொண்டிருக்கிறது. பனி முகட்டைக் கரைக்கும் பகலவனாகி விட்டாய் நீ!

ஊனப்படுத்தப் பட்ட உரிமைக்கு ஊன்றுகோலான வனே! நெரிக்கப்பட்டிருக்கும் நீதியின் கழுத்துத் தளையைக் கட்டறுக்கப் புறப்பட்ட கருப்புச் சிங்கமே! பறிக்கப்பட்ட உரிமைகளைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிராமல், அதட்டிக் கேட்கும் ஆண்மையாளன் நீ! குரல் வளைக்குள் குண்டு களைச் சுமந்து கொண்டிருக்கும் துப்பாக்கித் துரைத்தனத் திற்கு இயக்கமெனும் இரும்புக் கவசமானவன் நீ!

பெரும்பான்மை மக்கள்; எழுத்தாகக் கூட இயங்க முடியாமல்; கால்புள்ளி; அரைப் புள்ளிகளாகவே காலத்தை முடித்துக் கொள்ளும் போது. நீ வாக்கியங்களாக வளர்ந்து வரலாறாக நிலைத்தவன்.

உன் இலட்சியப் பயணம் முடக்கப்பட்டதுண்டே தவிர, முடிக்கப்பட்டதல்ல. ஆட்சியும் அதிகாரமும் உன் பருவ சுகங்களைத் தான் பதுக்க முடிந்தது. பந்த பாசங் களுக்குத்தான் திரைபோட முடிந்தது. எந்தச் சட்டத் தாலும், எவர் சதித் திட்டத்தாலும், தொய்வில்லா உன் தொண்டுதனைத், துணிவைத் தொட்டுப் பார்க்கக் கூட முடியவில்லை.

உன் வெற்றியைக் கொண்டாடப் பந்தற் கால்கள் நடப்படுகின்றன. உன்னைப் பாராட்டுவதற்காகச் சொற்கள் சேகரிக்கப்படுகின்றன.

தென்னாப்பிரிக்க மக்களின் உரிமைகளை அடைத்து வைத்திருக்கும் ஆலயக் கதவைத் திறக்கும் ஆற்றல் பெற்ற ஆப்பிரிக்க அப்பர் நீ! இங்கே கதவு திறந்தது பக்திப் பாட்டி னால்; அங்கே கதவு திறப்பது உன் செயற்பாட்டினால். உன் முயற்சியால் இனவேற்றுமை இருட்டு கிழிக்கப்படு கிறது! உரிமை வெளிச்சக் கீற்று பொன்முலாம் பூசிக் கொண்டு புறப்படுகிறது!

உன் தன்னல மறுப்புத் தண்டவாளத்தில், சம உரிமைத் தொடர் வண்டி புறப்பட சீழ்க்கை ஒலிக்கிறது, பச்சைக் கொடி விரிகிறது!

எண்ணற்றோர் பட்ட இன்னலால் - உழைப்பால்–தன்னல மறுப்பால் வெற்றிக் கனி முற்றித் தொங்குகிறது கனிந்தபின் காம்பின் உறவு நீடிக்க முடியாது. எந்த நேரத்திலும் வெற்றிக்கனி உனது கரத்தில் அடைக்கலம் புகலாம்.

அந்த நிகழ்ச்சி இன்றா? நாளையா?
வரலாற்று நாயகனே!
உன் தொண்டுக்குத் துப்பாக்கிக் குண்டுகளின் குடியிருப்பு
தலை தாழ்த்தும் நாள் வராமற் போகாது.

# இலக்கை நோக்கி

## 1. வரலாற்று வாசல்

**பூ**மிப் பகுப்பு முறையால் ஆசியா; ஆப்பிரிக்கா; ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா என ஐந்து முகங் கொண்ட கண்டமெனும் கன்னி.

காண்டமென்பதோ காப்பியப் பிரிவு!

கண்டங்களோ காசினியின் கூறு!

பரிதி தன் பார்வையைப் பதிய வைப்பது ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலுமே அதிகம்.

ஆப்பிரிக்கா என்பதோ அடர் காடுகளையும், மணற் கடலையும் அங்கமாகப் பெற்ற நிலப்பரப்பு. அந்த மண்ணின் மடியில்தான் எவ்வளவு கனி வளம்! கறுப்பு மனிதர்களின் காலடியில் தங்கமும், வைரமும் தஞ்சமடைந்துள்ளதென்ன விந்தையோ!

சிவப்பு, பச்சை நிறங்களில் செறிவேறினால் கறுப்பு நிறமே கருவுயிர்த்துக் காட்சிதரும். அந்தக் கறுப்பு ஆப்பிரிக்கர்களுக்கே சொந்தம்! மனித இனத் தோற்றத்தின் தொட்டிலாகத் துலங்குவது, இருக்கும் நிலத்தில் இதுதான்.

வஞ்சிக்கத் தெரியாதவர்கள் வாழுமிடமாக இருந்தது தான் ஆப்பிரிக்கா!

காடுகளில் படர்ந்திருக்கும் பசுமை, பறவைகளை மட்டுமல்ல, பரங்கியரையும் பறந்து வரச் செய்தது.

தாவரங்களின் தாயகமாக, மதகரிகளும், மற்ற விலங்கு களும், பள்ளிப் பிள்ளைகளைப் போல் பயமின்றி உலவும் இடமாக இருந்ததும், ஆப்பிரிக்காதான்,

ஆதி மனிதர்களாக ஆப்பிரிக்கர்கள்;

கோடுகளுக்கு அகப்படாத கோலப் புள்ளிகளைப்போல் திட்டுத் திட்டாகத் தேமல் நிலப் பகுதிகள்!

இணைப்பு இல்லாததால் இனங்கள் ஏராளம்! இவர்கள் நிலத்தாலும் — நிறத்தாலும் ஒன்றே! ஆனால் வாழிடத் தாலும், பழகும் இயல்பாலும் இவர்கள் நெய்யப்படாத நேரிழைகள்.

தேசம் ஒன்று. தேசிய இனங்களோ பல! ஆசைகளை வளர்த்துக் கொள்ளாமல் அடக்கமாக வாழ்ந்தனர் ஆப்பிரிக்கர்கள்.

வெள்ளத்தைத் தேடும் வெள்ளைக் கொக்குகள் ஐரோப்பாவில்.

ஆப்பிரிக்கப் பசுமை ஐரோப்பிய ஆடுகளின் கண்களில் பட்டது.

வெற்றிடத்துக் கொக்குகளின் கண்களுக்கு வெள்ளம் தென்பட்டது.

சுரண்டலுக்கான நிலத்தைத் தேடிச் சூழ்ச்சிக் கால்கள் நடை போட்டன.

தென்னாப்பிரிக்கா பசுமையின் பாட்டி வீடு! வளம் கொழிக்கும் நிலம்! ஆடுகளின் நெஞ்சுள் ஆசை அலை மோதியது. இனி அசை போடலாம்.

பதினேழாம் நூற்றாண்டு குடியேற்றத்திற்கும். பாதை திறந்துவிட்டது. டச்சுக்காரர்களே இந்த மண்ணைத் தொட்டுப் பார்த்த முதல் அந்நியர் —ஐரோப்பியர்!

ஒண்டிக் கிடந்தவர்கள் உருண்டு படுக்க இடங்கிடைத்தால் விடுவார்களா?

ஆட்டைக் கண்ட வேட்டை நரிகளாக வந்தேறிகள் வயிற்றைத் தடவிப் பார்த்துக் கொண்டனர்.

ஜெர்மானியர்களும், பிரெஞ்சுக்காரர்களும் டச்சுக்காரர்களுக்குத் தம்பி, தங்கைகளாகித் தங்கத் தொடங்கினார்கள்.

கறுப்புக் குயில்கள் வாழ்ந்த மரத்தில் கொக்குகள் வந்து குந்தத் தொடங்கின.

வெள்ளைக்காரர்கள் தங்களுக்கு வேளாளர்களென்று வேறு பெயர் சூட்டிக் கொண்டார்கள். ஆம். புகுந்த இடத்தில் இவர்கள் புனைந்து கொண்ட பெயர்தான் 'ஆப்பிரிக்கானியர்' இவர்கள் பூர்வீகர்களாகக் காட்டிக் கொள்ளப் புதுமொழி ஒன்றையும் பெற்றெடுத்தனர். அந்தப் புதுமொழிக்கு அவர்கள் சூட்டிய அழகு பெயர்தான் ஆப்பிரிக்கான்ஸ்.

கூடாரம் போட்டவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கொள்ளைக்காக மண்ணின் மைந்தர்களுக்கே பள்ளம் பறித்தனர்.

ஒண்ட வந்தவர்கள் உள்ளூர்க்காரர்களின் உடைமைகளைக் கவர்ந்தனர், காட்டில் வாழ்பவர்களுக்குக் கால்நடைகள்தானே செல்வம்!

வந்தேறிகள் நிலத்திற்குரியவர்களை அடக்கி ஆளத் தொடங்கினர்.

கோசாக்களும், சூலுகளும் பூவர்களுடன் போரிட்டுப் பார்த்தார்கள். காணிகளையும் கால்நடைகளையும்

கவர்ந்தவர்களோடு உரிமைப் போர் நடத்தினார்கள். இந்தியாவில் ஆரியர்கள் ஆதியில் செய்ததை. ஆப்பிரிக்காவில் பூவர்கள் புரிந்தார்கள்.

வந்தேறிகளுக்கு வலு அதிகந்தான்.

குளத்து நீர் குமைந்து கிடக்க — ஆற்று நீர்தானே ஆர்ப்பரித்து நடக்கிறது?

பூவர்களுக்கும், பூர்வீகர்களுக்கும் அடிப்படைத் தேவையிலேயே வேறுபாடு. வந்தவர்கள் காலூன்ற நிலம் வேண்டும். அதற்காக அவர்கள் களம் காண்பதிலும் கருத்தாக இருந்தார்கள்.

## 2. குளம் தேடிய கொக்குகள

சந்தை தேடிய பிரிட்டானியர்கள் கடற்கரை நகரங்களில் கடை விரித்தனர். கண்ணாடியையும் கத்தியையும் காட்டிக் காவலர்களை மடக்கிப் போட்டனர். இவை நடந்த இடம் இந்தியா!

பிரிட்டானியர்களுக்குப் பிரெஞ்சுக்காரர்களுடனும், போர்த்துகீசியர்களுடனும் போட்டி. வாணிபம் என்றாலே வலிய வந்து நிற்பது போட்டிதானே!

வல்லவனுக்கே வாய்ப்பென்பதுதானே வரலாறு!

இந்தியாவில் நிலைகொள்ளத் திட்டமிட்ட பிரிட்டானியர்களுக்கு, இடைநிலைத் தளமொன்று தேவைப்பட்டது.

நன்னம்பிக்கை முனையை நமதாக்கிக் கொண்டால்?

பிரிட்டனின் பிரதேச ஆசை பிஞ்சுவிட்டது. விளைவு?

தென்னாப்பிரிக்காவுக்குள் பிரிட்டானியப் படைகள்!

தளம் வேண்டி, களம் காணப்பட்டது.

பின்னால் வருபவர்கள் எப்போதும் வலியவர்களாகவே தானிருப்பார்கள்.

எனவே வரிசையில் அவர்கள் முன்னுக்கு வருவது முறியடிக்கப் படாமலேயே உள்ளது.

வலியவர்களுக்கு வழி விட்டுத்தானே ஆக வேண்டும்?

கொக்குகளே கொத்திக் கொண்டன. வந்தேறிகளில் வலுவானவர் பிரிட்டானியர்களே என்பது நிருபிக்கப் பட்டது. 1795-இல் நன்னம்பிக்கை முனை எனும் 'கேப்' பிரிட்டானியர்களின் பிடிக்குள் வந்தது.

போட்டியாளர்கள் புறமுதுகிட்ட பின், நிலைகொண்டிருந்தவர்களை நெருக்கத் தொடங்கினார்கள். பூர்வீகர்களைப் புறங்கண்ட பூவர்கள் பிரிட்டானியர்களுக்குப் பிடரியைக் காட்டினர். தாக்குதலைத் தாங்கமுடியாமல் மூட்டை முடிச்சுகளோடு முகாம் மாறினர். உட்பகுதியில் ஊடுருவல் செய்தனர். அங்கே பூவர்களை ஆதிவாசிகளின் அம்புகளே அறிமுகப்படுத்திக் கொண்டு வரவேற்றன.

தாக்குதல் தவிர்க்க முடியாததாயிற்று. சூலு மன்னன் திங்கானின் தீரம், தீப்பந்தத்தின் முன் தேனீக்களின் போராட்டம் போலாயிற்று.

பூவர்களுக்குப் புது இடங்கள்.

பூர்வீகர்களே புறங்காட்டினர்.

வந்தேறிகளுக்கே வெற்றி என்பது வரலாற்றுண்மை!

சமைப்பதால் யாருக்கும் வலு கூடுவதில்லை. சாப்பிடுபவர்களுக்குத்தானே வலுவேறும்!

ஆரியர்களைப் போல இடந்தேடி வந்த பூவர்கள் வெற்றிக் காற்றில் இளைப்பாறத் தொடங்கினார்கள். மண்ணின் மைந்தர்கள், மண்ணோடு மன்றாடினார்கள்.

# 3. போர்க் குயில்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டு ... பரங்கியர்களின் ஆசை, பரப்பை அகலப் படுத்திய காலம்.

வானத்து மீன்கள் வந்து மண்ணுக்குள் குடியேறி இருப்பது கண்டு பிடிக்கப் பட்டது அப்போது தான்.

புதைந்துகிடந்த வைரக்கற்களே கண்ணடித்துவெள்ளையர்களின் விழிகளை விரிய வைத்த விந்தை நிகழ்ந்தது.

வைரப் புதையல் வளந்தேடிகளின் ஆசைத் தீயை வளர்க்கும் ஆகுதி யாயிற்று.

கொள்ளை ஆசையால் பூர்வ குடிகளைக் கொலை செய்தனர். அந்தக் குருதி ஈரத்தைப் பயன் படுத்தியே சுரங்கம் தோண்டினார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி காலாண்டுத் தொடக்கத்தில், பிரிட்டனின் பேராசைப் பிடரியைப் பிடித்தாட்டினான் சூலு மன்னன் செடஷ்வா.

''எவர் வெல்வார் எமை?!' என்றே இறுமாந்த பிரிட்டிஷ் படையினருக்கு, ''இதோ நாங்கள் இருக்கின்றோம்,'' என்றனர் சூலு வீரர்கள்.

வெள்ளையர்களை வியர்க்க மட்டுமல்ல, வியக்கவும் வைத்தனர்.

தோல்வி தொடர்கதையாவதை வெள்ளையர் விரும்புவதில்லை. பருத்தியாக வாங்கி அவர்களிடமே அதைத்துணியாக்கி விற்றவர்களல்லவா?

பிரிட்டானியர்கள் எப்பொழுதுமே தோல்வியை நெடுங்கதையாக எழுதுவதில்லை. சிறுகதையாகவே முடித்துக் கொள்வார்கள். எனவே வெற்றி விலகி நின்றாலும்

நெருங்கிச் சென்று நேயம் பாராட்டத் தவறுவதில்லை. சூலு வீரர்களின் சூரத்தனத்தைச் சுடரணைந்த விளக்காக்கிக் காட்டினார்கள்

இந்தியாவில் பாண்டே!

ஆப்ரிக்காவில் பம்பாட்டா!

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் செய்ததை, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆப்பிரிக்காவில் அறிமுகப் படுத்தினார்கள்.

பம்பாட்டா எழுச்சி படுகாயப் படுத்தப்பட்டது. இருபதாம் நூற்றாண்டு எடுத்தடி வைத்த காலம் அது.

ஆப்பிரிக்க ஆதி வாசிகள் வெற்றிக்கு விருந்தளித்து, விடை கொடுத்து, வெள்ளையர்களின் மூகாமுக்கே அனுப்பி வைத்தனர்.

பிரிட்டனின் பேராசை, பேரரசு எனப் பெயர் மாற்றம் கண்டது.

பிரிட்டானியர்களுக்குப் பின் வாங்கக் கற்றுக் கொடுத்தார்களென்ற பெருமையோடு 'சூலு'க்களின் எழுச்சி சுருண்டு விட்டது. ஆனால் மூன்றாண்டுகாலம் தாக்கி நின்ற தைரியம், வரலாற்று வாயிலில் காட்டிய வாழை மரத்திற்கு ஒப்பானது,

தாக்குப் பிடிக்க முடியாத நேரத்தில், தவழ்ந்து வரும் சமாதானத்தைத் தத்தெடுத்துக் கொள்வதே போர்நெறி.

பூவர்களும் போரிட்டுப் பார்த்தார்கள். முடிவில் பிரிட்டானியர்களோடு உடன்பாடே கண்டார்கள்.

உடன்பாடு ஏற்பட்டபோது, இருபதாம் நூற்றாண்டுக்கு வயது இரண்டு.

பிரிட்டானியர் — பூவர் ஒப்பந்த உறவில் உருப்பெற்று வந்ததுதான் ஆப்பிரிக்க ஒன்றியம்.

குற்றாலத்து இடிக்குக் கோயம்புத்தூரில் நெறி கட்டு மென்பது கிராமத்தின் பழமொழி. ஆனால் ஆப்பிரிக்க ஒன்றியத்துக்காகஐரோப்பாவில் பிரிட்டன் பாராளுமன்றத்தில் சட்டம் பெற்றெடுக்கப் பட்டதென்பதோ உண்மை.

கால்களைப் பிணைத்துவிட்டு, ஓட்டப் பந்தயத்திற்கு உற்சாக மூட்டும் (டொமினியன்) குடியேற்ற நாட்டுத் தகுதி தரப்பட்டது.

ஆம்.

பரிதாபத்திற்குரிய நாடாளுமன்ற முறை இப்படியாக அங்கே அரங்கேற்றப் பட்டது.

பட்டாசுக் கட்டில் பாதி வெடிக்காதவை; மீதியில் திரியே இல்லை என்பதற்கொப்ப, தென்னாப்பிரிக்க நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வெள்ளையர்களுக்கு மட்டுமே தகுதி என விதி செய்யப்பட்டது. வாக்களிக்கும் உரிமையும் அவர்களுக்கே. கேப் மாகாணத்தில் மட்டும்விதி விலக்காக வெள்ளையரல்லாத சிலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

இந்த நொண்டி முறைதான் சண்டிகளின் சரித்திர சாதனை! சமத்துவ வேதனை!

இன ஒதுக்கல் என்னும் இளவேனிலின் தொடக்க காலம் அது.

நிற வேற்றுமையை விதைக்க நிலம் பண்படுத்தப் பட்டது.

பொது நீதியைப் பூட்டி வைத்து விட்டுப் புது நீதி புறப்பட்டு வந்தது.

நிற வேற்றுமையின் நீட்டாண்மைக்கு வரவேற்பு வளைவுகள் வடிவமைக்கப்பட்டன.

சிறுபான்மையின் கையில் செங்கோல் தரப்பட்டது.

பிரிட்டானியர் ஆதிக்க அரசியலைத் தென்னாப்பிரிக்க வெள்ளையர்களிடம் மாற்றிக் கொடுத்தனர்.

மதுவில் மாற்றமில்லை. கொள்கலன் தான் மாறியது.

அட்ச ரேகையும், தீர்க்க ரேகையும் கண்ணுக்குத் தெரியாத கற்பனைக் கோடுகள். ஆட்சி மாற்றமும் கறுப்பின மக்களுக்குக் களிப்பைத்தராத மாயத் தோற்றமே. அடிக்கின்ற சாட்டை வெளி நாட்டுத் தயாரிப்பாக இருந்தாலென்ன, தேசியத்தயாரிப்பாக இருந்தாலென்ன?

அந்நிய ஆதிக்க உலகெங்கும் ஊடுருவிய தென்னவோ உண்மைதான் ஆனால்...அடிமைத் தனத்தின் ஆணி வேர் இவ்வளவு ஆழமாக ஊன்றி நிற்பது தென்னாப்பிரிக்காவில் மட்டுந்தான்.

மண்ணுக்குரியவர்களை மாடுகளாகக் கருதினர் வெள்ளையர். ஆயுத வலிமையால் அவர்களை அடிமைப் படுத்தினர். தலையே தரையில் படும்படி குனியச் செய்து கொடுமைப்படுத்தினர்.

உடலை வளைத்தபோதே, சிலர் நெஞ்சை நிமிர்த்தினார்கள்,

## 4. முதுகொம்பு முளைவிட்டது

ஆகாயத்துச் சூரியனை அண்ணாந்துதான் பார்க்க முடியுமென்பதில்லை, குளத்தில் குனிந்தும் பார்க்கலாமல்லவா? உரிமை நினைவு குனிவிலும் வந்தது — வளர்ந்தது.

வெள்ளை உள்ளங்கள். வெண்ணெய் நிறத்தாரை விழித்துப் பார்க்கமட்டுமின்றி, விறைத்துப் பார்க்கவும் தொடங்கின.

"இவர்களுக்கு மட்டும் ஏன்?

நியாய வினா நெஞ்சுகள் நிலை கொண்டது.

கருவுயிர்க்கும்போது தான் கருமேகங்கள் கூடக் கனைக்கின்றன. மோதும் போது தான் முழக்கமிடுக்கின்றன.

கறுப்பர்களின் நெஞ்சில் கனம் ஏறியது. சினம் மீறியது.

புதிய சிந்தனை பூபாளம் பாடிற்று. புரட்சிக்காலைப் பொழுது புலர்ந்தது.

1912-ஜனவரி 8-ஆம் நாள் விடியலில் வெளிச்சச் சாயல் விண்ணில் படர்ந்தது.

ஆரஞ்சு பிரீ மாநிலத் தலைநகர் புளும்ஃபாண்டேனின் மங்குவாங். அங்கே சீமே கூட்டிய அமைப்புக் கூட்டத்தில் தென்னாப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் கூட்டுப்புழுப் பருவம் மாறிக் குளவியாக வெளியே வந்தது.

இந்தியக் காங்கிரசைப் போலவே, இந்தக் காங்கிரசும், தொடக்க காலத்தில் நந்தனார் கீர்த்தனைக் கச்சேரியே செய்தது.

பணிந்து, கேட்பதற்கே துணிவு வேண்டுமென்ற கால கட்டம்.

அம்பேத்காரின் மூல மந்திரத்தில் ஒன்றான, 'ஒன்று சேர்' உருப்பெற்று, உரம் பெற்றிட செயல் வடிவம் காண சிந்திக்கப்பட்டது.

கற்பிக்க வேண்டிய கட்டாயத்தையும் போராட வேண்டிய பொறுப்புணர்ச்சியையும், வெள்ளையர்களே தங்கள் வேப்பங்காய் வினையால் விரைவு படுத்தினார்கள்.

சூழ்ச்சிப் பின்னலாக, சுயநலக் குடையாகச் சுதேசி நிலச்சட்டம்!

இந்த வேதனை அறுவடை ஆண்டு 1913- சட்டத்தின் பெயரால் சதித்திட்டம். அந்தத் திட்டத்தின் பெயரால் நிலப்பறிப்பு.

அருகம் புல்லுக்கு ஆயிரம் வேலியாம். ஆலமரத் திற்கோ ஐந்தடி நிலமாம்.

துரியோதனனுக்குத் தோன்றாத எண்ணங்களெல்லாம் வெள்ளையர் மனக் காட்டில் விளைந்து வந்தது.

நிலங்களைப் பறித்துக்கொண்டு ஒதுக்கிடங்களில் ஒண்டி வாழ அவர்களுக்கு உரிமை (!) வழங்கப்பட்டது.

வளமானதும், வசதியானதும் வந்தேறிகளுக்கு! கழித்துக் கட்டியதே கறுப்பர்களுக்கு! சுளையைத் தின்று விட்டுத் தோலைத் தூக்கியெறிந்தார்கள்; உண்ணுங்க ளென்ற உத்தரவோடு!

ஒண்ட வந்தவர்களுக்கு ஒன்றுக்குப் பத்தென உரிமை செய்து கொண்ட பரங்கியர், கறுப்பர்களின் பாட்டன் சொத்தையே பத்துக் கொன்றெனப் பகிர்ந்தளித்தனர்.

உரிமை உட்கார்ந்தழுதது. நீதியோ நின்று கொண்டே கண்ணீர் விட்டது.

மனித நீதியை மரணப் படுத்துவதில் வெள்ளைக் காரர்கள் வெகுவாக முன்னேறி இருந்தார்கள். மனித நேயமென்பதை அவர்களின் அறியாமைப் பட்டியலில் அட்டவணை இட்டு வைத்தனர்.

## 5. இணை மோனை

நிறத்தால் நமக்கு நெருங்கியவர்கள் ஆப்பிரிக்க மக்கள். எனவே அவர்கள் பட்ட அல்லலில், அனுபவித்த

அநீதிகளில், இன்னல் இழிவுகளில் பங்கேற்கப் பயன்பட்டார்கள் இந்தியர்கள். அடிமையாகப் பிறந்த நாட்டிலிருப்பதைவிட, அந்நிய நாட்டில் அப்படி இருப்பது மேலென நினைத்தார்கள் போலும்!

இந்தியர்கள் ஏற்றுமதியானார்கள். தென்னாப்பிரிக்காவில் ஒப்பந்தக் கூலிகளாக உள்ளே நுழைந்தவர்கள், வெள்ளையர் வீட்டுக் கால்நடைகளாக, முதுகெலும்பு முடிச்சுதனைத் தளர்த்திக் கொண்டு தங்கினார்கள்.

பட்டம் பெற்ற வழக்குரைஞர்களுக்கும், பண்டம் வழங்கும் வணிகருக்கும்; சுரங்கத் தொழிலாளிக்கும் வேறுபாடற்ற விதத்தில், தென்னாப்பிரிக்கக் கறுப்பர்களுக்கிணையாக இந்தியர்களுக்கும் இழிவில் பங்களிக்கப்பட்டது.

நிறவேற்றுமை நெடிதாள முடியாதவர்கள், தும்மலுக்குக்கூட அனுமதி கிடைக்காமல் துன்பப்பட்டார்கள்.

கறுப்பு நிறத்தையே கண்ணுறுத்தலாகக் கருதிய வெள்ளெலிகள், குதிருக்குள்ளேயே குடித்தனம் செய்தன.

கறுப்பர்களின் நிலை அந்தியைப் போல் இருண்டு கொண்டிருந்தது.

புலிகள் பூனைகளாகி, பூனைகள் புழுக்களான புதிய பரிணாம வளர்ச்சி தென்னாப்பிரிக்க மண்ணில். விஞ்ஞானிகளுக்கு விளங்காத விந்தை இது. அரசியல் விஞ்ஞானம் அநாகரிகங்களுக்கே புரியும்.

வெள்ளையர்களின் அழுத்தம் தாளாமல் அழுவதற்காகவே அவதாரமெடுத்தது இந்திய தேசிய காங்கிரஸ். அவலங்களைக் கடப்பதற்காக ஈருருளியாக இரண்டு பேராயங்கள் வடிவமைக்கப்பட்டு வீதிக்கும் கொண்டுவரப்பட்டன. இதன் வழிப் பயணத்தைக் காந்தியடிகளே தொடங்கி வைத்தார்கள்.

# 6. இயக்கங்களின் இளவேனில்

டச்சு வெள்ளையர் — ஆப்பிரிக்க கோய் கோய் இனக் கலப்பும் டச்சு வெள்ளையர் — இந்தோனேசியர் இனக் கலப்பும் ஏற்பட்டுக் கறுப்பு வெள்ளைகளுக்கு இடைப்பட்ட கலப்பினம் ஒன்று ஏற்பட்டது. இந்த இடைநிலை இனத்திற்கும் வெள்ளையர் தங்களுக்கிணையான உரிமைகளைத் தருவதற்கு இசையவில்லை.

''இருப்பவன் தரமாட்டான்-இல்லாதவன் விடமாட்ளான்'' என்னும் 'சுவர்' மொழியைப் போல, அடக்கு முறையை அடக்கிடக் கலப்பினத்தார் கண்டெடுத்த கருவி —இல்லை — ஆயுதந்தான் 'ஆப்பிரிக்க மக்கள் நிறுவனம்'

இதன் தலைவர் டாக்டர் அப்துல் அப்து ரகுமான். ஆளும் வர்க்கத்திற்கெதிரான அணியில் இது ஒரு புது வரவு.

சங்கங்களின் செயல் வளர்ச்சி, கட்சி ஒன்றுக்குக் கால் கோலியது. ஆப்பிரிக்கத் தொழிற் கட்சி 1909 - இல் அவதாரமெடுத்தது. இந்தக் கட்சியும் வெள்ளையர்களுக்கு மட்டுமே வேண்டப்பட்டதாக இருந்தது. கறுப்பர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வதற்கே 1913 - ஆம் ஆண்டு மாநாடு வரை காலங் கடத்தியது.

உறுப்பினராவதற்கே காத்திருக்க வேண்டிய கட்டாய நிலை.

ஆம். முன்னேற்றம் மூச்சு வாங்கியது. அங்கே பொதுவுடைமைக் கொள்கை புகத் தொடங்கியது. பிற் போக்குச் சக்திகளின் பிடரி சிலிர்த்துக் கொண்டது. வயலில் புகுந்த மாடு மேய்வதற்குத் தயங்குமா என்ன?

கட்சிகள் என்றாலே உதிர்வதும் துளிர்ப்பதும் உலக நடைமுறை.

இருட்டுக்குள் வெளிச்சம் இருக்க முடியுமா? இவ்விரண்டும் இணைந்தியங்குவது இயற்கையின் எதிர்ப்பால் இயலாது போனதன்றோ? இது பொதுவுடைமைக்கேற்ற பொருத்தமான உவமை.

பொதுவுடைமைக் கொள்கையாளர்கள் தொழிற் கட்சியைத் துறந்து வெளியேறினார்கள். கொட்டகையை விட்டு நீங்கிக் கோட்டையொன்றைக் கட்டிக் கொண்டார்கள். அந்தக் கோட்டையின் கொள்கைப் பெயர் 'பன்னாட்டுச் சமநீதிக் கழகம்'. இதில் குடியேறிய காலந் தான் செப்டம்பர் 1915.

சமநீதிக் கழகம் ஆதிக்க வெப்பம் தாளாதவர்களுக்கு ஆலமர நிழலாக விளங்கியது. அநீதியின் கன்னத்தில் அறை கொடுக்கும் துணிவும் அதற்கு உண்டாயிற்று.

1916-ஆம் ஆண்டு கூடிய பேராயம் உரிமைகள் கோரி விண்ணப்பம் செய்தது.

இடச்சாரி இயக்கமே என்ற போதும் பொறுமையான, பொறுப்பான புரட்சியில் ஈடுபட்டது. மிருதுவாக இருந்தாலும், உறுதியாக விளங்கும் நைலான் இழைப் புரட்சி அது! உரக்கப் பேசாதவர்களெல்லாம் ஊமைகள் அல்லரே!

## 7. வெளிச்சக் கீற்றுகள்

சமநீதிக் கழகம் ஆண்டவர் நெஞ்சில் ஆணி அடிப்பதைப்போல நீதிக்குக் குரல் கொடுத்தது, வாதிக்கக் கோரிக்கை வைத்தது. ஆப்பிரிக்கத் தொழிலாளர்களுக்கு அரசியலிலும், தொழிற்சங்கங்களிலும் பாகுபாடற்ற பங்கு கேட்டது. வெள்ளையரல்லாதாருக்கான அனுமதிச்சீட்டு [Pass] அநீதியை, அடிமைச் சாயலை அகற்றக் கோரியது.

உள்நாட்டுக்காரர்கள் உழவு மாடுகளாக்கப்பட்டிருந் தார்கள்,

பிணைத் தொழிலாளர் முறையும், அத்தொழிலாளர் களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் 'பட்டி' முறையும் கொடுமையானது, நாகரிகமற்றதென வாதிக்கப்பட்டது.

ஆப்பிரிக்க வானில் விடியலை அறிமுகப்படுத்தும் வெளிச்சக் கீற்றாகச் சமநீதிக் கழகம் ஆப்பிரிக்க ஆட்சி யாளர்களுக்கு அறிமுகமாகி இருந்தது.

சில நிகழ்ச்சிகளின் தாக்கங்கள் மனத்தில் மட்டுமல்ல, இயக்கங்களில் கூடத் திருப்பத்தை ஏற்படுத்த வல்லவை.

1917-ஆம் ஆண்டு நவம்பரில் நடந்த உருஷ்யப்புரட்சி, உலக நாடுகளில் சர்வாதிகாரத்தைச் சாய்க்கும் புயலாக, வீசியது.

மேட்டுக்குடிகளின் ஆதிக்கத் தேர் அச்சாணியை அசைத்துக் கழற்றி எறிந்தது. சுரண்டல் முதலாளி தத்துவ சுயநலப் பயணத்தைச் சுருங்க வைத்து — முடங்க வைத்தது.

தென்னாப்பிரிக்காவிலும் பொதுவுடைமைத் தத்துவப் பொழுது புலர்ந்தது.

சமநீதிக் கழகம் தனது இலட்சியப் பயணத்திற்குக் காலத்திற் கேற்ற, கொள்கைத் தேர் ஒன்றைத் தயாரித்துக் கொண்டது. தோழமை இயக்கங்களின் தோள்களில் கை யைப் போட்டுக் கொண்டு, தனது கொள்கைப் பயணத் தைத் தொடர்ந்தது. கழகம் தனது அறிமுக விழாவைப் பொதுவுடைமைக் கட்சிப் பிறப்பைக் கேப் நகரில் 1921 ஜூலை 30 மற்றும் ஆகஸ்ட் 1-ஆம் தேதிகளில் நடைபெற்ற மாநாட்டின் மூலம் அறிவித்தது.

சிவப்புச் சித்தாந்தத்தினர் கூட அங்கே வெள்ளை நிறத் தையே விருப்பப் பாடமாகக் கொண்டிருந்தனர். கறுப்பு

நிறம் அவர்களுக்குங் கூடக் கசப்பாக அல்ல, கரிப்பாகவே இருந்தது. கறுப்பை இனிப்பாகக் கருதக் காலம் கனிய வேண்டியிருந்தது.

பிறவிச் செருக்கைச் சித்தாந்தச் செழுமையால் கூடச் சீக்கிரம் போக்கிவிட முடிவதில்லை. மன ஆழத்தில் படிந்திருக்கும் அழுக்கை வெளியேற்றுவதென்பது கொள்கைகளுக்கே கூடச் சற்றுக் கடினமாகத்தான் உள்ளது.

தென்னாப்பிரிக்கப் பொதுவுடமைக் கட்சி; தன் மீது வெள்ளையடித்துக் கொண்டிருந்ததையும், கறுப்பை வெறுப்பாக நோக்கியதையும், பிற நாட்டுப் பொதுவுடைமைக் கொள்கை வாதிகளின் கூடாரம் விமர்சன வெளிச்சம் போட்டுக் காட்டிய பின்னரே, அங்கே, நெஞ்சுள் வேர்விட்டிருந்த நிற வேற்றுமை திரும்பிப் பார்த்தது, திருந்தப் பார்த்தது.

தென்னாப்பிரிக்காவின் அடர்ந்த இருட்டுக்கு,அவசியத் தேவையான வெளிச்ச விதை, பொதுவுடைமைக் கொள்கைகள் என்ற திரியில் தளிர்விட்டது.

தென்னாப்பிரிக்காவில் சுரங்கத் தொழிலாளர்கள், ஆடுகளைப் போல் பட்டிகளில் அடைக்கப் பட்டிருந்தார்கள். குடியிருப்புப் பகுதிகளிலிருந்து வெளி வரமுன் அனுமதிபெற வேண்டும். வெள்ளாடுகளாவது வேலியைத் தாண்டுவதுண்டு; கறுப்பர்களோ கட்டுண்டு கிடந்தார்கள். அறத்தின் தோள்களில் ஏறிக் கொண்டு ஆணவம் உலா வந்தது. சக்தி தன்னையறியாமலேயே தண்டனிட்டுக் கிடந்தது.

தொழிலாளர்கள் விதையும் ஓடுமாக இரண்டு படுத்தப் பட்டார்கள்.

இன அடிப்படையில் இரண்டடுக்குகளாக்கி மேல் கீழாக்கப் பட்டார்கள்.

உரிமை மறுக்கப் பட்டவர்கள் உமிகளானார்கள்.

மேல் தட்டு மெத்தையில் வெள்ளையர்கள். கீழ்த் தட்டுத் தரையில் கறுப்பர்கள்.

ஊதிய விகிதத்திலோ வெள்ளையர்கள் விண்மீன்கள்; கறுப்பர்களோ கடல்மீன்கள்!

வசதி வாய்ப்புகளால் வெள்ளைத் தொழிலாளர்கள் நிலைப் பேழையாக (Almirah) நிமிர்ந்து நின்றார்கள். கறுப்பினத் தொழிலாளர்களோ வெற்றிலைப் பெட்டியாக, மடிந்து உழன்றார்கள், எத்தனை ஏற்ற இறக்கம்!

1919இல் தொழில் வணிகத்துறைத் தொழிலாளர்கள் சங்கம் தொடங்கப் பட்டது.

அழுக்குத் துணியால் அழிக்கப்படும் வியர்வை, ஒலி, ஒளிப் பேழையில் உட்கார்ந்து ஊர்வலம் புறப்பட்டது.

தூர்ந்து கிடந்த குரல் வளையின் தூர் வாரப் பட்டது.

ஊதியக் கோரிக்கைகளுக்காக உதயமான தொழில் வணிகத் துறைத் தொழிலாளர் சங்கம் இனவேற்றுமைக் கெதிராகவும் குரல் கொடுத்தது, கடிப்பதற்கென்றான பற்கள் சிரிப்பதற்கும் உதவுவதைப்போல!

ஆடுகளா கனைக்கின்றன என்று ஆதங்கப்படவும், ஆத்திரப்படவும் வைத்த பெருமைக்கு இச்சங்கம் தன்னை உரிமையாக்கிக் கொண்டது.

ஏய்ப்பரும் (முதலாளிகள்) மேய்ப்பரும் (அரசு) இமைகளை வினாக்குறியாகவும் வியப்புக் குறியாகவும் மாற்றிக் கொண்டிருந்தார்கள். தொழிற்சங்கங்கள் ஒன்றுபட்டு அணி வகுத்தன.

இழைகள் இணைந்து முறுக்குக் கயிறு உருப்பெற்றது. இதுவே மூக்கணாங் கயிறாகி விட்டால்? அச்சம் ஆளும்

வர்க்கத்தின், அதன் ஆலவட்டங்களின் மூளையைக் கிளறியது. மூக்கை உறுத்தியது.

'குட்டித் தேளாயினும் கொட்டினால் நஞ்சேறும்' என்பதற்கொப்பத் தென்னாப்பிரிக்காவில் ஆள்பவ ராயினும், தொழிலாளராயினும் தோல் வெளுத்தவர்கள் என்னும் மனப்பாங்கில் மாற்றம் பெறாதவர்களாகவே இருந்தார்கள்.

என்ன இருந்தாலும், வெள்ளையர்கள் இனவேற்றுமை 'இனிப்பில்' மொய்க்கும் ஈக்கள்தான் என்பதை நிரூபித்து வந்தார்கள்.

ஒடுக்கப்பட்ட உரிமைகள்; விலா எலும்பை ஒடித்த வேலை நிலைமை, ஆளுக்கொரு நீதி எனும் ஆரிய மறையின் சாயல் படிந்த ஏற்றத் தாழ்வுகள், நீதிப் பாதையில் நெருக்கமாக விளைந்திருந்த இந்த நெருஞ்சிச் செடிகளின் வேர்க்கால்களை வெட்டி எறியப் பொதுவுடைமைக் கட்சியும், தொழிற் சங்கங்களும் தென்னாப்பிரிக்கத் தேசியப் பேராயமும் நீதிப் போர் புரிந்தன. காந்தியடிகளின் காலடியொற்றிப் பயணப்பட்டுப் பார்த்தன; பயனற்றுத் தோற்றன.

கொம்பு தீட்டிடும் கொழுத்த காளையைக் கம்பு கொண்டுதானே கட்டுப்படுத்த வேண்டும்?

## 8. குட்டிப் புலிகள் எட்டிப் பார்த்தன

1945-ஆம் ஆண்டு!

ஆப்பிரிக்கர்களுக்கு உரிமை அவசியம் என அங்கீகரிக்கப் பட்டு, அதனை அடைந்தே தீருவதென்று ஆயத்தப்பட்ட ஆண்டு.

ஒரே குறை. பாலையைக் கடக்கப் பசுமாட்டின் வாலைப் பற்றிக்கொண்டு பயணம் தொடங்கலாமா?

போராட்ட முறைகளோ இழுத்தால் அறுத்துக் கொள்ளும் இலவம் பஞ்சு நூலாக இருந்தன.

பாடுதான் மிகுந்ததேயன்றிக் காடு கழனியாகவில்லை!

வெள்ளைப் புலிகளின் வேட்டையை நிறுத்த, கறுப்பு ஆடுகள் கனைத்தால் போதுமா? கொம்புகளைக் கொஞ்சமாவது கூர்தீட்ட வேண்டாமோ! அரண்ட நெஞ்சம்! மிரண்ட பார்வை! இது கறுப்பினப் பொதுமக்களின் கள நிலைமை!

மெல்ல மெல்ல; நாட்டுக்குரியவர்கள் நாமே என்ற எண்ணம் அந்தி மல்லிகையாக அரும்பி மலர்ந்தது.

ஆப்பிரிக்கத் தேசியம் என்னும் ஆதவன், கதிர்க்கரம் நீட்டி, வெளிச்ச விழுதுகளால் சோர்ந்து கிடந்த மக்களைச் சொடுக்கி எழுப்பினான்.

ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசு இளைஞர் கழகம், குட்டிப் புலியாக எட்டிப் பார்த்தது! கறுப்பின மக்களின் மனக் காயத்திற்கு மருந்து தயாரிக்கும் மகத்தான தொழிலகமாக இந்தக் கழகம் இயங்கத் தொடங்கியது.

புரையோடிய புண் எங்கே? பூச்சு மருந்தெங்கே? அநாகரிக நடவடிக்கைகளை ஆலமரமாக வளர்த்து விட்டிருந்த வெள்ளையர்களைத் திருத்துவதென்பது இளநீர் பருகும் செயலல்ல.

பெருமை பெறாத, பொறுமையான வழியில் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தது தென்னாப்பிரிக்க தேசியக் காங்கிரசு.

இளைஞர்களுக்கோ எருமை வேகம் எட்டியாக இருந்தது!

புரவி மீதேறிப் புயலாகப் பறக்கவே அவர்கள் ஆர்வப் பட்டார்கள், ஆயத்தப்பட்டார்கள்!

ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசில் புதிய இரத்தம் புகுந்தது.

அமைதி வழிப் போராட்டமே என்றாலும், அது அருவி நடை வேகமுடையதாகவாவது இருக்க வேண்டும்!

குளத்தின் அலையாக, நிலத்தில் புழுவாக இயக்க நடைமுறைகள் இருக்கவே கூடாது!

இளைஞர்களின் எழுச்சி, எண்ண வேகத்தில் மிதவாதத்தைப் பிளந்துகொண்டு பிறந்ததுதான் இளைஞர் கழகம்!

## 9. அறிவாலயமும் அரசியற்களமும்

கல்லூரி நிர்வாகம் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத மாணவப் போராட்ட வீரர் புவியில் எவருமிலர்.

அரசியலில் வெற்றி பெற்றவர்களெல்லாரும் கல்வி நிலையத்திலிருந்து வெளியேறியவர்களாகவும், வெளியேற்றப்பட்டவர்களாகவும் விளங்குவது புதிய மரபின் புரட்சி வடிவமே! நெல்சன் மண்டேலாவும்கூட ஃபோர்ட் ஹரே கல்லூரி மாணவர் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றமைக்காகக் கல்லூரியை விட்டுக் கட்டாயமாக வெளியேற்றப்பட்டவர்தான்!

போக்கிலிகளையும், பொழுது போக்கிகளையும் மட்டுமே கல்லூரி விரட்டல்களால் களங்கப்படுத்த முடியும்; வெளியேற்றத்தால் எதிர்காலத்தை வீணாக்கி விடமுடியும்.

பொறுப்புணர்ந்த புரட்சியாளர்களை — போராட்ட வாதிகளை — இலட்சியப் பற்றாளர்களைக் கல்வி நிறுவனங்கள் கைவிட்டாலும், கல்வியை அவர்கள் கைவிடுவதில்லை. கொள்கைப் பிடிப்புள்ளவர்கள் அறிவாற்றலுக்கு அணுக்கமானவர்களாக இருப்பதால், படிப்பு முடவர்களாக அவர்கள் பவனி வருவதில்லை.

நெல்சன் மண்டேலா விட் வாட்டர்ஸ்ராண்டு பல்கலைக் கழக இளங்கலைப் பட்டத்தை அஞ்சல் வழியிலேயே கற்றுப் பெற்றார்.

சட்டக்கல்வி இளையவர் பட்டமும் இவருக்கு உரிமையாயிற்று!

பாலைவனத்திலொரு பசுந்திட்டாக நெல்சன் மண்டேலா நிமிர்ந்து நின்றார்!

பித்தளையையே பெருமைக்குரியதென்று பேசித் திரியும் பெரும்பாலோருக்குப் பிளாட்டினம் என்றால் என்னவென்றே தெரியாது.

பட்டிழையைப் பார்த்தறியாதவர்கள் கற்றாழை நாரையே கண்ணிமைக்காமல் பார்ப்பதுபோல், போலித் தலைவர்களைப் புகழ்வதற்காக அகராதிகளிலும் நிகண்டுகளிலும் அலங்காரச் சொற்களைத் தேடித் தேடி அலுத்துக் கொண்டிருக்கும் தோழர்களுக்கு மண்டேலா என்னும் மாமனிதனை இங்கே அறிமுகப்படுத்தும் அத்தியாயம் ஆரம்பமாகிறது.

## 10. வைகறைக்கு வரவேற்பு

ரோலிகாலா தலிபுங்கா நெல்சன் மண்டேலா! இருபத்தேழாண்டுக் காலச் சிறை வாழ்க்கைக்குப் பின்

எண்ணம் பின்னப்படாமல், கொள்கையளவில் கொஞ்சமும் குன்றாமல், குலையாமல், நோக்கம் நொடியாமல், எழுச்சி இளைக்காமல், ஆர்வப் பொலிவோடும், கொள்கை வலிவோடும் வெளிவந்திருக்கும் அரிமா! ஆப்பிரிக்க மக்களின் அடிமை இருள் போக்க வந்த ஆதவனின் பெயர் தான் இது.

முதல் உலகப் போர் ஊனப் பட்டு முனகி முடங்கிய காலகட்டம். இருட்டுக் கண்டமென எண்ணித் திருட்டுப் பூனைகள் குடியேறிய தென்னாப்பிரிக்காவில் உரிமை மின்னல் ஒளிக் கோலம் போட்டது!

மனிதனால் மண்ணுக்கு மகத்துவம் ஏற்படுவதுண்டு. போர்பந்தர் காந்தியடிகளாலும், வடலூர் இராமலிங்க அடிகளாலும் பேர்பெற்றவை.

மகத்தான மனித வித்துக்களே புகழ் மணம் பரப்பும் பூக்களைத் தரமுடியும்.

பாரோரர் பார்வையைத் தன் பக்கம் ஈர்க்கக்கூடிய கொள்கைக் கொடிகள், எங்கே பதியம் போடப்படும் என்பதோ, வித்துகள் எந்தத் திசையில் விழுந்து முளைக்குமென்பதோ எவருக்குமே தெரியாது.

தெற்கிலிருந்துதான் தென்றல் வீசும்! கிழக்குத் திசையில்தான் கதிரவன் கண் விழிக்கும். இது இயற்கைச் சட்டம். ஆனால்... உலகத் தலைவர்களின் உதயத்திற்குத் திசை உறுதிப்பாடோ, இதுதான் இடமென்பதோ இல்லை.

மக்கள் தலைவர்கள் மாளிகையிலும் பிறக்கலாம், மண் குடிசையிலும் பிறக்கலாம்.இயேசு பிறந்தஇடம்தொழுவம்! புத்தர் பிறந்ததோ மாளிகையில். தனி மனிதச் சிந்தனை வளமும்; சூழலும், நிகழ்வுகளும் உலகத் தலைவர்களை உருவாக்குகின்றன.

கறுப்பர்களில் மார்ட்டின் லூதர் கிங் மட்டுமே உலகத்தார் உள்ளங்களில் உட்காரும் பெருமை பெற்றவராக இருந்தார். நிகழ்காலத்தில்...?

தென்னாப்பிரிக்கத் தேயத்திற்கும், கறுப்பின மக்களின் தன்மான உணர்வுக்கும் பெருமை சேர்த்திருப்பவர்தான் நெல்சன் மண்டேலா!

அம்தாட்டா மாவட்டத்தில் இம்பாஷேயில் தோன்றிக் குனுவில் வளர்ந்ததொரு குழந்தை! அந்தக் கறுப்புக் கனியை ஆப்பிரிக்க ஆயர் பாடிக் கண்ணனை உலகுக்குக் கொடுத்தது ஹென்றி காட்லா இம்பா கன்யிஸ்வா — நோசக்கேனி ஃபான்னி இணை!

கறுப்பின மக்களின் அடிமை விலங்கை உடைத்தெறியும் உளி ஒன்று தெம்பு அரச குடும்பப் பட்டறையில் உருவாகியிருப்பதையோ, அந்த மனித உளிதான் வெள்ளை ஆணவ ஆட்சிக் குன்றை அணு அணுவாகப் பிளந்தெறியப் போகிறதென்பதையோ 1918 ஜூலை 18 ஆம் நாள் அறிந்திருக்க வில்லை.

உலக உருண்டையில் மானிடராகப் பிறந்து, நாட்டு நடப்பறிந்தவர்களின் நாவெல்லாம் நடை பழகும் பெயர் அந்தச் சிற்றுளிக்குச் சூட்டப்பட்டிருப்பதை அன்று எவரும் பெருமையாகப் பேசவில்லை.

மண்டேலாவின் தந்தை ஹென்றி காட்லா வெண்பா அடிகளைப் போல் நான்கு மனைவிகளைப் பெற்றிருந்தார். மண்டேலாவின் தாய் நோசக்கேனி மூன்றாவது மனைவி.

பன்னிருமக்களுக்குத் தந்தையான காட்லா நோசக்கேனி வழியாக மண்டேலாவையும், மூன்று பெண்களையும் உறவுக் கணக்கில் வரவு வைத்திருந்தார்! புறநானூற்றுத் தாய்புகன்ற 'கல்லளை' யாக நோசக்கேனியின் கருப்பை விளங்கியது. போராட்டப் புலி நெல்சன் மண்டேலா அந்தக் குகையில்தான் வளர்ந்து வந்தார்.

உலகத் தவலவராக உருவெடுப்பவரெல்லாரும் இளமையில் இன்னலை எதிர்கொண்டு வென்று வரவேண்டு மென்பது இயற்கை நியதி போலும்!

மண்டேலாவுக்குப் பத்து வயதாக இருந்தபோது, அவரது தந்தையின் பெயர் காலத்தின் கணக்கில் இறந்த காலத்தில் எழுதப் பெற்றது. ஆனால் அவர் இறக்கும் முன்னரே மண்டேலாவை உருவாக்கும் பொறுப்பைத் தனது உறவுக்காரர் ஜோங்கின்டபா டேவிட் டிலிண்டியா போவிடம் ஒப்படைத்திருந்தார்.

தென்னாப்பிரிக்கப் பூர்விகக் குடிகளில் குறிப்பிடத் தக்க இனங்கள் சூலு, போண்டோ, கோசா மற்றும் தெம்பு. நம்மைப் பிரித்து வைக்கும் நால் வருணங்களைப் போலில்லாவிட்டாலும், பகைமை பாராட்டவும், அந்நியர்கள் நாடு பிடிக்கவும் இந்த நான்கு இனப்பிரிவுகளும் பயன்படாமற் போகவில்லை.

நெல்சன் மண்டேலா இந்த நான்கினங்களில் தெம்பு இனத்தில் பிறந்தவர். அவரை வளர்த்த ஜோங்கின்டபா அந்த இனத்தின் தலைவர்களில் ஒருவர்.

## 11. கல்வி நிலையங்களில் காவியத் தலைவன்

ஆப்பிரிக்க அகரம் நெல்சன் மண்டேலாவுக்கு, குனு தொடக்கப்பள்ளியில் தான் அறிமுகப் படுத்தப்பட்டது.

குக்கிராமங்களில் கல்வி என்பது எண்ணெழுத்து அறிமுகமாக மட்டுமே அமைகிறது. புட்டி என்று குடும்பத் தாரால் அன்போடு அழைக்கப்பட்ட நெல்சன் மண்டேலாவை...அவருடைய தந்தை இறந்த பின் ஜோங்கின் டோபா இம்கொக்கெஸ்வேனிக்கு அழைத்து வந்து தன்னோடு வைத்துக்கொண்டார். அங்கே தொடக்கக்

கல்வி தொடர்ந்தது. பின்னர் கொக்செஸ் வேனி பள்ளியில் சேர்க்கப்பட்டு ஆறாம் வகுப்பு தேர்ச்சி பெற்றார். முதல் கட்டக் கல்வி இத்துடன் முடிந்தது.

அடுத்த கட்டக் கல்விக்காக மண்டேலா என்கோபொவுக்கு அனுப்பப்பட்டார். கிளார்க் பரியில் சேர்க்கப்பட்ட மண்டேலா பள்ளி இறுதி வகுப்பை ஹெல்ட்டவுனில் 1938 ஆம் ஆண்டில் முடித்தார். இதன் மூலம் மண்டேலா கல்லூரிக் கல்விக்குத் தகுதி பெற்றார். நெல்சனின் கல்வி வெற்றியை ஜொங்கின்டபா சிறப்பாகக் கொண்டாடினார்.

அரும்புகளுக்குக் கரும்பாக இனிக்கும் பள்ளிப் பருவம் முழுநிலவைப்போல் முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டது. கோடானு கோடி ஏழைச் சிறுவர்களுக்குத் தொடக்கக் கல்வியே கிடைக்காமற் போவதுண்டு. கள்ளிக் காட்டில் கோவைக் கொடி படர்ந்ததைப்போல், வறுமைக்கும், அறியாமைக்கும் சம்பந்தியாகவும், சகலராகவும் விளங்கிய தென்னாப்பிரிக்கக் கறுப்பின மக்களிடையே நெல்சன் மண்டேலா கல்விச் செல்வராகக் கல்லூரிப்பருவ மெய்தினார்.

ஜெர்மன், உலகப்போர் விதையை ஊன்றியது. விமானத்திலிருந்து வெடிகுண்டு மழை பொழிந்தது. மானுட நேயத்தை ஆதிக்க ஆசை தன் அகண்ட வாய்க்குள் அடக்கிக் கொண்டிருந்த காலகட்டம்! 1939-ஆம் ஆண்டு நெல்சன் போர்ட்ஹரேயில் கல்லூரி மாணவரானார்.

ஏட்டை மட்டும் படித்தவர்கள் பட்டம் பெற்று அரசு அலுவலகங்களில் அணி மணிகளாக அமர்வதும், நாட்டையும் படித்தவர்கள் ஆட்சி பீடத்தை அலங்கரிப்பதும் வரலாற்றுச் சுவரில் வரையப்பட்ட ஓவிய உண்மை!

கல்லூரிகள் அறிவு அரும்பெடுக்கும் முல்லைத் தோட்டம் மட்டுமல்ல. புரட்சி எண்ணங்கள் பூக்கும் பூங்காக்களும் அவைதான்.

மானுடப் பிறப்பில் தன்னலம் வேர்விடாத உன்னதப் பருவம் படிப்புப் பருவம், கல்லூரிக் காலம்!

அநீதியின் அடையாளம் தெரிந்தாலே அதை அழிப்பதற்கும், அடக்குவதற்கும் ஆர்வப்படும், ஆயத்தப்படும் வயது!

பருவப் பெண்களோடு பழகுவதைவிடப் போராட்டங்களோடு கைகுலுக்குவதையே ஒழுக்கமுள்ள மாணவர்களின் உள்ளம் உவந்து ஈடுபடும் காலம், கல்லூரிக்காலம்! முறைகேடுகளோடு மோதிப் பார்ப்பதும், பொது நலனுக்காகப் போராட முனைவதும் காளையர்களின் காலைப் பொழுதான இளமைக் காலந்தான்.

புயல் கடலில் கருக்கொள்வதைப்போல், புரட்சிகள் பெரும்பாலும் மாணவர்களின் மனக்கடலில் ஏற்படும் ஆர்வ அழுத்தத்தால் கருக்கொள்பவை; உருக்கொள்பவை! மாணவர்களின் பங்களிப்பின்றிப் போராட்டமெதுவும் வெற்றி பெற்றதுமில்லை; விளைவை ஏற்படுத்தியதுமில்லை. போராட்ட வரலாறுகளில் புறக்கணிக்க முடியாத வரிகள், பத்திகள் மாணவர்களின் பங்கு பற்றியவையே.

தென்னாப்பிரிக்க மண்ணின் மைந்தர்களின் உரிமைப் போராட்டத்தில் திருப்பு முனையாகத் திகழ்ந்ததும் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்ட காலகட்டந்தான்.

மண்டேலா என்னும் மகத்தான மனிதரின் கல்லூரிக் காலம், வெள்ளைப் போராட்டத்தில் கொஞ்சம் சிவப்பைச் சேர்த்தது. ஆம் புரட்சிப் போக்கு புகத் தொடங்கியது.

1940ஆம் ஆண்டு கல்லூரி புறக்கணிப்புப் போராட்டம். நிறம் கறுத்த நெல்சன் மண்டேலா போராட்டப் புரவியைத் தட்டி விட்டவர்களில் முக்கியமானவர். ''எரிவதை இழுத்

தால் கொதிப்பது அடங்கும்,'' என்ற எண்ணத்தில் சுவாசப்பை விரும்பாத கரியமிலவாயுவைப் போல, கல்லூரி நிர்வாகம் நெல்சன் மண்டேலாவை நினைத்தது. பலன்? கல்லூரி அவர் கால்கள் படக்கூடாத இடமாயிற்று! செய்தியறிந்த ஜோங்கின்டபா நெல்சனை உடன் திரும்பிவருமாறு செய்தியனுப்பினார்.

அடங்கிக் கிடக்கவும், முடங்கிப் படுக்கவும் நெல்சன் என்ன கொள்கை முடவரா? ஜோங்கின்டபாவின் கட்டளையை ஏற்காமல் ஜஸ்டிஸ் என்பவரோடு ஜோஹனஸ்பர்க்குக்குச் சென்றார். அங்கு சுரங்கம் ஒன்றில் ஜஸ்டிசுக்கு எழுத்தர் பணியும், நெல்சனுக்குக் காவலர் பணியும் கிடைத்தன. ஆனால் அது நீடிக்கவில்லை. விரைவிலேயே இருவரும் விலக்கப்பட்டனர்.

நெருக்கடிகள் மனிதனை உருவாக்கும் கிரியா ஊக்கிகள். சுரங்க நிர்வாகம் நெல்சனை வெளியேற்றியிராவிடில், அவர் வால்டர் சிசுலுவுக்கு இவ்வளவு விரைவில் அணுக்கமானவராக-நெருக்கமானவராக ஆகியிருக்க மாட்டார். வால்டர் சிசுலுவின் முயற்சியால் மண்டேலாவுக்குச் சில வணிக நிறுவனங்களில் பணிவாய்ப்பும், அலெக்சாண்ட்ரியா நகரியத்தில் தங்கும் வாய்ப்பும் கிடைத்தன.

## 12. வந்தது வசந்தம்

இல்லறமென்னும் நல்லறப் பல்கலைக் கழகத்தில் 'துணைவர்' என்னும் பட்டம் நெல்சன் மண்டேலாவுக்கு எவிலின் மாசோவால் 1944—ஆம் ஆண்டு ஜோகனஸ்பர்க் ஆணையர் அலுவலகத்தில் வழங்கப்பட்டது. செல்வி எவிலின் திருமதி எவிலின்—நெல்சன் மண்டேலா ஆனார்.

நெல்சன் மண்டேலாவின் சொந்த ஊருக்கருகிலுள்ள என்கோபோ எவிலின் பிறந்த ஊர். இளமையிலேயே பெற்றோரை இழந்த எவிலின், ஜோகனஸ்பர்க்கில் தனது அண்ணனோடு தங்கி உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்தார். பின்னர் அண்ணனும் தங்கையும் தங்கள் தந்தை வழி உறவினரான வல்டர் சிசுலு இல்லத்தில் தங்கினார்கள். இங்கே நெல்சன் மண்டேலா சிசுலுவைச் சந்திக்க வருவார். எவிலின் - மண்டேலா சந்திப்பு முதன் முதல் இங்கே தான் நிகழ்ந்தது.

விழிகள் வழிதிறக்க, காதல் காலெடுத்து வைத்தது. கட்டுடல் காளையும், கவினார் இளம் பெண்ணும் பார்வைப் பரிமாற்றத்தைத் தொடர்ந்து, சந்திப்புச் சங்கிலியால் பிணைத்துக் கொண்டனர்; வாழ்க்கைத் துணையாக ஒருவரையொருவர் இணைத்துக் கொண்டனர்.

இல்லறப் பயன் என்பதே பிள்ளைகளின் பிறப்பென நினைப்பது உலகியல். அந்தப் பயன் எவிலின் நெல்சன் இணைக்குத் தாமதமின்றிக் கிடைத்தது. தெம்பி, மகாசிவே, மக்காத்தோ பிறந்தார்கள். மகள் மகாசிவே ஒன்பதாம் மாதத்தில் பெற்றோரின் கண்ணீர் அஞ்சலியைப் பெற்றுக் கொண்டாள்.

இனிமை நிறைந்த இல்லற வாழ்க்கை இளங்கோவடிகளின் காதையாக நீளாமல், இராமச்சந்திரக் கவிராயரின் தனிப்பாடலாக முடியுமென இவர்கள் இருவருமே எண்ணவில்லை. நெஞ்ச நெருக்கம் கொண்ட இவர்களின் இல்லறத்தில் - நெல்சனின் அரசியல் பணி இடைவெளியை ஏற்படுத்தியது. நெகிழ்வாகத் தொடங்கி விலகலாக முடியுமென்பதைக் கூட அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அரசியல் பணிகளுக்காக அயலூருக்குச் சென்றதையும், வாரக் கணக்கில் வராமலிருந்ததையும் பொறுத்துக் கொண்ட எவிலினால், ஊரார் பேசுமளவிற்கு உருவான புயலைப் பொறுத்துக்கொள்ள முடியாமற் போயிற்று.

நெல்சனின் நெஞ்சத்தில் தான் மட்டுமே இருப்பதாக நினைத்திருந்த எவிலின், அவருடைய அரசியல் பணிக்கும், சட்டக் கல்விக்கும் தனது சம்மதத்தையும், சம்பாத்தியத்தையும் கொடுத்த எவிலினால் வேறு பண், அரசியல் போர்வையுடன் கட்டிலறை வரை காலெடுத்து வைத்ததைக் கண்டு பொறுமையாயிருக்க இயலாமற் போயிற்று.

எவிலின் எய்த ஐய அம்புகளை, நெல்சன் மறுப்புக் கேடயத்தால் தடுத்தார். நம்பிக்கையிழந்த எவிலின், பிரிந்திருந்தால் பரிவு பிறக்குமென எண்ணி நெல்சனைப் பிரிந்து செவிலியர் விடுதியில் தங்கினார். மனம் மாறித் தன்னைத் தேடி வருவாரெனக் காத்திருந்த எவிலினுக்கு மண விலக்கு அறிக்கை தான் நெல்சனிடமிருந்து வந்தது. மாறுதலுக்குட்படாத முடிவெடுத்திருந்த நெல்சனிடமிருந்து பிரிவதொன்றே வழியாக இருந்தது.

வரலாற்றுத் தூணாக நிலைத்திருக்க வேண்டிய இவர்கள் இல்லற வாழ்க்கை, வானவில்லாக மறைந்தது. இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடராக மாறிய அவலம் நிகழ்ந்தது. பிரிவு நிரந்தரமானது.

## 13. நிலையும் நினைப்பும்

ஜோகனஸ்பர்க் வந்த பிறகு தான், குடியேறிகளின் கொடுமையும், அன்னை நாட்டாரின் அவலத்தின் ஆழ அகலமும் முழுமையாக நெல்சன் மண்டேலாவுக்குப் புரிந்தது.

சொந்த நாட்டிலேயே கறுப்பர்களுக்கு அரசியல் உரிமைகள் அடியோடு மறுக்கப்பட்டிருந்தன.

குடி உரிமை கொடுக்கப்படவே இல்லை.

தொழிலாளர்களோ ஒன்று சேர முடியாதபடி தனித் தனி சங்கங்களாகப் பிரித்து வைக்கப்பட்டிருந்தனர்.

நாட்டுக்குரியவர்களின் நடமாட்டத்தைக் கட்டுப் படுத்தும் அனுமதி அட்டைச் சட்டம் [Pass Law] அரங்கேற்றப்பட்டிருந்தது.

தொழிலாளர்களுக்குப் பட்டிமுறை, உழைப்புச் சுரண்டல், ஊதியக் குறைவு!

ஒண்டவந்தவர்களுக்கோ ஒய்யாரப் பகுதி - உரிமை யானவர்களுக்கோ ஒதுக்கிடமான பாண்டுஸ்தான்.

எங்கும் எதிலும் கறுப்பர்களைத் தனிமைப்படுத்தும். ஓதுக்கி வைக்கும் இரட்டை நிலை—இரண்டாம் நிலை இழிவு.

ஓ...! இப்படியொரு கொடூரத் தன்மையின் குடியிருப் பாக வெள்ளையர் உள்ளம் விளங்குகிறதே என வியப்பை விதைத்துத் திகைப்பை அறுவடை செய்தார் மண்டேலா!

அந்த மாமனிதரின் மனம், சூறாவளியை உருவாக்கும் காற்றழுத்த மண்டலமானது. வால்டர் சிசுலு சூறாவளிக்குச் சுழற்சியையும், திசையையும் தெரியப்படுத்தினார். ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசில் மண்டேலா அங்க மானார். ஊருக்குழைக்கும், உரிமைக்குப் போராடும் கொள்கைத் தங்கமானார்.

ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசிடம் சிசுலு, மண்டேலா, ஏ.பி. இம்தா, ஆலிவர் டாம்போ, அந்தோன் லெம்பேது, விக்டர் இம்போபோ, லயோனல் மஜோம் போசி, டேவிட் பொபாப்பே, ஜோர்டன் உன்குபனே, இம்சிகின்யா முதலா னோருக்கு ஆகாத அடங்கிச் செயல்படும் தன்மை இருந்தது.

மின்னலுக்கேன் அன்னநடை? சீயத்தின் பிடரி சிலிர்த் திடச் சீப்பா தேவை?

இளைஞர்களுக்குப் பிடித்தமானது தேயாத தீவிர வாதம்; முடமாகாத முன்னேற்றம்; பதுங்கிப் படுக்காத இலட்சியப் பயணம்.

பார்வையாலேயே பயமுறுத்திடும் போர் முறை இளைஞர்களுக்குப் பசியைத் தூண்டியது.

பாய்வதற்கேற்ற பாங்கில் இளைஞர் கழகம் என்னும் இயந்திரத்துப்பாக்கியை இவர்கள் தான் கண்டுபிடித்தார்கள்.

மிதிக்கவரும் மதகரியைத் துதிப்பதன் மூலம் அடக்க முடியாதென்பதை இளைஞர் கழகந்தான் இடித்துக் கூறியது.

அஞ்சா நெஞ்சும், ஆர்வத் துடிப்பும் கொண்ட அரிமாக்கள் அடிக்கடி கூடிப் பேசினர்; பரபரப்பான செயல் திட்டங்கள் பதியம் போடப்பட்டன. எண்ணங்களை இறக்குமதி செய்யும் சந்திப்புத் துறைமுகத்தில், இந்தப் புரட்சிக் கலங்கள் பொழுது சாய்ந்ததும் நங்கூரமிடும். ஆய்வுகள், திட்டங்கள் அலைகளாகச் சந்திக்கும்.

## 14. உரிமை உணர்வோட்டம்

இளைஞர்களின் தீவிரம் திரட்டித் தந்த பலன் தான் 1945-ஆம் ஆண்டு தேசியகாங்கிரசு இயற்றிய ஆப்பிரிக்க உரிமைக் கோரிக்கை.

ஈர விறகாகப் புகைந்து கொண்டிருந்த ஆப்பிரிக்கத் தேசியக்காங்கிரசின் போராட்ட முறை, சூடுபிடித்துப்பற்றி எரியத்தக்க பக்குவம் பெற்றது. மண்டேலா அணியினரின் மகத்தான பணி, மாற்றத்தைக் கொண்டு வந்தது.

தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் உரிமை முழக்கத்தை உலகின் செவிப்பறையில் இறக்குமதி செய்தன.

கொடுமைத் தேள்களின் கொடுக்குகள் கூர்மை காட்டிக் குத்தி நின்றன.

சட்டபூர்வ வன்முறை தாளக் கச்சேரி, தனி ஆவர்தனம் நடத்தியது. அந்தக் கச்சேரிக்கெல்லாம் காது தராமல், சுரங்கத் தொழிலாளர்கள் ஒரு இலட்சம் பேர் ஏழுநாள்கள் வேலை நிறுத்தத்தின் மூலம் துறைத்தனத்தின் துரைத் தனத்தைத் தூளாக்கிக் காட்டினார்கள்.

இளைஞர் இயக்கத்தின் எழுச்சி இயந்திரம் வேலை நிறுத்தத்திற்கும் வேலை செய்தது.

இன ஒதுக்கலின் நச்சுப்பல் நீளம் இவ்வளவுதான் என்றெண்ணிவிடக் கூடாதென்ற நோக்கில், புதுப்புதுக் கட்டுப்பாடுகள், ஒதுக்குதல்கள், நெருக்குதல்கள் சட்டமாக்கப் பட்டு சந்திக்கு வந்தன.

இந்தச் சட்டங்களைச் சந்திக்க மக்கள் இயக்கமும், மலையை மனமாகப் பெற்று நிமிர்ந்து நின்றது.

எதிர்ப்பியக்கத்தில் ஈடுபட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்காக, அவர்களைக் கவ்விப்பிடித்த சட்டத்தின்பிடியிலிருந்து விடுவிக்கப் பரிந்து வந்து வாதாடினார்கள் நெல்சன் மண்டேலாவும், ஆலிவர் டாம் போவும்.

ஆப்பிரிக்க மக்களுக்குப் பயன்படாமல் பரந்து கிடந்த வெண் மேகங்களுக்கிடையே, இரு திட்டுக்கருமேகங்களாகக் காட்சியளித்தனர், இவர்களிருவரும் வெள்ளையர்களுக்கிடையே சட்டம் பயின்று, இனத்துக்காக வாதாட, வழக்காட வந்தவர்கள் இவர்கள். அதனால்தான் ஒரு முனையில் சட்டமறுப்பு வழக்கில் மண்டேலாவைக் குற்றவாளியாக்கி டிரான்ஸ்வால் வழக்கறிஞர் சங்கமே அவரை வழக்கறிஞர்

பட்டியலிலிருந்து நீக்கி விடும்படி உச்சநீதி மன்றத்திற்கே ஓலை அனுப்பியது,

மறுமுனையில் குழுமப்பகுதி சட்ட'யாளி' தனது முரட்டு வாலைச் சுழற்றி நெருப்புமூச்சு விட்டது. மண்டேலாவும், டாம்போவும் ஜோகனஸ்பர்க் நகரைவிட்டு விலகிக் கறுப்பர் பகுதிக்கே போய்விட வேண்டுமென்ற ஆணை அம்பை அவர்கள் மேல் எய்தன. மனவுறுதி என்ற உரிமைக் கேடயத்தால் அந்தக் கட்டளைக் கணைகளை, ஓலைக் குச்சிகளாக்கி ஒடித்துப் போட்டார்கள் அவர்களிருவரும்,

வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் வால்டர் பொள்ளாக் அவர்கள், மண்டேலாவுக்காக வாதாடி வெற்றியை ஈட்டித்தந்தார். ஆம். உச்ச நீதிமன்றம், வழக்கறிஞர்களின் விரும்பத்தகாத விண்ணப்பத்தை எச்சில் இலையாக எடுத்தெறிந்து விட்டு, மண்டேலாவின் கழுத்தில் மாலையைப் போட்டது. விண்ணைப் பார்த்துக் கொண்டு வேண்டுகோள் விடுத்த வெள்ளை வழக்கறிஞர்கள், மண்ணைப் பார்த்துக் கொண்டு மனம் தளர்ந்து திரும்பினார்கள்.

1947-ஆம் ஆண்டு இந்தியர்களால் மட்டுமல்ல, ஆப்பிரிக்கர்களாலும் மறக்க முடியாதது. இந்த ஆண்டில்தான் ஆப்பிரிக்கர்கள் சார்பில் ஏ.பி. சூமாவும், தென்னாப்பிரிக்க இந்தியர்கள் சார்பில் ஒய்.எம். நாயுடு மற்றும் ஜி.எம் நாய்க்கரும் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டனர். இதன் விளைவு 1950 ஆம் ஆண்டு மே நாளில் டிரான்ஸ்வால் மாநிலத்தில் பொது வேலை நிறுத்தம் வெடித்து விரிந்தது.

வேலை நிறுத்தத்தை வீழ்த்திடத் துரைத்தனம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பதினேழு உயிர்கள் பறிக்கப்

பட்டன. போராட்டச் சூழ்நிலை தேசிய இயக்கங்களை ஓரணியில் திரட்டி நிறுத்தியது. கூட்டுக் குரல், வேட்டு அரசின் பற்ற வைக்கும் பார்வையில் பனிப்பொழிவா யிற்று. இது காலம் போட்டுக் கொடுத்த கணக்கு.

பதினேழு உயிர்களைப் பறித்துக்கொண்டதோடு அமைதி பெற்று விடவில்லை ஆணவ அரசு. அடுத்த கொலையாகத் தென்னாப்பிரிக்கப் பொதுவுடைமைக் கட்சியைத் தடைசெய்தது. எனவே இந்தக் கொலைகளை எதிர்த்து அதே ஆண்டு ஜூன் 26-ஆம் நாள் பொது வேலை நிறுத்தம் எனும் போர்ப்பிரகடனம் செய்யப்பட்டது,

எந்த பொதுவுடைமைக் கட்சியை ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரசு இளைஞர் கழகம் வெறுத்ததோ, பேராயத்திலி ருக்கும் பொதுவுடைலம வாதிகள் போய்விட வேண்டு மென்றதோ, கொள்கை ஊடுருவல் காரர்கள் என்றும், பொதுவுடைமைக் கொள்கை அந்நியரின் இறக்குமதி என்றும் புகன்றதோ அந்தப் பொதுவுடைமைக்கட்சி தடை செய்யப் பட்டதற்காகப் போராட்டம் நடத்தப்பட்டது. அரசியலிலும் காயிலே புளித்துக் கனிந்தபின் இனிக்கு மென்பது உறுதியாயிற்று. இந்தப் போராட்டநாள், ஆப்பி ரிக்கச் 'சுதந்திர நாள்' எனும் பேறுபெற்றது. பீடுபெற்றது.

1952-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26-ஆம் நாள்.

ஆப்பிரிக்க விடுதலை நாளாக அங்கீகரிக்கப்பட்ட அந்த நாளில், இன ஒதுக்கல் சட்டக் கழிவுகளை அடித்துச் செல்லும் சட்டமறுப்பு இயக்கமெனும் போராட்ட வெள்ளம் புரண்டு வந்தது. பதினெட்டு மாத காலம் நடை பெற்ற இந்தப் போராட்டக் காலத்தில், தொண்டர்படைத் தலைவர்களாகக் களத்தில் நின்றார்கள் நெல்சன் மண்டே லாவும், மௌல்வி கச்சிலியாவும். போராட்ட ரதசாரதி யாம் நெல்சன் மண்டேலாவுக்கு 'ஒன்பது மாத சிறை' விருதாக வழங்கப்பட்டது,

இயக்கத்தின் எரிபொருள் மண்டேலா; தென்னாப்பிரிக்க அரசோ அவரது நடைக்குத் தடைபோட்டன; நாவுக்கு வேலி கட்டியது.

ஆப்பிரிக்கத் தேசியக்காங்கிரசின் டிரான்ஸ்வால் மாநிலக் கிளைத் தலைவரான மண்டேலாவை ஜோகனஸ்பர்க் நகரைவிட்டு நகரக் கூடாதென்றும், பேராயம் தொட்டு எல்லா இயக்கங்களிலிருந்தும் விலகிவிட வேண்டுமென்றும் கூறியது அரசு. இது காவிரி வெள்ளத்தைக் கண்ணாடிக் குடுவையில் அள்ளமுயலும் அறிவீனச் செயலாகவே ஆனது.

மண்டேலாவுக்கு முன் இந்தப்பொறுப்பை வகித்த ஜெ.பி. மார்க்ஸ் என்பருக்கும் தடைவிதிக்கப் பட்டிருந்தது. அரசின் தடை ஆணை இயக்கவாதிகளுக்கு இனிப்புடன் பரிமாறப்படும் விருந்துணவு என்பதை வெள்ளையர்கள் உணராமற்போனது வியப்பே!

1953-ஆம் ஆண்டு ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரஸ் மாநாடு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். அது டிரான்ஸ்கால் மாநில மாநாடு. தலைவர் நெல்சன் மண்டேலா. அவருக்கோ தடை. மாநாட்டில்மண்டேலாவின் குரல்தான் ஒலிக்கவில்லை. எண்ணம் எழுத்தாகி மாநாட்டு மேடை ஏறியது. ஆப்பிரிக்கப் புறநானூற்றின் அரங்கேற்றம் அங்கே நடந்தது. விடுதலையுணர்வு வீணை நரம்புகளில் அதிர்வு அலைகளை ஏற்படுத்தியது, படிக்கப்பட்ட அவருடைய மாநாட்டுரை உறுப்பினர்களின் உள்ளக்கிளர்ச்சியை உசிப்பிவிடும் பரணி பாடலாயிற்று.

கறுப்பு மனிதர்களின் நெஞ்சில் சிவப்பு சிந்தனையைக் கிளறிவிட்டது.

சுருண்டும், மிரண்டும் கிடந்தவர்களைத் திரண்டெழச் செய்தது!

கட்டுண்டு கிடந்தவர்களின் கால்களுக்குப் புது ரத்தம் கொண்டு செல்லும் நாளங்களாயின, அவருடைய சொற் றொடர்கள். ஆம் படிக்கப்பட்ட உரை மக்கள் நெஞ்சில் பதிக்கப்பட்டது.

## 15. சோகைக் கல்வித்திட்டம்

தமிழ்நாட்டின் முதல்வராகத் திருவாளர் இராசாசி அவர்கள் இரண்டாம் முறையாகப் பொறுப்பேற்றிருந்த போது, புதியதொரு கல்வித் திட்டத்தைப் புகுத்தினார். இது குலக்கல்வித் திட்டமென்ற திருப்பெயரைச் சூட்டிக் கொண்டு வந்தது. இதன் நன்மை, தீமைகளைப் பகுத் துணர்ந்த தந்தை பெரியாரவர்கள், இத்திட்டத்தைத் தீவிரமாக எதிர்த்தார்கள். தி.மு.கழகமும் பொது மக்களும் காட்டிய தீவிர எதிர்ப்பால் இத்திட்டம் திரும்பப் பெறப் பட்டதோடு இராசாசி அவர்களும் பதவியிழந்தார்கள்.

தமிழகத்தில் குலக்கல்வித் திட்டம் பிறப்பெடுத்த அதே காலகட்டத்தில் தென்னாப்பிரிக்க வெள்ளையரசும் ஒரு சோகைக் கல்வித் திட்டத்தை நுழைத்தது. பாண்ட்டு கல்வித் திட்டமெனும் இக்கல்வித் திட்டத்தை ஆப்பிரிக்க தேசியக் காங்கிரசு எதிர்த்துப் போராடியது-

நுழைக்கப்பட்ட நோய்க்கல்வித் திட்டத்தை, ஆப்பிரிக் கர்களை என்றென்றும் எடுபிடிகளாகவும், இரண்டாந்தரக் குடிகளாவும் இருக்கச் செய்யும் எலும்புருக்கி நோய்க் கல்வியை எதிர்க்கப் பெற்றோர்களோடு ஆசிரியர்களும் களத்துக்கு வந்தார்கள், ஆம். பழுதான பாண்ட்டு கல்வி நிலையங்களைப் புறக்கணிக்கும் அறப்போர் அங்கே ஆரம்பமாயிற்று.

ஆமைகளாவும், ஊமைகளாகவும் ஆப்பிரிக்க மக்கள் அடங்கிக் கிடந்த காலம் கப்பலேறிவிட்டது என்பதை வெள்ளையர்களுக்கு இந்தப் போராட்டத்தின் மூலம் உணர்த்தினார்கள்.

## 16. விரும்பத்தக்க விளைவுகள்

உரிமைப் போராட்டத்திற்கு உந்து சக்தியாக உருவெடுத்தது தென்னாப்பிரிக்கத் தொழிற்சங்கப் பேராயம். தொழிற்சங்கங்களிலும் தோல் நிறப் பாகுபாடா என்ற வினாவின் விளைச்சல் இந்த அமைப்பு. அரசியல் விடுதலை அணியில் புதிய ஆயுதப்படையாக இது புகுந்தது.

இழைகளைச் சேர்த்துக் கயிறாகத் திரிக்கும் ஏற்பாடும் நடந்தது,

மக்கள் பேராயம் என்னும் மகத்தான சக்தி தேர் வடமாகித் தெருவுக்கு வந்தது. ஒப்புரவு உருவாகி வருவதைக் கண்டு மருண்டு போன தென்னாப்பிரிக்க அரசு, 1955-ஆம் ஆண்டிறுதியில் நாற்பத்தெட்டு தென்னாப்பிரிக்கக் காங்கிரசு தலைவர்களுக்குத் தடை விதித்தது.

1956-ஆம் ஆண்டு ஜூன் 25, 26-ஆம் நாள்களில் கிளிப்டவுனில் உரிமைத் தேரின் ஊர்வலம். உருவாக்கியவர்கள் மண்டேலா உட்பட எவரும் பங்கேற்க முடியாதபடி அவர்களுக்கெல்லாம் தடை. எனினும் விடுதலை நோக்கம் (சுதந்திரசாசனம்) வெளியிடப்பட்டது. நான்கு பேராயங்களின் கூட்டு முயற்சியால் நடந்த மாநாட்டின் ஆக்கமாகப் போராட்ட நோக்கமாகக் கொள்கை அறிவிப்புக் கொடி ஏற்றப்பட்டது.

விடுதலை நோக்க வெளியீட்டை அரசத் துரோகமென ஆவேசப்பட்டது ஆட்சி. ஊறு விளையப் போவதை

உணர்ந்தது. ஒடுக்குமுறைப் படகில் இனியும் ஒய்யாரப் பயணம் போக முடியாதே என அஞ்சியது. எனவே சட்டத்தைக் காட்டிக் குற்றத்தைச் சுமத்தியது. (operation T) 'டி' நடவடிக்கை தீவிரமானது. நூற்றைம்பத்தாறு பேர் கைது செய்யப்பட்டார்கள், மண்டேலா மறக்கப்படவில்லை. மற்ற தோழர்களையும் தொடாமல் விடவில்லை. வழக்கு நடந்தது. பொறுப்பில் வெளியே வந்தார்கள்.

## 17. உறவு மலர் பூத்தது

வழக்குக்கு வயதாகிக் கொண்டு வந்தது. விசாரணை விழுதாக இழுக்கப்பட்டது. அவசரக்காரனாக இருந்தால் ஐந்து பிள்ளைகள் கூடப் பெற்றிருப்பான், வழக்கு நடந்த காலத்தில். இக் கால கட்டத்தில் பிசானா என்ற சிற்றூரிலிருந்து, உறவுக்குக் கை கொடுக்கக் கறுப்புக் குயிலொன்று ஜோகனஸ்பர்க் நகருக்குப் பறந்து வந்தது.

சமூக நலப்பணிக்காக வந்த வின்னி என்னும் அந்த நாவற்பழத்தை, தன் உறவுக் கனியை ஆலிவர் டாம்போ, நெல்சன் மண்டேலாவுக்கு நாகரிக நடைமுறைகளின் படி அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஒத்த பண்பினர் பழக நேர்ந்தால் நேயம் நெருக்கமாவதும், அன்பு அரவணைப்பதும் இயற்கை. சமூகத் தொண்டரான வின்னி, சமுதாய விடுதலைப் போராட்ட வீரரான மண்டேலாவின் பண்பு நலன்களில் மனத்தைப் பறிகொடுப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

மங்கிப் போகாத மனவுணர்வு, உடலைக் கடந்த உள்ளப் பிணைப்பு அவர்களிடையே அரும்பி மலர்ந்தது. நெஞ்ச நெருக்கம், காதலெனும் கவிதைப் பெயர் பெற்றது. உலகியல் எழுதியுள்ள உரைப்படி, அவர்களது நட்பு

முதிர்ச்சி, எண்ணச் சேர்க்கை. கொள்கைத் தொடர்பு, உள்ள உறவு காதலென்ற கவின்மிகு பட்டத்தைப் பெற்றுக்கொண்டது.

மணமேடை, அவர்களுக்காக மாலையுடன் காத்திருந்தது. 1958-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் பாண்டோலாந்திலுள்ள வின்னியின் இல்லத்தில் திருமணச் சடங்கின் முதற்பாதி முடிந்தது, மறுபாதிச் சடங்கு முடியும் முன்னரே மண்டேலா சிறைப் பறவையாக்கப் பட்டுவிட்டார். அந்தச் சடங்கை முடிக்க இருபத்தேழாண்டுக் காலம் காத்திருக்க நேருமென அவர்கள் நினைக்கவே இல்லை. இந்த நிலையில் தான் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஏமாற்றமில்லா எதிர்பார்ப்புகளோடு கரம்பற்றினர்.

மண்டேலாவின் மனப் பாங்கை வின்னி தெளிவாக அறிந்து வைத்திருந்தார். குறுகிய குடும்ப வளைக்குள் குடியிருக்க மண்டேலா சுயநல எலியல்ல என்பதும், அவர் ஒரு கொள்கைச் சிங்கம் என்பதும் வின்னிக்குத் தெரியும்.

நாடு, மக்கள், உரிமைப் போராட்டம் என்னும் மூன்று புள்ளி ஆயுத எழுத்தே மண்டேலா. பந்தமென்ற பட்டு நூலால், அவரைக் குடும்ப முளையில் பிணைக்க முடியாதென்பதைச் சரியாகவே தெரிந்து வைத்திருந்தார் வின்னி, அதனால்தான் மண்டேலாவின் அன்பகத்தில் குடியேறி, அவரோடு ஒத்துப் போக முடிந்தது. அவருடைய போராட்டப் பாதையில் விரிக்கப்பட்ட சிவப்புக் கம்பளமாக விளங்கினார் வின்னி.

இளமைக் கனவுகள், இல்லறக் கடமைகள், குடும்ப நலன், அமைதியான வாழ்வு என்ற நாற்படைகளை அனுப்பி, மண்டேலாவின் மக்கள் தொண்டை முறியடிக்க முனையாதவர் வின்னி. மாறாக, போராட்ட வாழ்க்கையில் மண்டேலாவுக்கு வின்னியும் ஒரு போர்க்கருவியாகி உதவினார்.

வின்னி, மண்டேலாவுக்கு இசைவான-இனிமையான, தூண்டுதலான, தோழமைக்குகந்த துணையாகத் திகழ்ந் தார். தன்னைவிட ஆப்பிரிக்க மக்களின் நலவுரிமையே பெரிதென்றெண்ணினார். தனது குடும்பத்தைவிட ஆப்பிரிக்க நாட்டின் பெருமையும், உரிமையும் பாதுகாக்கப் படவேண்டியவை என உளமார உணர்ந்திருந்தார். எனவே மண்டேலாவை மக்கள் பணிக்கு உரிமை யாக்குவதில் குறுக்கிட்டு உரிமைப் பங்கு கோரவில்லை.

மக்கள் தலைவனுக்கு மனைவியாக இருக்கக் கூடிய தகுதி தனக்குள்ளதென்பதை வின்னி வெகு தெளிவாக நிரூபித்துள்ளார்.

மலருக்கு மரத்தின் வலு இருக்குமா? உண்டு என்பதை உலகுக்கு நிரூபித்துக் காட்டியவர் வின்னி. கணவர் கடுஞ் சிறையில் ஆயுள் கைதியாக அடைக்கப்பட்டிருந்த போதும், வாடாத பொற்றாமரையாக வாழ்ந்து காட்டியவர். தடை களாலும், சிறைத் தண்டனைகளாலும் அந்தக் கொள்கை முகையைக் கொடுமைப்படுத்திய போதும் இதழ்கள் இற்று விழாமல் மலர்ந்து சிரித்த மல்லிகை அவர். இந்த மனித மல்லிகை மணத்தை நுகரும் நேரத்தில், அதன் வேரையும், விளைச்சல் களத்தையும், நிலத்தையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமல்லவா?

# 18. கறுப்பு நிலவின் கதை

''மங்கையராகப் பிறப்பதற்கே — நல்ல
மாதவம் செய்திட வேண்டு மம்மா!''

வின்னி என்னும் வெற்றிச் செல்வியின் இளமைச் செய்திகள் சில இங்கே நெய்யப்பட்டுள்ளன.

தென்னாப்பிரிக்காவிலும் தென்னகத்தின் வழக்க வார்ப்பு தெரிகிறது.

உற்றார் உறவினர் உயிர் நீத்தால் ஆற்றாமையை, துயரத்தைத் தோளில் கைபோட்டு உட்கார்ந்தழுது, பகிர்ந்து கொள்வது அங்குள்ள பெண்களுக்கும் அறிமுக மாகியிருக்கிறது.

சோகச் சுமை தாளாமல் துவண்டு போகும் இதயத்தை அழுகின்ற போதே மார்பில் அடித்துக் கொள்வதன்மூலம் தட்டி எழுப்புவதும் ஆப்பிரிக்க ஆதிவாசிகளுக்கு ஒன்றும் அந்நியமானதல்ல.

பிள்ளைப்பேறும், பெண் என்றால் வேண்டாமெனும் நெருடல் நினைப்பும், அங்கும் ஆழமாகப் பதியம் போடப் பட்டிருக்கிறது.

இலக்கியத்தால் ஏற்றப்படும் பெண்களைச் சமூகச் சட்டம் எவ்வளவு கொடுமைப் படுத்துகிறது?

சூண்டு மல்லிகையைக் கண்டு மருளும் சமூகப் பேதை மையை என்னென்பது?

பிறந்தது பெண்ணாக இருந்துவிட்டால் கழுத்தை நெறித்துவிடும் கரங்கள் ஆப்பிரிக்காவிலும் அங்குமிங்கு மாக உண்டு.

பிழையான எண்ணங்களும், அறியாமை அழுக்குகளும் இருக்கை போட்டுக் கொண்டு இறுமாந்திருக்கும் ஆப்பிரிக்க மண்ணில்தான் வின்னி என்னும் புரட்சி மலர் பூத்தது.

கட்டில் சுகமும், தொட்டில் உறவும் மட்டுமே இல்லறக் கடமை என்றெண்ணும் பெண்களுக்கிடையே, மக்களுரிமை யும் — நாட்டு நலனும் கூட இல்லறக் கடமைதான் என்ப தைத் தனது வாழ்க்கைமூலம் உலகுக்கு உணர்த்தியவர் தான் வின்னி.

தென்னாப்பிரிக்காவில் டிரான்ஸ்காம் என்பது ஒரு மாநிலம். அதில் பிசானா ஒரு மாவட்டம். அந்தப் பகுதியின் ஆதிக்க இனம் போண்டோ. அந்த இனத் தலைவர்களில் ஒருவர் தான் வின்னியின் பாட்டனார் மசிங்கி.

சமுதாயத்தில் பெரிய மனிதர்களென்றால் ஒழுக்கக் கேட்டின் உச்சியின் உட்கார்ந்திருக்க வேண்டுமென்பது. அறியாமை அரசோச்சும் பாமரப் பகுதியின் பழக்கம். இது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒழுங்கீனம், நமது புராண, இதிகாச நாயகர்களெல்லாரும் பலதாரத் தலைவர்களாகத்தானே பவனி வந்திருக்கின்றார்கள்! மசிங்கிக்கு இருபத்தொன்பது மனைவிகள். இவர்களுள் மூத்தவரான செயினாதான் வின்னியின் தந்தையான கொகனியை ஈன்றதாய். கொகனியின் மனைவி நொமதம்சங்கா.

வின்னி சிறுமியாக இருந்தபோது வீட்டில் தொல்லை தருபவராக இருந்தார். உடன் பிறப்புகளிடமிருந்து இவர் உதைத்தார், அடித்தாரென்ற புகார்கள் அன்னையின் காதுகளில் அடிக்கடி மோதியதால் வின்னி, அன்னையின் கண்டிப்புகளும், தண்டிப்புக்கும் அடிக்கடி ஆளாகி வந்தார்.

வின்னிக்கு ஆறுவயதானபோது கல்வி விளக்கு அவர் கையில் கொடுக்கப்பட்டது, தந்தை பணியாற்றிய பள்ளியே வின்னியின் தொடக்கக் கல்விக்குத் தாயகமாயிற்று. மூன்றாண்டுகளுக்குப் பின்னர் கொகனி இம்பங்கேனிக்கு மாற்றப்பட்டார். வின்னியும் கல்வி விளக்கோடு தந்தையின் நிழலாகத் தொடர்ந்தார். இந்தக் கால கட்டத்தில் நொமதம்சங்கா தன்னைத் தொட்டுத் தொடர்ந்த நோயிடம் தோற்று, இறப்பை ஏற்றுக்கொண்டார். அவருடைய கடைசி பிஞ்சுக்கு, வின்னியின் மடியே துஞ்சும் மஞ்சமாயிற்று. சோகம் சூழ்ந்த அந்தக் காலகட்டத்தில் தந்தையோடு தங்கியிருந்தவர் வின்னி மட்டுந்தான்.

தாயிடம் பெற முடியாமற்போன பாசத்தை வின்னி தந்தையிடம் அறுவடை செய்து கொண்டார். கோகனி

தன் மகள் வின்னியிடம் வைத்திருந்த அன்பு இருவருக்குமே இதமாக இருந்தது.

வின்னி ஆறாம் வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்றதும் எம்பண்டிங்வேனிக்குத் தங்கிப் படிக்க அனுப்பப்பட்டார். அங்கே மூன்றாண்டு படிப்பு முடிந்தது. மெட்ரிக் படிப்பதற்காக ஷாபரியில் சேர்க்கப்பட்டார். இந்தக் கால கட்டத்தில்தான் சோன்க் (Zonk) இதழ் மூலம் ஆப்பிரிக்க தேசியக் காங்கிரசைப் பற்றித் தெரிந்து கொண்டார். வின்னியின் தோற்றப் பொலிவும், உடல் வளமும், சுறு சுறுப்பும் கண்டோர் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக இருந்ததே அவருக்குச் சில நேரங்களில் இன்னலை ஏற்படுத்தியது.

வின்னி முழுவளர்ச்சி பெறும் முன்னரே மணம் புரிய அச்சாரம் கொடுக்கவந்த ஆட்களுமுண்டு! கோட்சோ என்னும் பணக்காரன் பத்து ஷில்லிங் முன் பணத்தை வலிந்து திணித்தானாம். இது நடந்தது மாணவிகள் சுற்றுலா சென்ற வழியில்.

வின்னி வயதுக்கு மீறிய வளர்ச்சி பெற்றதும், விரைவிலேயே பருவமெய்தியதும், வளமான தோற்றத்தைப் பெற்றிருந்ததும் அவருக்கு வருத்தத்தைக் கொடுத்தது. இதே கவலையால் அவருடைய கல்வியின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டுத் தந்தை கடிந்து கொள்ளவும் நேர்ந்தது. இவருடைய வனப்பும், வாளிப்பும், பலவீனமான ஆண்களைப் பாதிப்புக்கும் உள்ளாக்கின. இவர் பயின்ற பள்ளியின் துணைத் தலைவரே கெட்ட நோக்கத்தோடு இவரை நெருங்கி அவமானப்பட்டதுமுண்டு.

1952–ஆம் ஆண்டு மெட்ரிக் தேர்ச்சி பெற்ற வின்னியை மேற்படிப்புக்காகப் போர்ட் ஹரேவுக்கு அனுப்பி வைக்க ஆசைப்பட்டார் தந்தை கோகனி. ஆனால் அங்குப் பயின்று திரும்பியிருந்த உறவினரின் கூற்று அவரைச்

சிந்திக்க வைத்தது. போர்ட் ஹரேயில் படிக்கும் பையன்கள் எப்பொழுதும் பெண்களைச் சுற்றிக் கொண்டிருப் பார்கள். அங்கு வின்னியை அனுப்புவது பஞ்சைச் சுற்றிக் கொண்டு நெருப்பணைக்க நினைப்பதற்கொப்பாகும் என்பதே உறவினர் செய்த எச்சரிக்கை.

எனவே மாற்று ஏற்பாடு சிந்திக்கப் பட்டது. ஜான் கோப்ஃமையர் சமூகப் பணிக்கான பள்ளியில் வின்னி சேர்க்கப்பட்டார். இந்த ஏற்பாட்டுக்குக்கூடப் பாட்டி மக்குலுவிடமிருந்து எதிர்ப்பு எழுந்து வந்தது. அந்தப் பள்ளியிலும் வின்னிக்கு எத்தனை காரணப் பெயர்கள்?

துணிவான, துடுக்கான செயலுக்காக 'லேடி டார்சான்' என்றும், எடுப்பான மூக்குக்காக 'பைடு பைப்பர்' என்றும், வட்ட முகம் காரணமாக 'காமண்டோ ரௌண்டு' என்றும், நேர்மை, உறுதி காரணமாக 'ஸ்டெடி பட் சுயூர்' என்றும் உடன் பயின்றவர்களால் மறைமுகமாகச் சுட்டப் பட்டார்.

சமூகப் பணிக்கல்வி முடிந்தது. பரத்வநாத் மருத்துவ மனையில் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட பணியிடத்தில் வின்னி பொறுப் பேற்றுக் கொண்டார். ஜோகனஸ்பர்க்கில் எழுத்தராகப் பணியாற்றிக் கொண்டே படித்து வந்த பேர்னி சாம்ப்சன் வின்னியின் நண்பரானார். நெல்சன் மண்டேலாவைச் சந்தித்திராவிடில், வின்னி சாம்ப்சனைத் தான் மணந்திருப்பார்.

மருத்துவ மனை துணைத் தலைவர் கே.டி. மட்டான் சிமா என்பவர் கூட வின்னியைத் தனது இரண்டாவது மனைவியாக்கிக் கொள்ள முன்வந்தார். வின்னி நெல்சனை மணந்து கொள்ளப் போவதாகக் கூறியதும் சாம்ப்சன் தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டுவிட்டார். வின்னி தான் அவரை மருத்துவமனையில் கண்காணித்து, சாம்சனின் சகோதரியின் பாதுகாப்பில் விட்டு வைத்தார்.

நெல்சன் — வின்னி நெஞ்சங்கள் நெருங்கி இருந்தன. ஒருவர் நலனில் ஒருவர் அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்தனர். ஒரு சமயம் பாண்ட்ரு மாந்தர் சமூக நிலையத்தில் ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசு வளர்ச்சி நிதிக்காக நாட்டிய நிகழ்ச்சி நடந்தது. எதிர்பாராத நிலையில் நிகழ்ச்சியில் வன்முறை தலையெடுத்தது. கத்திகள் நீண்டன. துப்பாக்கிகள் வெடித்தன. நிகழ்ச்சிக்கு வந்திருந்த வின்னி மேசைக்கடியில் பதுங்கினார். அவருக்கு அருகே நெல்சன். விரைந்து செயல்பட்டு வின்னியின் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு தனது காருக்குக் கொண்டு வந்து காப்பாற்றினார்.

நெல்சன் மண்டேலாவை மணப்பதென்ற மாற்ற முடியாத முடிவுக்கு வந்தார் வின்னி. குத்துச் சண்டைவீரர் தோற்றத்திலிருந்த புகைப்படம் ஒன்றைத் தனது சிற்றன்னை ஹில்டாவிடம் காட்டினார். ''இவர் என்னை மணந்து கொள்ள விரும்புகின்றார். நானும் அவரையே மணந்து கொள்ள விரும்புகின்றேன்'' என்றார்.

படத்தைப் பார்த்த சிற்றன்னை, ''இவர் ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரஸ் மண்டேலாதானே? என்றார்.

'ஆம்.' என்று தலையசைத்தார் வின்னி.

''உனக்கென்ன பைத்தியமா? இந்த மனிதர் டிரைசன் வழக்கில் தண்டனைக்காகக் காத்துக் கொண்டிருப்பவரல்லவா? இவருக்குச் சிறை வாழ்க்கை இன்றோ நாளையோ என்றிருக்கிறது. போராட்டத்தை மணந்து கொண்டிருக்கும் இவருக்கு வாழ்க்கைப்பட்டு என்ன இன்பத்தைக்காணப் போகிறாய்? முடிவை மாற்றிக்கொள். இவருடைய முதல் திருமணமே முறிந்து போயிற்றே!'' என்றார் கடுமையாக.

வின்னியிடமிருந்து இதற்கு பதில் வரவில்லை. நெல்சன் படத்தையே அவர் பார்த்துக் கொண்டிருந்தார். ஹில்டா

செய்தியைக் கோகனியின் காதுக்குக் கடத்தினார். மகளுக்குத் தந்தையிடமிருந்து அழைப்பு வந்தது தந்தையே பேசினார் ''மகளே! நெல்சனை மிக மதிப்பவன் நான். உங்களின் இந்த முடிவுக்கெதிராக நிற்கும் கடைசி மனிதனாகவே நானிருப்பேன். ஆனால் நெல்சன் தேர்ந் தெடுத்திருக்கும் அரசியல் பாதை கரடுமுரடானது. அவரைத் தொடர்ந்து செல்வதற்குரிய வயதும் உனக் கில்லை. அனுபவமும் போதாது'' என்றார் தந்தை. எனினும்,

மகளின் முடிவில் மாற்றமில்லை. தந்தையும் தடுக்க முனையவில்லை. அரை மனத்தோடு அனுமதி வழங்கினார். கோகனியின் மூத்த பிள்ளைகளெல்லாரும் திருமணத்தை முடித்துக் கொண்டு தகவல்தான் தந்தார்கள். திருமணத் திற்கு இசைவு கேட்ட முதல் நபர் அவர் குடும்பத்திலேயே வின்னிதான். இந்த வகையில் அவர்கள் குடும்பத்தில் நடை பெறும் முதல் திருமண நிகழ்ச்சியாக வின்னியுடையதே விளங்கியது.

கோகனி தற்போது ஏழைப் பள்ளி ஆசிரியரல்லர். அவர் ஒரு வணிகர்.பேருந்து முதலாளி. பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையை எய்தியிருப்பவர்.எனவே திருமணத்தைச் சிறப்பாக நடத்த அவர் ஆர்வப்பட்டார்.

திருமணத்திற்கு 14.5.1958 என்று நாள் குறிப்பிடப் பட்டது,அப்போது நெல்சனுக்கோ தடை. எனவே தளர்வு கோரிஅரசுக்கு மனுச் செய்தார். பெருமனத்தோடு அரசு அவருக்குஆறு நாள்கள் தடை விலக்களித்தது.

திருமணத்தின் முதல் பாதி சடங்குகள் மணமகள் இல்லத்தில் நடந்தேறின. மதிப்பிற்குரிய பல பெரியவர்கள் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள். ஐந்து நாள்களுக்குப் பின் மணமக்கள் பிரிந்தார்கள். அரசு அளித்த அனுமதி நாள்கள் முடிகிறதே!

## 19. போராட்டப் பாதையில்...

ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசின் போராட்டங்கள் புதிய பொலிவோடு உருவெடுத்தன. வேலை நிறுத்தங்கள் வெற்றிப்படிகளாக்கப்பட்டன. டர்பன் தேசிய மாநாடு அடிமைச் சின்னங்களான அநீதிச் சட்டங்களை எதிர்க்கும் பாடி வீடாகி, போராட்டத் தளவாடங்களைத் தயாரிக்கும் உலைக்களமாயிற்று.

வளரும் இயக்கங்களில் பிளவும், பிரிவும் தவிர்க்க முடியாதவிசித்திர விளைவுகள். ஆப்பிரிக்கத் தேசியக்காங்கிரசும் வீரல் விட்டது. தன்னம்பிக்கை பெற்ற தலைப் பிள்ளை தனிக்குடித்தனம் போவதைப் போல், பிரிந்தவர்களின் பிள்ளையாகச் சர்வ தேசியக் காங்கிரஸ் என்னும் அமைப்பு பிறந்தது.

தன் காலிலேயே நிற்க வேண்டுமென்ற தத்துவத்தை வித்தாகக் கொண்டு விளைச்சல் காண விரும்பியது இந்த இயக்கம். இனத் தோழமை என்றெண்ணி எவர் தோளிலும் கைபோட மறுத்தது. பொதுவுடைமைக் கட்சியை, வெள்ளயராட்சியைப் போலவே வெறுத்தது, ஒப்ப மறுத்தது.

வெறுப்பு வணிகம் விலை போகவில்லை. இந்தநிலையில் தான் அந்த இயக்கத்தின் சட்ட மறுப்புப் போராட்டம் தொடங்கி 62 ஆப்பிரிக்கர்களின் உயிர்களை காவலர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகக் கொடுத்தது. இந்தக் கொடுமைக்கெதிராக ஆப்பிரிக்கத் தேசியக் காங் கிரஸ் கண்டனம் தெரிவிக்கும் வகையில் 1960 ஆம் ஆண்டு மார்ச் 28 இல் வேலை நிறுத்தம் செய்தும், அனுமதி சீட்டு களை நெருப்பிட்டுக் கொளுத்தியும் எதிர்ப்புக் காட்டியது.

ஐ.நா. பாதுகாப்பு மன்றமும் கண்டனத் தீர்மானத்தின் மூலம் தென்னாப்பிரிக்க அரசின் நாகரிகமற்ற நடத்தையை வெறுப்பதை வெளிப்படுத்தியது. 1960– ஆம் ஆண்டு ஐ.நா. மன்றத்தில் ஆப்பிரிக்க ஆண்டென அறிவித்ததன் மூலம் தென்னாப்பிரிக்க அரசின் திமிரான போக்குக்குச் சிவப்புக் கொடி காட்டியது. தென்னாப்பிரிக்காவில் மனித நேயம் மரணப்படுத்துப்படுவது உலகின் செவிகளில் உரக்க ஓதப்பட்டது.

இன வேற்றுமையை இருபதாம் நூற்றாண்டிலும் இளமை மாறாமல், ஊட்டி வளர்த்துவரும் ஆட்சியாளர்களின் அகந்தை இடித்துக் காட்டப்பட்டது. அனைத்துலகும் அருவருக்கும் நிறவேற்றுமைக் குளத்தில் நீந்தும் எருமையான ஆப்பிரிக்க ஆணவ அரசை வழிக்குக் கொண்டுவர, வணிக முடக்கம் செய்யக் கோரினார் ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசுத் தலைவர் லுத்தூலி.

போராட்டம் என்பது இயக்கங்களுக்கு உயிர் மூச்சு. ஆளும் வர்க்கத்துக்கோ அதுவே அனல் மூச்சு — பெரு மூச்சு!

வேலை நிறுத்த ஆயத்தங்கள் துரைத்தனத்தின் தோலை உரிக்கத் தொடங்கின. அடித்ததாலேயே கை வலித்ததாக ஆத்திரப்பட்டது, ஆணவ அரசு. தொண்டர்களோ கண்டபடி சிறைப்பிடிக்கப்பட்டனர்.

ஆப்பிரிக்கத் தேசியக்காங்கிரஸ் மட்டுமன்றிச், சர்வ தேசியக் காங்கிரசும் கடையை விரிக்கக் கூடாதெனத் தடையை விதித்தது அரசு.

போராட்டப் புரவிகளுக்குக் கடிவாளம் போட்டுக் கட்டுப்படியாகாதெனக் கருதி, கால்களையே வெட்டிவிடக் கட்டளை பிறப்பித்தது ஆட்சி.

கால்களைக் காவு கொடுக்காமல், குதிரைகள் குளம்பு களாலேயே குழி தோண்டிப் பாதாளத்தில் பாதை சமைத்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தன.

1960–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 8 ஆம் நாள், இயக்கங்களை இறந்த காலமாக்கும் தடை மேடை ஏறிய நாளாகும். அதோ! புரண்டு வரும் வெள்ளத்தைத் தடுக்கப் பிரண்டைக் கொடியால் தடையா? வௌவால் பறந்தா நிலவை மறைத்து விட முடியும்?

அரசின் தடையால் ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசின் நடவடிக்கைகளின் வெளித்தோற்றத்திற்கு மட்டுமே திரை விரிக்க முடிந்தது. பணி எதனையும் பட்டினி போட்டு விட முடியவில்லை. ஆப்பிரிக்காவுக்கு வெளியேயும் ஆதரவு திரட்ட ஆயத்தம் செய்யப்பட்டது. ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசால்.

ஆலிவர் டாம்போ அயல்துறை அணித்தலைவரானார். ஆட்சியிலில்லா அமைச்சரானார். உரிமைப் பயிருக்கு உள் நாட்டு உரமும், வெளிநாட்டு ஊக்கமும் தேவைப்பட்டது. அது தேடப்பட்டது.

அரசு வேலி போட்டதால், இயக்கம் தாண்ட வேண்டியது தவிர்க்க முடியாததாயிற்று. பிடிபடுவதும் அடிபடுவதும் போராட்டவாதிகளுக்கான பொது விதி.

தென்னாப்பிரிக்க ஆட்சி, நெருக்கடி நிலை எனும் கறுப்புக் கண்ணாடியை அணிந்து கொண்டு, அடக்குமுறை அழகைக் கண்டு ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தது. வாதாடுவதற்கே வழக்கறிஞர்கள் வரத் தயங்கிய கால கட்டம். நெருக்கடி நிலை என்பது அரசின் அச்சுறுத்தும் நிலை என்பதே உண்மை போலும்!

டூமா, கோக்லே ஆகியோரின் இனிய துணையோடு மண்டேலாவே அரசின் வழக்குகளைச் சந்தித்தார். அரசின் குற்றச்சாட்டுகள் சொத்தை வித்தானதால், வேலி கட்டும் வேலை வேண்டாததாயிற்று.

விசாரணை வளர்ந்து, தளர்ந்து, வீழும் நிலைக்கு வந்தது. தீர்ப்புச் சடங்குக்குத் தேதி குறிக்கப்பட்டது. 1961-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் 29 ஆம் நாள் வழக்கின் முடிவு அறிவிக்கப்பட்டது. அதன்படி, "விடுதலை நோக்கத்தை வெளிப்படுத்தியது பொதுவுடைமை அரசைப் புகுத்தும் முயற்சி ஆகாது; அரசத் துரோகமென்பது அசலல்ல— நிழலே! அச்சப்பட்டுக் கிடக்கும் ஆட்சி, பிழையாகப் பேயைக் கற்பனை செய்து கொண்டுள்ளது." எனக் கூறி அரசின் குற்றச்சாட்டுகளை நீதிமன்றம் நிராகரித்தது.

விளைவு...? விடுதலை!

## 20. கொடிய அரசின் குடியரசு

குறுகிய நோக்கங்களையே கொள்கையாகக் கொண்டிலங்கிய தென்னாப்பிரிக்க அரசுக்கு ஓர் அற்ப ஆசை! 'குடியரசு' எனக் கூறிக்கொள்ள வேண்டுமென்ற ஆசை அதனை ஆட்டிப் படைத்தது. இந்த முத்திரையைக் குத்திக் கொள்ள ஆருடம் பார்த்து, அது குறித்த நாள் தான் 1961 மே - 31.

அரசின் இந்த மக்களாட்சி மாறுவேடத்தை ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் ஆதரிக்கவில்லை. "மக்கள் கருத்தைக் கேட்காமல் புதிய புனைவா?" என்றார் மண்டேலா! குடிமக்கள் கருத்தறியாமல் கொண்டு வரப்படும் ஆட்சிமுறை மாறுதலாக அது அமையக் கூடாதென்றார். மக்கள் பிரதி

நிதிகளைக் கூட்டிப் பேசாமல் ஆட்சி முறை மாற்றம் அமலுக்கு வந்தால், வேலை நிறுத்தம் வெடிக்கும் என எச்சரித்தார் மண்டேலா.

துப்பாக்கித் துணிச்சலில், ஆட்சி மண்டேலாவின் எச்சரிக்கையைக் காலாவதியான காசோலையாகப் பாவித்தது. வேண்டுகோள் வீணாக்கப்பட்டது—விதவை யாக்கப்பட்டது. பீட்டர் மாரிட்ஸ்பர்க் அனைத்து ஆப்பிரிக்க மாநாட்டின் எச்சரிக்கையும், துச்சமென நிரா கரிக்கப்பட்டது. எனவே எடுக்க வேண்டிய நடவடிக்கைக் காகக் குழு ஒன்றை மாநாடு உருவாக்கியது. அந்தக் குழுவின் செயலாளர் நெல்சன்மண்டேலா! இனி, குழுவின் வினை வேகம் விவாதமாக இருக்காது.

அரசு எந்திரம் ஆயிரம் குதிரைத் திறனில் சுழன்றது. நடவடிக்கைக் குழுவின் நாடி நரம்புகளைத் துண்டிக்கத் துடித்தது. இயக்கத் தேனீக்களின் இறகை ஒடிக்கக் காவல் துறை மிகவும் கடுமையாக உழைத்தது. மண்டேலா 'மாயாவி'யானார். காற்றைப் போன்றே கண்ணுக்கும், கரங்களுக்கும் அகப்படாதவரானார். ஆம்! மண்டேலா காவல் துறைக்குக் காற்றானார். தொண்டர்களுக்கோ உணர்வூற்றானார்.

குடியரசு கொண்டாட்டம் நடிப்புச் சிரிப்பாக நடந்து கொண்டிருந்தது. மலரைக் காணாத மண மேடை யாயிற்று. கொடிய அரசு, குடியரசு என்னும் குப்பாயத் தைப் போட்டுக் கொண்டு வந்த அன்றும், அதற்கு முன், பின் நாள்களிலும் கல்வி நிலையங்கள் கண் விழிக்கவில்லை.

அங்காடிகள் மொட்டுகளாக மூடிக் கிடந்தன. ஆலைகளோ வாயைப் பொத்திக் கொண்டு வாளா விருந்தன. அன்றாடச் செயல்கள் நொண்டிகளாயின. வேலை நிறுத்தம் மட்டில் வெற்றிப் புன்னகையுடன் வீதி வலம் வந்தது.

தோல்விதானே கொடுமைகளின் கூட்டாளி? வேலை நிறுத்தத்தில் பங்கேற்றவர்களை வேட்டையாடியது ஆட்சி! குடியரசு நாள் கொண்டாட்டத்தில் காவலர்களின் அடிகளே வெடிகளாயின. கறுப்பர்களின் குடியிருப்புகள் வெள்ளைக் காவலர்களின் வேட்டைக்காடாயிற்று!

கைது கணக்கில் நூற்றுக்கு நூறு வாங்க காவல் மாணவர்கள் கருத்தாக உழைத்தார்கள்; அரசின் வன்முறை அரங்கேற்றம் நடந்தது.

## 21. தடையோ தடை!

இயக்கங்களுக்குத் தடை!

போராட்டங்களுக்குத் தடை!!

தலைவர்களுக்குத் தடை!!!

உரிமைக் கோரிக்கைகளுக்கு எப்போதுமே தடையே விடையானது. தடியடி, துப்பாக்கிச் சூடு, தண்டனை. சிறை இவை நீதி கேட்பவர்களுக்கு நிலையான பரிசுத் திட்டம். அமைதி வழிப் போராட்டங்களையும் வன்முறை வாழ்த்துக் கூறியே வரவேற்றது ஆட்சி!

காந்தி வழி ஒரு வழிப் பாதை! தென் ஆப்பிரிக்க ஆட்சி நெரிசல் இல்லாதது. அது வெள்ளையர்களுக்கென்றும் கறுப்பர்களுக்கென்றும் தனித் தனியே போடப்பட்ட இரு வழிப் பாதையில் இனப் பாகுபாட்டோடு இன்பப் பயணம் சென்று கொண்டிருந்தது.

அறவழி என்னும் பொது வழியை அடைத்து விட்டு, அது தேவையற்றதெனத் தெளிவுரை எழுதிக் கொண்டிருந்தது. மறவழி என்னும் மாற்றுப் பாதையைத்

திறந்து வைத்தது. இந்த இன்னல் நிலை, மக்கள் தலைவர்களின் நெஞ்சை நெருப்பாகத் தகித்தது.

மண்டேலா கூறினார்;—

''எங்கள் போராட்டம் போகும் தண்டவாளப் பாதை மாற்றப்படுகிறது. வன்முறையால் வன்முறைக்கு வழி காட்டப்படுகிறது. எங்கள் கரங்களில் பிடித்திருக்கும் வெள்ளைக் கொடியை வீசி எறியத் தூண்டுகிறது ஆட்சி!

' போராட்டங்கள் எங்கிருந்தோ வந்து புகுந்து விடுபவையல்ல. அவை ஆட்சியாளர்களின் அலட்சியத்தால் அழைத்து வரப்பட்டு, ஆணவத்தால்தான் அரங்கேற்றப் படுகின்றன.''

''அமைதி வழிப் போராட்டங்களுக்கும் அடக்குமுறை தான் பதில் என்னும் போது, அமைதி அங்கே சமாதியாகி விடுகிறது. இனியும் நாங்கள் தாங்குபவர்களாகவே இருக்கத் தயாரில்லை. கைகளை உயர்த்துங்களென்ற கட்டாயமும் காலமும் கட்டளையோடு நெருங்கி வந்து நிற்கின்றன. இனி...''

''கறுப்பர்களின் கரங்களில் சிவப்புக் கொடி! தோளில் தொங்கும் துப்பாக்கிகள் விழுங்கிய குண்டுகள் வெளிப்படக் கட்டளை வேண்டி கரங்களைத் தட்டும்!''

''வன்முறைக்கு அறத்தின் வழியும், அதன் மொழியும் புரியாது. காட்டு தர்பாரும், வேட்டு மொழியும் மட்டுமே தெரிந்த வெள்ளையர்களோடு, நீதி மொழியில் நெடு நேரம் வாதித்தும் பயனில்லை. அப்படிச் செய்து கொண்டிருப்பது ஆமையிடம் ஓட்டத்திற்குப் பயிற்சி பெற்று, போட்டிக்குத் தயாராகும் பொறுப்பற்ற செயலாகி விடும்.''

காவலர்களின் கைத்தடியும், துப்பாக்கிகளும் கறுப்பர்கள் செல்ல வேண்டிய பாதையைக் காட்டும் கை காட்டிகளாகி விட்டன.

நெருப்பு வழியில் செருப்பும் இல்லாமல் நெடுந்தூரம் போக முடியாது! தேவைக்கேற்பத் திருத்தங்களையும், திருப்பங்களையும் செய்யும்படி நேரம் நெருக்குகிறது'' என்று நெல்சன்மண்டேலா தனது திறந்த மடலில் தெளிவு படுத்தினார். ஏடுகளில் ஏறிய இச்செய்தி கண்டங்களையும் கடந்து சென்றது.

மண்டேலாவோ தடைசெய்யப்பட்ட தலைவர். தென்னாப்பிரிக்காவில் தடை செய்யப்பட்டவரென்றால் அசைவுகளுக்கே அனுமதி பெற வேண்டும். எனவேதான்,

மக்கள் தொண்டர்கள், அரசின் பிடியில் அகப்படாதிருக்க மறைந்துறைய வேண்டுமென்பது மரபாயிற்று. தலைமறைவு வாழ்க்கை என்பது தலைவர்களின் போர் வழி!

மக்கள் என்பதை மகன், மகள் என்றே பொருள் கொள்வார்கள் போலித்தலைவர்கள். இனத்தின் அணுக்களே மக்கள் என்னும் மாண்புறு பொருளை மறக்காதவர் மண்டேலா!

அதனால்...

நாட்டு மக்களுக்காக வீட்டு மக்களை அவ்வப்போது அடியோடு மறந்தார். தொழிலைத் துறந்தார். எல்லையிலாத் தொல்லைகளை ஏற்று நடந்தார்.

உரிமையைப் பெற, போராட வேண்டுமென்பது காலம் பிறப்பித்திருக்கும் கட்டளை. அநீதி ஆட்சிபுரியும் மண்ணில் இந்தக் கட்டளைதான் சட்டம். மண்டேலா மக்களுக்கு விடுத்த செய்தி:

''இழப்பும் இன்னலும் எனக்கு மட்டுமல்ல. என் தோழர்களுக்கும், என் மக்களுக்கும் வெள்ளை அரசு தொல்லைகளைப் பகிர்ந்தளித்துள்ளது.''

தன்னையும், தன் குடும்பத்தையும், எண்ணி ஏங்குவது தலைவனுக்குத் தகுதிக் குறைவு.''

''ஆப்பிரிக்க மக்களின் அடிமை இருள் மடியும் வரை, உரிமைத்தளைகள் உடைத்தெறியப்படும் வரை எங்கள் போராட்டங்களுக்கு விதி விலக்குமில்லை, விடுமுறையு மில்லை.''

''இலக்கை எய்தும் வரை இளைப்பாறல் என்ப தில்லை. மூச்சுள்ள வரை முயற்சி, முன்னேற்றம், வெற்றி! இந்த இலட்சியம் இளைக்காது— சளைக்காது'' மறைந்து வாழ்ந்த நேரத்திலும் இந்த மணியான கருத்துகளை மக்களுக்கு அனுப்பி வைத்தார் மண்டேலா.

## 22. புரட்சிப் பாதையில்...

ரிவோனியாவிலுள்ள லிலிஸ்லீஃப் பண்ணை, போராட்டப் புலிகளின் குகையாயிற்று. வெள்ளைக் கூகைகளின் பார்வையைமறைக்கும் பகலாயிற்று. 'டேவிட்' என்பது இடைக்காலத் திரைப் பெயராகி மண்டேலாவை மறைத்து வைத்திருக்க உதவியது. காலம் போராட்ட முறையில் புரட்சியைப் புகுத்தியது. ஆயுதப் போராட்டம் அமலுக்கு வந்தது. ஈட்டி கூர் தீட்டிக் கொண்டது.

1961 - ஆம் ஆண்டு டிசம்பர் பதினாறாம் நாள், களம் காணத் துடித்த கறுப்பினத் தொண்டர்களின் கரங்களிடம் வெடி குண்டுகள் — விலாசம் கேட்டன. ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசு தலைவர் லுத்துலி அவர்கட்கு நோபல் அமைதிப் பரிசு அறிவிக்கப்பட்ட மறுவாரம், புரட்சியாளர் களின் முதல் வெடிகுண்டு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு வெளிப்பட்டது.

தேயத்தின் ஈட்டி! இது மக்கள் படையின் மகுடப் பெயர். தளபதி பொறுப்பு மண்டேலாவின் மடியில் விழுந்து, தோளில் ஏறி பயணத்திற்குப் பாதை கேட்டது. இது பணிவுக்கு விடை கொடுத்து விட்டுத் துணிவின் தோழனாயிற்று.

கறுப்பர்களின் குருதியை மட்டுமே குடித்து அலுத்த ஆப்பிரிக்க மண்ணுக்கு வெள்ளையர்களின் இரத்தச் சுவை முதன் முதலாக ஊட்டி உணர்த்தப்பட்டது.

பயிற்சி இல்லை, ஆயுத பலமும் அதிகமில்லை. என்றாலும் நெஞ்சில் துணிவிருந்தது; கொள்கைப் பிடிப்பிருந்தது. தோளில் வலுவிருந்தது. இயந்திரங்களை இதயத்தால் வென்றுவிட முடியுமா?

நப்பாக்கித் துரைத்தனம் ஈட்டியை முனை மழுங்கச் செய்தது. இயக்கத்தின் நடைமிடுக்கை நலியச் செய்தது, ஆனால் அழிக்க மட்டில் அதனால் ஆகவில்லை. மக்களின் பக்கபலம், தேயத்தின் ஈட்டிக்கு நேயமாக இருந்தது.

ஆயுதப் போராட்டத்தின் தொடக்கக் காலம் தொல்லை மிக்கதாயிருந்தது. தோல்விகளே துணைக்கு வந்தன; தொடர்ந்தும் வந்தன. ஆனாலும்

இனவுணர்வு தூக்கி விட்டது!

இலட்சிய வெறி உசுப்பி விட்டது!

உலகக் கருத்து ஊக்கி விட்டது!

எனவே ஈட்டி எட்டிய மட்டில் பாய்ந்தது. வெள்ளையர்களின் ஆணவக் கோட்டை வீறல் விட்டது.

சமநீதி சிந்தனையாளர்கள் நாடு கடந்து நீட்டிய நட்புக்கரம், தேயத்தின் ஈட்டிக்குத் தெம்பைக் கொடுத்தது.

மண்டேலாவோ தென்னாப்பிரிக்க ஆட்சியாளர்களின் கண்ணில் விழுந்த கடல் மணலானார்.

மறைந்து செயல்பட்ட மண்டேலாவைப் பிடிக்கக் காவலர்களோ தேனீக்களாகத் திரிந்து ஆண் ஈக்களாகிப் போனார்கள்.

மண்டேலாவை எட்டிப் பிடிக்கக் கூடிய தூரத்திலிருந்தும், தொட்டுக் கைதாக்க முடியாமல் ஏமாந்து பறக்கவிட்ட பரிதாப நிலை, காவலர்களைப் பார்த்துக் கண்சிமிட்டி நகைத்த நிகழ்வுகளுமுண்டு.

## 23. அந்நிய மண்ணில் ஆதரவு தேடல்

அடிஸ் அபாபா. எதியோப்பியாவின் தலைநகர் இது அங்கே உரிமை வேட்கை உழைப்பாளிகள் ஒன்று கூடினர். மத்திய மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவின் விடுதலைப் போராட்ட வீரர்கள் இங்கே தான் சங்கமித்தார்கள். கூடல் நிகழ்ச்சி மாநாடாயிற்று. இந்த மாநாட்டில் ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரசுக் குழுத் தலைவராக மண்டேலா மேடையில் தோன்றினார்.

காப்பு வளையங்களைக் கடந்து இருட்டை விரட்ட வந்த இந்த வெளிச்சத்தால் தென்னாப்பிரிக்க அரசின் நோய்க் கண்களில் நூறு ஊசிகள் நுழைந்தது போலாயிற்று!

என்ன! எப்படி? வியப்பு வில்லாக — வினாக்கள் அம்பாயின. வெள்ளையர்களின் விழிகளில் கடல் நீலம் காணாமற் போயிற்று. செவ்வானச் சிவப்பு குடியேறிற்றங்கே!

''நிறவெறி அரசின் பண்டங்களைத் தீண்டாமையால், இனப் பாகுபாடென்னும் இஞ்சியைத் தின்ற குரங்காம்

தென்னாப்பிரிக்க ஆட்சியாளர்களைத் தனிமைப்படுத்த லாம். திமிர் வாதத்திற்குத் தீர்வெனத் தெளிவுரை! இதனை மாநாட்டின் மேடையில் முழங்கினார்.

'ஆக்க பூர்வமாக ஊக்கமுடன் உதவும் அரசுகளுக்கு நன்றி' என நல்லுரை புகன்றார். தென்னாப்பிரிக்கத் தீயராட்சி, கறுப்பின மக்களைக் காயப்படுத்தும் காரியங் களையெல்லாம் படம் பிடித்துக் காட்டிப் பார்வையாளர் களின் விழிகளில் பனிக்கட்டிகளை உருவாக்கினார்.

தேசத்தின் ஈட்டி இனப்பகையரசின் இதயத்தில் எவ்வளவு ஆழத்தை அளந்துள்ளதென்பதையும் பேராளர் களின் மத்தியில் பெருமையுடன் எடுத்துரைத்தார்.

அமைதி வழி அடைபட்டுப் போனதால், புரட்சி வழி யில் புக நேர்ந்ததை, அவசிய ஆதாரங்களுடன் அடுக்கிக் கூறினார் மண்டேலா. மாநாடு முடிந்தது, ஆப்பிரிக்க அரசுகளின் தலைவர்களைச் சந்தித்து - தமது இயக்கத்தின் போராட்டத்திற்கு ஆதரவு கோரி ஆப்பிரிக்கப் பயணத் தைத் தொடர்ந்தார்.

தென்னாப்பிரிக்க வெள்ளையர்களின் பிதாமகர்கள் வாழிடமான இலண்டனுக்கும் சென்றார். பழைமையின் எதிரணியினரான தொழிற்கட்சி மற்றும் 'லிபரல்' கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார் மண்டேலா. இந்த நல்லெண்ணச் சேகரிப்பை முடித்துக் கொண்டு அல்ஜீரியா சென்றார்.

அல்ஜியர்சில் தேயத்தின் ஈட்டிக்குக் கூர் தீட்டிக் கொண்டார். போர்ப் பயிற்சியில் தன்னைப் புடம்போட்டுக் கொண்டார். ஆம், ஆயுதமேந்தும் அரிய கலையை மண்டேலா அங்கே தான் கற்றுக் கொண்டார். படை நடத்தும் பயிற்சி முடிந்தது. தளபதியாகத் தன்னைத் தகுதிபடுத்திக் கொண்டு தாயகம் திரும்பத் தயாரானார்.

பயனுள்ள பயணம்! பதினேழு மாதத் தலைமறைவு வாழ்க்கையில் இதுவே இன்னலில்லாத வசந்தகாலம்! ஆம். ஆட்டிப்படைக்காத, அலைக்கழிக்காத, அவமானப்படுத்தாத, தொல்லைகள் நீளாத, சட்டம் துரத்தாத இந்த நாள்களைப் பசுமை மாறாமல் தன் இதயத்தில் பதுக்கிக் கொண்டார்!

நேட்டாலிலிருந்து திரும்பும் நேரம் வந்தது. ஜோகனஸ் பர்க் நோக்கி மீள் பயணம். பார்வையைக் கூர்மைப்படுத்திக் கொண்டு பருந்துகள் பறந்து கொண்டிருந்தன.

## ஆயுதப் போராட்டத்தில் மண்டேலாவின் பங்கும் பணியும்

தென்னாப்பிரிக்க தேசிய காங்கிரசின் போராட்ட வரலாற்றில், நெல்சல் மண்டேலாவின் பங்கும் பணியும் கொள்கைக் குறிப்பான கொடியைப் போல் உச்சியில் பறக்கும் உண்மையாகும்,

தத்தி நடந்துகொண்டிருந்த இயக்கத்தைத் தாவிப் பாயும் பரியாக்கியவர் அவர்.

பொறுமிக் கொண்டிருந்த நிலையை மாற்றி புயத்தை உயர்த்தச் சொன்னவர்.

மனிதத் தன்மை மயான காவலர்களிடம், புனித நெறி போதனை செய்வது பொருத்தமற்ற தெனப் புகன்றவர்.

இயக்கத்தின் சல்லி வேர்களாகத் தெரு அமைப்புகளை ஏற்படுத்தத் திட்டம் கொடுத்தவர் அவர்.

நாட்டில் நலிவை ஊட்டிக் கொழுக்கும் ஆளும் வர்க்கத்திற்கெதிராக ஈட்டி அமைப்பை உருவாக்க ஊக்கமளித்து வரும் நெல்சன் மண்டேலா தான்.

சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் தம்மை இலக்காக்கிக் கொண்டு, இருட்டுக் கண்டத்தில் இலட்சியப் பயணம் மேற்கொண்டவர்களுள் மண்டேலா மகுடம் போன்றவர்.

இன நலனுக்காக, இணை உரிமைக்காக சளைக்காமல் களைக்காமல் உழைப்பவர் நெல்சன் மண்டேலா!

1961–மே-திங்களில் நடைபெற்ற மாநாட்டு மேடையில் மண்டேலா தோன்றிய போது, ஐப்பசி மாத ஆகாய முழக்கமெனக் கையொலி எழுந்ததும்,

மாநாட்டின் முடிவுப்படி அமைக்கப்பட்ட தேசிய செயற்குழுத் தலைவரென்ற தகுதி மகுடம் இவருக்குத் தரிக்கப்பட்டதும் வினைவலி அடிப்படையில்தான்.

இது அலங்கார பவனிவரும் ஆடம்பரப் பதவியல்ல. விரட்டும் காவலுக்கும், மருட்டும் மரண தண்டனைக்கும் அறைகூவல் விட்டு இயங்க வேண்டிய பொறுப்பு!

வைரத்தை அறுக்க வளையல் துண்டால் ஆகாதென்பதைத் தென்னாப்பிரிக்க விடுதலை இயக்கத்தினர் தெளிவாக உணர்ந்திருந்தனர்.

கரடு முரடான கடமைப் பொறுப்புகளை, நெருடல் நினைப்பற்ற நெல்சன் மண்டேலாவால் தான் நிறைவேற்ற முடியுமென்ற நம்பிக்கையும் இயக்கத்திற்கு இருந்தது.

குடும்பப் பற்று மண்டேலாவுக்குத் தாமரை இலைத் தண்ணீரைப் போல!

தலைமறைவு இருட்டு வாழ்க்கைக்கும், தண்டனைக்கும் தன்னைத் தயார்படுத்திக் கொண்ட தன்னலத் துறவி அவர். எனவே தான் வறட்சியில் வந்த மழையைத் தலையசைத்து வரவேற்கும் பயிரைப் போல் இன்னல்களுக்குத் தன்னை இலக்காக்கிக் கொண்டு, தலைமைப் பொறுப்பைத் தாங்கிட இசைந்தார்.

"எந்த நிலைமையிலும் இந்த ஆட்சியிடம் தஞ்சமடைந்துவிடமாட்டேன், என்றும் எதிர்க்க வேண்டிய இனவெறி அரசுக்கு அஞ்சி அந்நிய நாட்டில் அடைக்கலம் தேடமாட்டேனென்றும், "போராட்டமே எனது வாழ்க்கை" என்றும் இலட்சிய முழக்கம் செய்து புதிய பொறுப்பைத் தோளிலே தூக்கி வைத்துக்கொண்டு மிடுக்கு நடை போட்டார் மண்டேலா!

தென்னாப்பிரிக்க தேசியக் காங்கிரசின் அந்நாள் தலைவர் ஆல்பர்ட் லுத்துலி. அவர் அண்ணல் காந்தியடிகளைப் போல் அமைதி வழிப் போராட்டத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர். அவரால் ஆயுதப் போராட்டத்தை அனுமதிக்கவோ - ஆதரிக்கவோ இயலவில்லை. எனினும் செயற்குழுவின் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

போர்ட் எலிசபெத், ஜோகனஸ்பர்க் மற்றும் டர்பன் நகரங்களில் ஆயுதப் போராட்ட அறிமுகம் நடந்தது. தொண்டர்களைப் பயிற்சிக்கு அனுப்பிவைக்க ஏற்ற இடமும், தேவையான பொருளைத் தேடும் பொறுப்பும் மண்டேலாவிடம் விடப்பட்டது.

வெள்ளையர்களிடமிருந்து இந்தியாவை மீட்க, படைப் பலத்தைத் திரட்டிய சுபாசு சந்திரபோசின் முழக்கத்தைப் போல், நெல்சன் மண்டேலாவின் முழக்கம் தென்னாப்பிரிக்காவில் தீவிரவாதிகளைத் திரட்டித் தந்தது.

படைப் பயிற்சிக்காகவும், பண உதவிக்காகவும் அயல் நாடுகளுக்கு மண்டேலா பயணப்பட்டார்.

தலைமறைவாகி இருந்தவர் அயல்நாடு செல்ல அரசு அனுமதியை வேண்டி நிற்க முடியுமா? கரி பிளிற காட்டில் காரியிடம் மனு போட்டுக் காத்திருப்பதில்லையே!

பாயும் புலிக்குப் பனித்திரை தடையாகாது. மண்டேலா ஆப்பிரிக்க நாடுகளின் அன்பான வரவேற்புக்குரிய விருந்தினரானார். தென்னாப்பிரிக்க தேசியக் காங்

கிரசின் தூதராக அவர் பவனிவந்தார். துரியோதனனைப் போல் துடித்துக் கொண்டிருந்தது இனவெறி அரசின் இதயம்! இரையைத் தப்பவிட்ட பூனையைப் போல் அலைந்தது போத்தாவின் காவல் துறை!

மாந்தனின் உடல் உரமும், செயற்றிறமும் உணவாலும் நீராலும் உண்டாகின்றன.

விடுதலை இயக்கத்தின் வெற்றி நேரடிப் போராட்டத்தாலும், உலகக் கருத்தை உருவாக்கும் முறையாலும் ஈட்டப்படுவதாகும்.

தென்னாப்பிரிக்க தேசியக் காங்கிரசு உலகக் கருத்தைத் திரட்டி தன் இலக்கை நோக்கி முன்னேறியது.

நிறத்திற்கோர் நீதி என்ற, கறை படிந்த ஆட்சிக்கெதிராகப் பொருளாதாரத் தடையை விதித்து, நெருக்கடியை ஏற்படுத்த முடிந்தது. இயக்கப் பொறுப்பாளர்கள் தெளிந்த சிந்தனையோடும், திடமான முனைப்போடும், திசை தடுமாற்றமின்றியும் செயல்பட்டதால், கண்ணுக் கெட்டிய தூரத்திலிருந்த இலக்கு, கைக்கு எட்டும் தூரத்திற்கு வந்தது.

ஆப்பிரிக்கக் கண்டத்தில் தையல் இலையைப்போல் திட்டு திட்டாகத் தேயங்கள் பல!

சந்தை தேடிவந்த ஐரோப்பியர்கள் அவரவர் ஆசைக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப ஆப்பிரிக்காவைக் கூறு போட்டுக் கொண்டதன் விளைவு இது!

உறக்கத்தில் பறி கொடுத்தவர்கள், விழித்தெழுந்து போராடினார்கள். விலை கொடுக்கப்பட்டது, தளை தகர்க்கப்பட்டது. அந்த நாடுகளிடம் நெல்சன் மண்டேலா நல்லெண்ணத் தூது சென்றார். ஆதரவு கோரினார். ஆதாயம் தேடினார்!

அடிசு அபாபா மாநாடு முடிந்ததும் ஆப்பிரிக்க நாடு களின் தலைவர்களைச் சந்திக்கத் தொடங்கினார்.

எகிப்து, லிபியா, மொராக்கோ, தங்கனிகா, சூடான், சோமாலியா, ஜாம்பியா நாடுகளுக்கும் அவர் சென்றார். அரசியல் பக்குவம் பெற்ற அவருடைய பயணம் பலன் கொடுக்கத் தொடங்கியது.

நெல்சன் மண்டேலா பல தலைவர்களையும் சந்தித்துப் பேசினார். அவர்களுள் கெய்லி சலாசி, செக்கௌ டெங்ரே, பென்பெல்லா, பாபு மொகமது, மறைத்திரு மைக்கேல் ஸ்காட், டாக்டர் கெலால், தளபதி அப்துல் அசீசு, ஷேக் முகமது, கென்னத் கௌண்டா, அரசர் ஆசன், ஷேக் முகமதுஃபாரா ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

கோரிக்கையை எடுத்துரைக்கும் பக்குவம் விளக்க மளிக்கும் திறமை இவற்றால் மண்டேலா கருத்து மாறு பாடு கொண்டவர்களையும் தம் பக்கம் ஈர்த்தார்.

''அமைதி வழிப் போராட்டத்தையே ஆதரிக்கமுடியும்'' என்ற சூலியசு நைரேரேவையே ''எப்பொழுது அமைதி வழிப் போராட்டங்களின் வாயில்கள் அடைக்கப்பட்டு விட்டனவோ, அப்பொழுதே போராட்டம் மாற்றுப் பாதையைத் தேர்ந்தெடுக்கத்தான் வேண்டும். நாம் அடிபணிந்து விட முடியாது'' என்று பேச வைத்தார்.

வட ஆப்பிரிக்காவில் டுனீசியா தலைவர் பௌர்கய்பா தலைவரை நெல்சன் சந்தித்தார். தேயத்தின் ஈட்டிக்குக் கூர் தீட்ட இவர் ஆதரவளித்தார், வெற்றுரையோடு நில்லாமல் நிதியும் வழங்கினார். போர்ப் பயிற்சிக்காக ரபாட்டில் டாக்டர் மொகுட்டேஃபெய் அவர்களைச் சந்திக்கும்படி அறிவுரையும் வழங்கினார். வட ஆப்பிரிக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு மேற்கே பயணமானார்.

இந்தப் பயணத்தில் இன்னலே அவருக்கு வழித்துணையாக வந்தது.

வறண்ட பாலை. மணற்புயல். நேயத்திற்கென நெருக்கமாக எவரும் இல்லாத நிலை. மனப்புயல் வீசத் தொடங்கியது. வெறுமையில் குடும்ப நினைவு விருந்தாளியாக வந்தது. அன்பு ஏக்கம் அவரது இதயச் சுவரை இடித்துப் பார்த்தது. தனது வாழ்க்கைப் பயணம் சகாராவில் நடைபோடுவதாக உணர்ந்தார்.

மாலி நாடு வந்தடைந்தார் மண்டேலா! நாட்டின் தலைவர் மொடிபோ கெய்ட்டாவைச் சந்தித்தார். அவர் தென்னாப்பிரிக்க தேசிய காங்கிரசின் போராட்டத்திற்கும், நெல்சனுக்கும் ஆர்வத்தோடு உதவி நல்கினார். எனினும் இங்கே ஒரு நெருடல் நிகழ்ச்சியும் நடந்தது.

மண்டேலா மாலியில் தங்கியிருந்த காலத்தில் அவருடைய செலவை அரசே ஏற்க வேண்டுமெனப் பணித்திருந்தார். அறிந்தோ அறியாமலோ, தலைவரின் செயலர் மண்டேலா தங்கியிருந்த விடுதிச் செலவை அவரே ஏற்க வேண்டுமென விடுதி மேலாளரிடம் தெரிவித்து விட்டார். மண்டேலாவிடம் பணம் இருக்குமோ இருக்காதோ என்ற ஐயத்தில், விடுதியைக் காலி செய்யும்படி மேலாளர் மண்டேலாவை நெருக்கினார். எரிச்சலுற்ற மண்டேலா "நான் உங்களிடம் என் செலவை ஏற்க முடியாதென்று கூறினேனா? உங்கள் விடுதியில் ஓராண்டு காலம் தங்கத் தேவையான பணம் என்னிடமுள்ளது" எனத் தன் பெட்டியைத் திறந்து காட்டியதும், மேலாளர் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். இச் செய்தி தலைவருக்கு எட்டியதும், செலவை அரசே ஏற்க வேண்டுமெனக் கண்டிப்பான ஆணையிட்டார்.

கினியாவிலும் மண்டேலாவுக்கு அவமதிப்பு இழைக்கப்பட்டது. கோனக்ரி விமான நிலையத்தில் ஐயுற்ற விமான நிலைய அதிகாரிகள், பயண ஆவணங்களை முடக்கி

கொண்டு அவரை நிற்க வைத்து விட்டனர். ஊரடங்கிய பின்னர் அவரைச் செல்ல அனுமதித்தனர். இதனால் நெல்சன் ஒரு சாதாரண விடுதியில் தங்க நேர்ந்தது. மறு நாள் வெளியுறவு அலுவலகத்திற்கு நடந்து சென்றபோது சில இளைஞர்கள் இவர் மீது ஐயுற்று விசாரித்துத் தொடர்ந்தனர்.

லைபீரியாவின் குடியரசுத் தலைவர் டப்மேன் தென்னாப்பிரிக்க தேசியக் காங்கிரசுக்கு தமது அரசின் ஆதரவை உறுதிப்படுத்தினார். நிதியும் வழங்கினார். நெல்சனை நல்ல விடுதிக்கு மாற்றிக்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். ஆனால் நெல்சன் தனது மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கூறி இதுவே போதுமென்றார். அரசு விழாவுக்கு வரும்படி விடுத்த அழைப்பையும், "தன்னிடம் நல்ல உடையில்லை என்றும், இப்படிப்பட்ட சடங்கு விழாக்களில் தனக்கு ஆர்வமில்லை என்றும்" கூறி மறுத்துவிட்டார்.

இறுதியாக எதியோப்பியா மற்றும் அல்ஜீரியாவில் போர்ப் பயிற்சிப் பெற்றார். போராடும் தனது இயக்கத்தினரோடு தானும் சேர்ந்து அவர்களின் இன்னலில் பங்கு பெறவே அவர் ஆர்வமுற்றார். அவ்வாறே பங்கும் பெற்றார்.

திமிர் பிடித்த தென்னாப்பிரிக்க அரசை எட்டடிப் பாய்ச்சலை நிறுத்தி, நிதானித்து நடக்கச் செய்ததில் ஈட்டிக்கும் நெல்சன் மண்டேலாவுக்கும் நிறையவே பங்குண்டு.

## 24. கண்ணியில் விழுந்தது கரி

1962- ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள்! மண்டேலாவைத் தேடி வட்டமிட்டுக் கொண்டிருந்த பருந்தின் பார்வை பயனற்றுப் போகவில்லை. ஆம். மண்டேலாவைக் காவல் நாய்கள் கவ்விக் கொண்டன. கரி காலெடுத்து வைத்தவுடன் கண்ணியில் விழுந்து விட்டது. காட்டிக் கொடுப்பவர் உதவியால் ஹோவிக் என்ற இடத்திற்கு அருகே கைது செய்யப்பட்டார்.

இரை கிடைத்து விட்டதெனக் குதூகலப்பட்ட குள்ள நரிகள், கூறு போடக் குதித்தன; கொதித்தன. கைது வழக்கு, வாதம், தண்டனை, இவை அரசியல் தலைவர்களுக்கு நியாயமானவை அல்ல என்றாலும் நேயமானவை!

மண்டேலா மீது அரசு சுமத்திய குற்றச்சாட்டுகள் குறைவானவை என்றாலும் விரும்பிய தண்டனையைப் பெற்றுத்தருமளவுக்கு ஆழமானவை, அழுத்தமானவை. அவை:

(1) மண்டேலா, 1961 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்கு நெருப்பாகவும் நெய்யாகவும் இருந்தார்.

(2) அனுமதி பெறாமல் அயல் நாடுகளுக்குச் சென்று வந்தார்.

இறக்க முடியாத கனத்துடன் ஏற்றப்பட்ட குற்றச் சுமைகள் இவை.

பிரிட்டானிய ஆட்சிக்கெதிராக ஜவஹர்லால் நேருவும், சாதி சமய சனாதனங்களுக்கெதிராகத் தந்தை பெரியாரும் நீதிமன்றங்களைக் கொள்கை முரசொலிக்கும் பகிரங்க மேடையாகப் பாவித்துக் கொண்டதைப் போல்,

மண்டேலாவும் தென்னாப்பிரிக்க நீதிமன்றத்தைக் கொள்கைப் பிரகடன மேடையாக்கிக் கொண்டார்.

குற்றம் சுமத்தியவர்களின் கொடுங்கோன்மையின் குழந்தைகளான இனப்பாகுபாட்டின் இழிவை அரசின் அநாகரிகச் செயல்பாட்டை, இழைத்து வரும் அநீதிகளை, இவற்றையெல்லாம், அரியணை ஏற்றிய அகம்பாவத்தை நேருக்கு நேராக இடித்துரைத்தார். தெளிவுபெற எடுத்துரைத்தார்.

''நானோ எனது மக்களோ ஒப்பளிக்காத ஒரு சட்டத்திற்குக் கட்டுப்படவேண்டிய கடப்பாடில்லை'' என் உரிமை முழக்கமிட்டார்.

''வரவேற்கப்படாதவர் விருந்துக்கு ஆயத்தப்படுவானேன்?''

''வேலை நிறுத்தம் தேவையானது. தீர்வு கிடைக்கும் வரை திரும்பத் திரும்பச் செய்ய வேண்டியது.

ஊனப்பட்டிருக்கும் உரிமைகள் உரம் பெற்று உரியவர்களிடம் வந்து சேரும் வரை, காயப்பட்டிருக்கும் கறுப்பின மக்களின் தன் உணர்வுப் புண் தழும்புவிடும் வரை, போராட்ட வெப்பம் கனன்று கொண்டுதானிருக்கும்! அவசியத்தின் அடிப்படையில் எதிர்ப்பியக்க அலைகள் எழுந்தார்த்துக் கொண்டுதானிருக்கும்; போராட்டப் புயல் சுழன்றடித்தே தீரும்.

அடி வாங்கிக்கொண்டே ஆயுளைக் கழிக்க முடியாது''

''வன்முறை பக்கத்தில் வந்து நின்று முதுகைத் தட்டும் போது, கையைக் கட்டிக் கொண்டு கன்னத்தைக் காட்ட வேண்டுமென ஆட்சி ஆசைப்படுகிறது.

அடக்குமுறை அளவு கடக்கும்போது, புழுக்களுக்குக் கூட முதுகெலும்பு முளைத்து விடுகிறது. கறுப்பினப்

புழுக்கள் இன்றுவிலா எலும்புகளையும் வேண்டிப் பெற்றுள்ளன.

''மிதித்தவரை மதித்த காலம் வண்டி ஏறிவிட்டது. அடிக்கு அடி, வெடிக்கு வெடி அமலுக்கு வந்துவிட்டது.''

''தண்டனையிலிருந்து தப்பிவிடத் தவங் கிடக்கவில்லை நான். எங்கள் வேள்வித் தீ உண்ணும் விறகே அதுதான். தலைவர்கள் பெறுகின்ற தண்டனை நான், தொண்டர்களுக்குத் தூண்டுதல், ஊக்க உணர்வு— உணவு!''

''இந்த ஆட்சியின் சிறை அவலம் எனக்குத் தெரியும். பட்டறிந்தவனும் கூட! கொடுமையின் கோட்டம் அது. இனப்பாகுபாடென்பது இங்கு மட்டுமல்ல, சிறைக்குள்ளேயும் செயல்படுகிறதென்பது. அங்கே போகாதவர்களுக்கு மட்டுமே புதுமையாயிருக்கும்.''

''துன்பங்களால் கொள்கைப் போராட்டத்தைத் தோற்கடிக்க முடியுமென்றால், உலகில் தன்னாட்சி என்பதே தலையெடுத்திருக்காது உரிமைப் போராட்டங்கள், உதயமாகாமலே போயிருக்கும். ஏகாதிபத்தியங்கள் இரவையே பார்த்திருக்கமாட்டா!''

''தண்டனை என்னை மட்டுமல்ல, என் தோழர்களின் தீரத்தைத் திடத்தைத் தீவிரத்தைத் தீண்டித் தளர்த்திவிடக் கூட முடியாது, புயலாகப் புறப்பட்டவர்களுக்குப் பூங்கொடி தளையாகாது.''

''நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் பாடுபடுவதைக் குற்றமென்று கூறினால், அதை நீதியுரையாக நினைக்க முடியாது. இந்த அடிப்படையில் நான் குற்றமற்றவன்.''

''இன ஒதுக்கலுக்கும், உரிமை ஒடுக்க முறைகளுக்கும் அணைளிக்கும் வெள்ளை அரசின் பிரதமர் ஃபர்வூடும், அவருடன் அநீதிகளுக்கு வழி நீவி, கொடி பிடிக்கும் அமைச்சர்களுந்தான் தண்டனைக்குரிய குற்றவாளிகள்; குற்றவாளிகளே, கொலு மண்டபத்தை அலங்கரிக்கும் கொடுமை இங்கே நடந்து கொண்டிருக்கிறது.''

''இன்றில்லா விட்டாலும், எதிர்காலம் தீர்ப்பை இப்படித்தான் திருத்தி எழுதப் போகிறது. இந்த வாக்கு மூலம் கரைந்துபோகும் பனிப் பாறையல்ல, காலத்தை வென்றிலங்கப் போகும் கற்பாறை!''

நான் தண்டிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டாலும், விடுதலையாகும் போது, போராட்ட வீரனாகவே வெளியே வருவேன். என் இன மக்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் வரை, ஆணவ ஆட்சியின் அகங்காரச் சட்டங்களை மிதித்துக் கொண்டே இருப்பேன். ஒழிக்கப்பட வேண்டியவற்றை ஒழிக்காமல் ஓயப்போவதில்லை.''

''மண்ணுக்குரியவர்களை மக்களாக இந்த அரசு மதிக்காதவரை, அதன் சட்டங்களை நானும் மதிக்கப் போவதில்லை.''

நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்ட நெல்சன் மண்டேலாவின் நெஞ்சக் குமுறல் வாக்கு மூலமாக வந்து விழுந்தது.

அரசின் விருப்பம், தீர்ப்பென்ற பெயரால் தெரிவிக்கப்பட்டது.

''ஐந்தாண்டுக் கடின உழைப்புச் சிறைத் தண்டனை,'' என்றார் நீதிபதி.

கேட்டதும், சிரித்தது சீயம்!

சிலிர்த்தது தேயம்!!

இராபன் தீவுச் சிறைக் கதவு மண்டேலாவுக்காகத் திறக்கப்பட்டது.

## 25. ஈட்டிக்கு எதிராக

கூண்டிலடைத்து விட்டோம் கோளரியை என்று குதூகலத்தோடு, நாட்டின் ஈட்டியை நசுக்கக் கனைத்து எழுந்தது காவல் துறை!

விசாரணையின்றிக் கைது செய்தவர்களை மூன்று மாத காலம் காவலில் வைக்கும் கடுமையான வேட்டைச்சட்டம், காவலர்களுக்குக் கடிக்கவும், பிடிக்கவும் கட்டுப்பாடில்லா அதிகாரத்தை அள்ளிக் கொடுத்திருந்தது.

வேட்டை நாய்கள் நாக்கை நீட்டிக் கொண்டன. நகங்களைத் தீட்டிக் கொண்டன. அவை, கவ்விப் பிடித்தவர்களைக் கதறக் கதறக் குதறின.

கொட்டடிக் கொடுமை மனிதத் தன்மையை மயானத்திற்கனுப்பியது. கறுப்பர்களின் குருதியால் காவல்நிலையங்கள் சிவப்பு நிறம் பூசிக்கொண்டன. இவ்வளவு கொடுமைகளுக்கிடையிலும் ஈட்டி எதிர்ப்புக் காட்டிக் கொண்டுதானிருந்தது. காலப் போக்கில் காவலர் திறமை சினத்திற்கும் சிரிப்புக்கும் இலக்காகி வந்தது.

## 26. ஓணான்களின் உதவி

எட்டையபுரங்களும், புதுக்கோட்டைகளும் இங்கு மட்டுமல்ல எங்குமே உண்டு! கையூட்டுக்கேங்கிக் கை

காட்டும் ஒணான்கள் போராட்ட பூமியின் உள்ளரங்கில் ஒதுங்கி நின்று, தாயகப் போராளிகளைத் தலையசைத்தே காட்டிக் கொடுத்துவிடும். தென்னாப்பிரிக்கத் தேசியக் காங்கிரசு, தலை மறைவுத் தலைவர்கள் தங்கியிருந்த லில்லிஸ்லீஃப் பண்ணைப் பாசறையைப் பரங்கியர் காவல் படையினர் மோப்பம் பிடிக்கவும், முற்றுகையிடவும் ஆள் காட்டிகள் துப்புக் கொடுத்துத் துணை நின்றனர்.

மரைகளை (மான்களை) மடக்கும் சிறுத்தைக் கூட்ட மாய்க் காவல், மக்கள் தலைவர்கள் மறைந்திருந்த பண்ணை மீது படை எடுத்தது. கறுப்பர்களின் காவல் தெய்வங்கள் கைப்பற்றப் பட்டனர். 'ஈட்டி' இயக்கக் கட்டுப் பாட்டறை கருவி நிகர்த்த உயர் மட்டத் தலை வர்கள் பிடிக்கப் பட்டனர்.

தன்னல மறுப்புத் தழும்புகளையே ஆடையாக அணிந் திருந்த ஏழு தலைவர்கள் எதிரியின் பிடியில்! விடுதலை இயக்கத்தின் வெடி மருந்துகள்! இயக்க எந்திர எரிபொருள் களும் அரசின் கரங்களில் அகப்பட்டுக் கொண்டனர்.

வினை முடக்கப்பட்டது. கணை ஒடிக்கப்பட்டது. தலைவர்கள் தண்டனைக்காக நீதி மன்றத்தில் நிறுத்தப் பட்டனர்.

இயக்க வீரர்கள் இடிந்து போனார்கள்! காவலர்களோ கறிவாடு பெற்ற கடுவன் பூனையாக உறுமிக் கொண்டே உவகையில் மிதந்தனர். இனவெறி அரசுக்கோ இனிப்பு கிடைத்தது போலாயிற்று தலைவர்கள் பிடிபட்ட செய்தி!

அறத்தின் அடிகளில் ஆணி தைத்தது. மறத்தின் மடியில் மாங்கனி விழுந்தது.

# 27. சரித்திரத்தைப் புரட்ட சதி வழக்கு

இரிவோனியா வழக்கு. இதுதான் உரிமைப் போராட்டத் தளபதிகளைத் தண்டனைக்காகத் தத் தெடுத்துக்கொண்ட வரலாற்று வழக்கு. டிரெசன் வழக்கில் தண்டனை பெற்று இராபன் தீவுச் சிறையில் அடைக்கப்பட்டுப் பின்னர் பிரிட்டோரியாவுக்கு மாற்றப் பட்டிருந்த மண்டேலாவை, மறக்காமல் இந்த வழக்கிலும் இணைத்துக் கொண்டது அரசு!

கூண்டுக்கிளிகளின் எண்ணிக்கை வானவில் நிறமாக ஏழாகிப் பின்னர் திக்கைப் போல் எட்டாக மாறி, இறுதி யில் ஒன்பான் சுவையாக (நவரசமாக) உயர்ந்து நின்றது.

1963-அக்டோபர்9-ஆம் நாள்! தென்னப்பிரிக்கத்தேசிய வரலாற்றை, வெள்ளைக்காரர்கள்கறுப்பு மையால் கறைப் படுத்திய நாள்!

தன்னலந்துறந்த தலைவர்களை, அரசு நீதி மன்றத்தில் (!) நிறுத்திக் குற்றச்சாட்டு குண்டுகளால் சுட்டது! குண்டுக் காயங்கள் இவை!

1. 1961-ஆம் ஆண்டின் பிற் பகுதியில் வன் முறைக்கு வரவு கூறி, அழிவு வேலைகளுக்கு ஆரத்தி எடுத்த தாகவும், சீர் குலைப்புகளின் மூலம் அரசியல் குறிக் கோளைஅடையத் 'தேயத்தின் ஈட்டி, என்னும் தீவிர வாதஇயக்கத்தை'எம்.கே' என்னும்சொற்சுருக்கெழுத் தோடு அமைத்துத் தடை செய்யப்பட்ட ஆ. தே. கா மற்றும் ஆப்பிரிக்கப் பொதுவுடைமைக் கட்சியின் மூலவர்களின் தலைமையில் புரட்சித் திட்டத்தை இயக்கியதாகக் குற்றப் பத்திரிகை கூறியது. இந்த இயக்கத்தின் பாசறையாகவே லில்லிஸ் லீஃப் பண்ணை

யைப் பயன்படுத்தியதாகவும், இதற்காகவே இப் பண்ணை பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர் ஹார்மெல்லின் உறவினர் விவியன் இஸ்ரா என்பவரால் வாங்கப் பட்டதென்றும் குற்றக் குறிப்பு நீண்டது.

2. அந்நிய சக்திகளின் தூண்டுதலோடும், துணையோடும் ஆட்சியைக் கவிழ்த்துப் பொதுவுடைமையைப் புகுத்த முயன்றார்கள் என்பது இரண்டாவது குற்றச் சாட்டு.

மண்டேலாவையும் மற்றவர்களையும் பார்த்து நீதிபதி நீட்டிய வினா! "ஏற்றப்பட்ட குற்றச் சுமைக்கு என்னபதில்? நீங்கள் குற்றவாளியா இல்லையா?"

"கூண்டில் நிறுத்தப்பட வேண்டிய குற்றவாளி, கொடுங்கோலாட்சியே தவிர; ஒத்த உரிமை கேட்ட நானல்ல. நான் குற்றத்தின் சொற்றம் .நீதியின் நேயன்" —இது மண்டேலாவின் மறுமொழி.

மற்ற தோழர்களான வால்டர் சிசுலு, கோவன் இம்பெக்கி. அகமத் கத்ராடா, ருஷ்டி பெர்ன்ஸ்டின், டென்னிஸ் கோல்ட்பெர்ஷ், ஜேம்ஸ் காண்ட்டூர், ஆன்ட்ருஸ் இம்பெங்கி, எலியஸ் மோட்சலேடி மற்றும் ரேமண்ட் இம்லாபா ஆகியோரும் தொடர்ந்து மண்டேலாவின் பதிலையே எதிரொலித்தார்கள். மண்டேலா தொடர்ந்தார்:

"வெளியார் எவருக்கும் நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகவும் அவர்தம் கட்டளைப்படி செயல்படுவதாகவும் கூறுவது ஏற்கக் கூடியதல்ல. அப்படிப்பட்ட கீழ்மை எண்ணம் எங்களுக்கு அந்நியமானது. ஏனெனில் நாங்கள் வெளியிலிருந்து வந்தவர்களல்லர்.

இந்த அரசு எங்கள் அரசல்ல — அசலுமல்ல. மண்ணுக்குரியவர்களைப் புண்ணாக்கிப் போட்டு விட்டுச் சொந்த

நலனுக்காகச் சுரண்டும் அரசைத் திருத்துவதற்கே தீவிரப் பட்டோம். சம உரிமை கேட்பது சதி ஆகாது. அடக்கு முறைகளுக் கெதிராகவே ஆயுதமேந்தினோம் — போராடி னோம். இது சூழ்ச்சியல்ல. நீதியின் எழுச்சி! உரிமைகளைப் பறித்த எதிரியை வீழ்த்தப் போரிடுவது ஒப்புக்கொள்ளப் பட்ட உயர்ந்த நெறி!

குற்றம் சுமத்தப்பட்டவர்களின் மறு மொழியாக நீதி மன்றச் சுவர்களில் மோதி எதிரொலித்த எண்ண வீச்சுகள் இவை.

இவர்களுக்காக வாதிக்க வந்த வழக்கறிஞர்களான சாங்கல்சன், ஜோயல் ஜோஃபி, வெர்னன் பெர்னேஜ் மற்றும் ஜார்ஜ் பிசோஸ் ஆகியோருக்கு பிராம் பிஷர் என்னும் வெள்ளையரே வழி காட்டி வழக்கை நடத்தி னார். இவர் தோல் நிறத்தால் மட்டுமல்ல உள்ளத்தாலும் வெள்ளையரே! இனப் பாகுபாட்டை எதிர்க்கும் அணியில் இவரும் சேர்ந்திருந்தார். பொதுவுடைமை என்னும் கொள்கைக் கோட்டத்தில் குடியிருப்பவர் இவர்.

சிறையிலிருந்த மண்டேலாவை, வெளியில் நடந்த வழக்கில் தொடர்பு படுத்திக் குற்றங்களை ஏற்றிக் கூண்டி லேற்றியதை உலகம் ஏற்கவில்லை. தென்னாப்பிரிக்க அரசின் தீய நோக்கத்தை அகிலம் அறிந்து கொண்டது.

ஐக்கிய நாடுகள் மன்றப் பொதுச் சபை, வழக்கு நட வடிக்கையைக் கைவிட்டு, மண்டேலாவையும் மற்றவர் களையும் விடுதலை செய்யும்படி வேண்டுகோள் விடுத்தது. இத்தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றிப் பயன்?

ஐ. நா. தீர்மானமே அலட்சியப் படுத்தப்பட்டது. காலாவதியான காசோலையாக்கப்பட்டது. அப்போது பன்னாட்டுப் படை தென்னாப்பிரிக்காவில் தீவிர தாக்குதல் தொடுக்கவில்லை. ஐ. நா. தீர்மானத்தை அப்படியே செயற்படுத்துவதற்காக ஆலாய் பறக்கவில்லை. அமெரிக்கா

வும் அதன் அக்கா தங்கைகளும் ஐ.நா. தீர்மான மென்ன அவர்களின் ஆண்டவன் இயேசுவின் தீர்மானமேயாயினும்; தங்கள் நலன் அதில் தொங்கிக் கொண்டிருந்தால் தான் எந்த அரசும் துடித்தெழும் — வெடித்துக் கிளம்பும்,

மரண தண்டனை அல்லது ஆயுள் சிறை என்ற இலக் கோடு புனையப்பட்ட வழக்குதான் நீதி மன்றத்திற்கு அழைத்து வரப் பட்டிருந்தது.

மண்டேலாவும், மற்றவர்களும் தாங்கள் தீவிர திசைக் குத்திரும்பியதையோ, ஆயுதப்போராட்டத்திற்கு ஆயத்த மானதையோ மறைக்கவுமில்லை. மறுக்கவுமில்லை.

## 28. நீதி முழக்கம்

1964- ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாள். நீதி மன்றம் மண்டேலாவின் வாக்குமூலத்திற்கு வரவேற்பு கூறிய நாள். நீதியின் குரலாக நின்றொலித்தார் மண்டேலா!

''மக்களுக் கெதிரான நடவடிக்கைகளில் அரசு ஈடுபடும் போது, அதிலிருந்து பொது மக்களையும், அவர்தம் நலவுரி மைகளையும் காப்பதற்காக அமைதிப் பாதையிலேயே அடி வைத்தோம். நடந்து பார்த்தபோது தான் எங்கள் பாதங் களைப் பழுது படுத்துவதற்காகவே கண்ணாடித் துண்டு களைக் கற்களாகப் பயன்படுத்திப் பாதை போடப் பட்டி ருந்தது தெரிந்தது. அதிலுங்கூட அங்கே அடக்குமுறை வேலி எங்கள் கொள்கைப் பயணத்தைத் தடுக்கக் குறுக்கே மறித்து நின்றது. திறந்திருந்ததோ வன்முறை வாயில்தான்.

கடக்க வேண்டிய கடமை நெருக்கடி. தடையைக் கண்டு, தயங்கி நிற்கத் தயாராக இல்லை; நாங்கள் திறந்தி ருந்த வழியில் நுழைந்து நடந்தோம்.

நாச வேலை என்பது நாங்கள் அடைகாத்து ஆசைப் பட்டுப் பொரித்த முட்டையல்ல. அந்த முட்டைகள் ஆட்சியாளர்களால் எதிர்பார்ப்புகளோடு எங்கள் கூண்டுகளில் இடப் பட்டவை.

விலகி நிற்க முடியாதபடி எங்கள் மக்கள் வேதனையின் விளிம்பிற்கே விரட்டப் பட்டார்கள்! தாக்குதல்களுக்கு ஆட்பட்டுத் தாங்க முடியாத மக்களின் ஆவேசம் எரிமலையாகி வெடிக்கும் முன், புயலாகப் புறப்படும் முன், நில அதிர்வாக நிகழும் முன் நல்ல தீர்வு காண்பதற்கே நாங்கள் முயன்றோம்.

விரும்பத்தகாத விளைவுகளைத் தடுப்பதற்கும், இன மோதல்கள் ஏற்பட்டு இரத்த ஆறு ஓடாது தடுப்பதற்கும் அரசியல் தீர்வுக்கே அரசைக் கொண்டு வரவுமே ஆயுதம் ஏந்தினோம்.

தளை தகர்ப்பே எங்கள் இலக்கு! அதனை வன்முறை வழியில் தான் எய்த முடியும் என்றது அரசு! அரசு காட்டிய வழியையும் தவற விட்டு, வரலாற்றுப் பிழையை நாங்கள் செய்யவில்லை. இது எப்படி குற்றமாகும்?

'நாட்டின் சட்டி, கறுப்பின மக்களை இழிவுபடுத்தும், இன்னல்படுத்தும் இனவேற்றுமை என்னும் அரசின் இறுமாப்புக் கவசத்தை ஊடுருவுவதற்கென்றே உருவாக்கப் பட்டது.

எங்கள் மக்களுக்கு இந்த ஆட்சி வாய்ப்பூட்டும், கால் கட்டும், கை விலங்கும் போட்டிருப்பதை அகற்றுவதற்கே ஆர்வப்பட்டோம். பொதுவுடைமை அரசைப் புகுத்துவதோ, வெளியார் எவருக்கும் வேண்டியவர்களாக இருப்பதோ எங்கள் விருப்பமுமல்ல, வேலையுமல்ல.

நீதிக்குப் புறம்பான நிறவேற்றுமை பேணும் அரசின் ஆதிக்க வெறியை அடக்க, நொறுக்கப் பொதுவுடைமைக்

கட்சி சுத்தியலை ஏந்தி வந்ததன் மூலம் எங்கள் கொள்கைக் குறிக்கோளோடு கூட்டுச்சேர்ந்தது. அந்த அகிலமே எங்கள் பயணத்திற்கு வழித்துணையாக வந்தபோது, வேண்டாமென்று தள்ளி நடந்து எங்களைத் தனிமைப் படுத்திக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை.

எங்களை எதிரிகளாக எண்ணுபவர்களுக்கு இசைவாக நடந்துகொள்வதென்பது இயலாதது மட்டுமல்ல; எதிர் பார்க்கக் கூடாததுமாகும். நாங்கள் வந்தேறிகளல்லர். வாழ்ந்த மரபின் வழித் தோன்றல்கள், துப்பாக்கியின் துணையை நம்பி எங்களை இரண்டாந்தரக் குடிகளாக்கி யிருப்பதை நீடிக்க விடமுடியாது.

எவரும் யாரையும் அடக்கி ஆதிக்கம் செய்ய ஆசைப் படக் கூடாது. உரிமைகள் சமம். உடைமைகள் சமம்.

தாய்நாட்டிலேயே தாழ்த்தப் பட்டவர்களாகச் சொந்த வீட்டிலேயே உட்காரக் கூடாதவர்களாக, ஒதுக் கிடங்களில் ஒண்டிக் கொண்டு அவமானச் சின்னங்க ளாகவே ஆயுளைக் கழிக்க முடியாது.

''எங்கள் நாட்டில் எங்களையே அந்நியராக்குவதை யும், அடிமைகளாக்குவதையும் அங்கீகரிப்பது ஆண்மை யாகாது.

எங்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. நிற வெறி ஆதிக்கத்தை நிரந்தரமாக்கிக்கொள்ள வெள்ளையர் வளர்த்திருக்கும் இந்தப் பார்த்தீனியத்தை அப்படியே விட்டால், நாடே நச்சுக் காடாகி விடும்.

மக்களாட்சி என்பது, மாநிலமெங்கும் மதிக்கப்படும் ஆட்சி முறை. இங்கே ஆள்பவர்களுக்கோ அது அச்சத்தின் சின்னம். தாங்கள் சிறுபான்மை என்பதால் ஆட்சி பீடத்தில் அமரும் தகுதியைத் தாங்கள் இழக்க நேரிடுமே என்ற அச்சம் அவர்களைப் பதைக்கச் செய்கிறது. நீதியைப் புதைக்கச் செய்கிறது.

இனவெறி வெள்ளையில் மட்டுமல்ல கறுப்பில் காணப்பட்டாலும் ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசு அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. எந்த வண்ணத்திலும் ஏற்படக் கூடாதது இந்த இழிவு. அநாகரிகம்!

எண்ணங்கள் உயர்வானதாக, உன்னதமானதாக இருந்தால், வண்ண பேதக் கண்நோய் வந்திருக்காது. இங்கே, வெள்ளையர்க்கென்றும், கறுப்பர்களுக்கென்றும் எல்லாமே இரண்டுபடுத்தப்பட்டிருக்கிறது. நிறவேற்றுமை என்பது நீள அகலமாக மட்டுமல்லாமல் அடர்த்தியாகவே நெய்யப்பட்டிருக்கிறது.

நாகரிகமற்ற இந்த நடைமுறையைக் காந்தி வழியில் களைய முடியாமற் போனதால் உலைக் களத்தின் உதவியை நாடினோம்—ஆயுதமேந்தினோம். தாக்கத் தொடங்கினோம்.

"சம உரிமை, சமநீதி, சமவாய்ப்பு எல்லாருக்கும் வாக்குரிமை, இவற்றைத் தரும் மக்களாட்சியே எமது இலட்சியம். இந்த இலட்சியத்தை அடைய எமது ஆவி தேவைப்பட்டால், அதனைத் தருவதைவிட இனியது எமக்கு வேறில்லை. சுதந்திரமில்லாத வாழ்க்கையை விட, விடுதலைக்காக ஆவியைத் தருவதற்கே ஆசைப்படுவேன்—ஆயத்தப்படுவேன்" என்று தனது வாக்குமூலத்தை முடித்துக் கொண்டார் மண்டேலா.

1964-ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் 14-ஆம் நாள்–சட்டச் சடங்கு, திட்டப்படி நடந்து முடிந்தது. தீர்மானிக்கப்பட்ட தீர்வு நீதிபதியின் வார்த்தை வடிவம் பெற்று வந்தது.

"நெல்சன் மண்டேலா குற்றவாளி. அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறேன்."

கூடியிருந்த மக்களின் மனக்கொதிப்பை அளக்க முயன்றால் வெப்பமானியே வெடித்துவிடும். பலருடைய

கண்ணிமைக் கரையுடைந்து கன்னச் சமவெளியைக் கழனியாக்கிற்று.

ஆவேசமான ஆதரவு முழக்கங்கள்! விம்மல்கள், விசும்பல்கள்! ஆறுதல் ஆராதனைகள்! நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின் நிலவிய துயரச் சூழ்நிலை அந்த மன்றம் அனுபவித்திராதது. மக்களிடையே தவிப்பு!— துடிப்பு— கொதிப்பு!

சிசுலு, இம்பெக்கி, கத்ராடா, மக்லாபா, இம்லங்கேனி மோட்ச லேடி, டென்னிஸ் மற்றும் கோல்டுபெர்க் ஆகியோரும் இதே தண்டனையைப் பெற்றனர்.

ஒவ்வொரு கோளுக்கும் தனித்தன்மையும் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு சிறப்பும் உண்டு. தண்டனை பெற்ற தலைவர்கள் ஒவ்வொருவரும் கோளையும், நாளையும் போலே. தென்னாப்பிரிக்கக் கறுப்பின மக்களின் உரிமைப் போராட்டத்தின் படைப் பிரிவுத் தலைவர்களாக விளங்கியவர்கள்.

வீரமும், தீரமும் இவர்களுக்கு வாய்த்த விழிகள். இன உணர்வுக்கு இவர்கள் ஒரு பொருள் பல சொற்களைப் போல்! தன்னல மறுப்பில் இவர்கள் ஒவ்வொருவருமே தாய்தான். சாதனைகளுக்காகச் சரித்திரம் தன் பக்கங்களை இவர்களுக்காகப் பாதுகாத்து வைத்திருக்கிறது.

நெருப்புக் கோளத்தின் நீண்ட கதிர்களின் வெப்ப வீச்சில் வேறுபாடில்லை. ஆயுள் தண்டனையை அலட்சியமாக ஏற்றுக் கொண்ட அனைவருமே போராட்டத் தேரில் பூட்டிய உயரினப் புரவிகள்தான்.

மக்லாபா மற்றும் கத்ராடா இருவருக்கும் மேல் முறையீடு செய்ய அனுமதியளிக்கப்பட்டது. முறையீடு செய்தால் தண்டனை குறையவும் வாய்ப்பிருந்தது. ஆனால் வீழ்ந்தாலும் வேங்கை வெள்ளாட்டின் கருணைக்காகக் கையேந்துமா?

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் பேராயத்தார் கொண்டிருந்த வைராக்கியத்தை இவர்கள் வாங்கி வைத்துக் கொண்டிருந்தார்கள். இன வேற்றுமை பாராட்டும் இழிவான அரசின் இயல்பைப் பூ இனிப்புக் காகப் பேரியக்கத்தின் பெருமையை அவர்கள் இழக்கவில்லை.

தண்டனையை நிறைவேற்றத் தயாராயிற்று சட்டம்!

விடுதலை விரும்பிகளை விசையற்றவராக்க விரும்புவதே இனவெறி அரசின் இலக்கணம்.

நிழலை நெறிக்கவே நினைத்துத் துடிப்பவர்களிடம் அசலே அகப்பட்டால்..?

மண்டேலாவும், அவரது தோழர்களும் ஆர்கலியையே அரணாகக் கொண்டு, அலைகளின் அவலக் குரல் கேட்டு அலமந்து கிடக்கும் இராபன் தீவுச் சிறைக்குக் கொண்டு போகப்பட்டார்கள்!

## 29. அதீதியின் ஆவர்த்தனம்

கழுகுகளிடம் அகப்பட்ட கோழிக்குஞ்சு நகத்தால் கிறப்பட்டு, அலகால் கிழிக்கப்படுவதைப் போல, விடுதலை விரும்பிகள் வசவுகளால் வரவேற்கப்பட்டு, அடி உதைகளால் ஆராதிக்கப்பட்டார்கள். கடின உழைப்புக்குக் காணிக்கையாக்கப்பட்டார்கள்.

பாறை மனப் பரங்கியர்கள், இருண்டுகிடக்கும் தங்கள் இதயச் சுவர்களுக்கு வெள்ளையடிப்பதற்காக மண்டேலாவையும் மற்ற தோழர்களையும் சுண்ணாம்புச் சுரங்கத்தின் வேலை செய்ய வைத்தார்கள்.

நெடி மிகுந்த இந்தக் கொடிய வேலை, ஓரிரு திங்கள்கள் அல்ல. பத்தாண்டுக் காலப்பணி! இந்த வேலை மூலம் நோய்க்கு அடித்தளமிட்ட பின், கடின உழைப்பு அவர்களுக்காகக் காத்திருந்தது.

ராபன் தீவுச் சிறைக்குள் கொலைக் குற்றவாளிகளுக்குக் கூடக்கொஞ்சம் சலுகைஉண்டு. ஆனால் அரசியல் கைதிகள் அதிலும் கறுப்பர்களென்றால் சிறைக் கொட்டடிக்குக் கூடக் கொண்டாட்டந்தான்.

பூனை தான் பிடித்த இரையை உடனே கடித்துத் தின்று விடுவதில்லை. அதைப் புரட்டிப் புரட்டி, சீண்டிச் சீண்டிச் சிறுகச் சிறுகக் கொல்லும், தென்னாப்பிரிக்க அரசும் விடுதலைப் போராட்டக் கைதிகளை, உடல் வலு விழக்கச் செய்து, நோயூட்டி, மன உளைச்சலை உண்டாக்கிக் கொள்கைப் பிடிப்பைத்தளர்த்திட முயன்று கொண்டே இருந்தது.

நான்கு சுவர்களுக்குள் இவர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல் நாட்டுக்கும், நானிலத்திற்கும் தெரியாமற் போய் விடவில்லை.

மண்டேலாவுக்கும் மற்ற தோழர்களுக்கும் அரசியல் கைதிகளுக்குரிய உரிமைகள் ஒட்டு மொத்தமாக மறுக்கப் பட்டிருந்தன. இவர்களைப் பொறுத்தவரை, செய்தி களுக்கும் சிறை வாசந்தான். நூல்களோ இவர்கள் இருக்கும் பக்கமே நுழைய முடியாது. நேர்காணலும் நெருக்கமில்லை. அதுவும் கூட ஆறு மாதங்களுக்கொரு முறையே கிடைக்கும் அரிய வாய்ப்பு.

போராடுவதற்கான காரணங்கள் வெளியே மட்டு மல்ல, சிறைக்குள்ளேயும் உருவாக்கப்பட்டிருந்தது ஆட்சி யால். உண்ணா நோன்பும், வேலை மறுப்பும் தீவுச் சிறைக்

குள்ளும் தீர்வு வேண்டி நிகழ்த்தப்பட்டன. கைதிகளும் சிறைக்குள் நடத்தும் போராட்டங்களுக்கு மண்டேலாவின் கட்டளையைக் கேட்கவே காதுகளுக்குக் கற்றுக் கொடுத்திருந்தார்கள்.

போராடுபவர்கள் எங்கிருந்தாலும், தொண்டர்கள் அங்கங்கே தோன்றிக் கொண்டும், தொடர்ந்து கொண்டு தானிருப்பார்கள், சிறையிலும் மண்டேலாதான் அனைவருக்குமுரிய அன்புத் தலைவர்.

சிங்கம் காட்டிலிருந்தால் மட்டுமல்ல, கூட்டிலிருந்தாலும் சிங்கந்தானே!

கம்பிமூலம் கடத்தப்படும் மின்சாரம் கண்களுக்குத் தெரியாவிட்டாலும், சக்தி கம்பிக்குள் சாந்தப் பயணம் செய்து கொண்டுதானே இருக்கிறது!

## 29. சிறைக்குள்ளே!

சிறை!

தனி மனிதனுக்கும் உலகத்திற்கும் இடையே விடப்பட்ட திரை!

பந்தங்களையும், பாசத்தையும் அந்நியப்படுத்தி வைக்கும் அகழி!

இயற்கை உணர்வுகளை மட்டுமன்றி இயற்கையையே பிரித்து நிற்கும் பெருஞ்சுவர்! இங்கேதான் தென்னாப்பிரிக்காவின் உரிமை மூச்சு அடைத்து வைக்கப்பட்டிருந்தது. எழுபத்திரண்டாண்டு புவி வாழ்க்கையில் இருபத்தேழாண்டுகளைச் சிறைக்குக் கொடுத்தார் செம்மல் நெல்சன் மண்டேலா!

சிறையில் மிகக் கடினமானது, பொழுது நகருவதில் காட்டும் பொறுமைதான்! அங்கே மணிப் பொறியின் முள்கள், காலத்தின் கால்களில் வைத்து விடுகின்றன போலும்;

நெல்சனுக்கும் அவருடைய தோழர்களுக்கும் சுண்ணாம்புச் சுரங்கத்தில் வேலை. தங்களுக்குத் தாங்களே சுறுசுறுப் பேற்றிக் கொண்டு ஆட்ட பாட்டத்தோடு வேலையைத் தொடங்குவார்கள். சுண்ணாம்புப் பாறைகளின் இறுக்கம், அவர்களுடைய சுறுசுறுப்பை எடுத்துக் கொண்டு, பதிலுக்குச் சோர்வைக் கொடுத்துவிடும்.

1966-ஆம் ஆண்டு வெர்வூர்டு கொலை செய்யப் பட்ட போது, சிறைக்குள் வெள்ளை அதிகாரிகள் அரசியல் கைதிகளைத் துன்புறுத்தினார்கள். அந்தக் கொலையில் எந்த அரசியல் இயக்கத்திற்குமே தொடர்பில்லை. கொலையைச் செய்தவன் மூளை பழுதான ஒரு நாடாளுமன்ற அரசு ஊழியன், வெள்ளைக்காரன்.

1967-ஜனவரியில் ஒரு நாள் மண்டேலாவும், எட்டி டேனியல்ஸ், டாக்டர் நெவில்லி, அலெக்சாண்டர் மற்றும் லாலு சிம்பா ஆகியோர் சிறைக் காவலர்களோடு போராட வேண்டியதாயிற்று. இவர்கள் மீது சோம்பல், பொறுப் பின்மை மற்றும் பணிப் புறக்கணிப்பு போன்ற குற்றங்கள் சுமத்தப் பட்டன. அனைவரும் கூட்டாக ஒரு வழக்குரை ஞரை நியமனம் செய்து, குற்றச் சாட்டிலிருந்து விடுதலையானார்கள். காவலர்களும் மாற்றப்பட்டார்கள்.

குவளை மாறி என்ன பயன்? குடிக்கும் பொருள் மாற வில்லையே!

சிறை அதிகாரிகளில் அரிதாக நல்லவர்களும் உண்டு — மிகப் பொல்லாதவர்களும் உண்டு. இராபன் தீவுச் சிறையில் வான் ரென்ஸ் பர்க் என்று ஓர் அதிகாரி. கைதிகளைக்

கொடுமைப் படுத்திப் பார்ப்பதில் இவனுக்கு அலாதி ஆசை. மண்டேலா மற்றும் பிக்கில்பாம் மீது அவன் பார்வை பட்டது. விளைவு, இவ்விருவர் மீதும், வேலையைச் சரியாகச் செய்வதில்லை என்ற புகார் சிறைத்துணைத் தலைவருக்குச் சென்றது.

குற்றச்சாட்டை இருவரும் மறுத்தனர். வேலையை நேரில் வந்து பார்த்துத் தீர்ப்பளிக்கும்படி முறையிட்டனர். இக்கோரிக்கைக்கு இணங்க வேண்டாமென்றான் வான்ரென்ஸ். ஆனால் சிறைத் துணைத்தலைவர் வேலையைப் பார்க்க வர ஒப்புக் கொண்டார். நேரில் வந்து பார்த்த வியப்பு அங்கே வீற்றிருந்தது. இயல்பாக எதிர்பார்க்கும் வேலையை விடப் பல மடங்கு வேலை நடந்திருந்தது. கைதிகளின் முன்னிலையிலேயே அந்த அலுவலரை ''நீர் உரைத்தது பொய்'' என்று கடிந்து கொண்டார் சிறைத் துறைத் தலைவர்.

1972-ல் கர்னல் பேடன் ஹோர்ஸ்ட் என்பவன் சிறை அதிகாரியாக வந்தான். இவன் சோம்பலுக்கும், போக்கிரித் தனத்துக்கும்பேர்பெற்றவன். சிறை அலுவலர்களின் பணியைத் தினமும் ஆய்வு செய்ய வேண்டியது இவன் கடமை. ஆனால் இவன் மாதமொரு முறையே ஆய்வுக்கு வந்தான். அது குறித்து யாராவது மூச்சுவிட்டால் போதும், ஆப்பிரிக்கானீர் மொழியில் தரக் குறைவான சொற்களால் வசை மாரி பொழிவான்.

நீதிபதிகள் ஸ்டெயின், கோர்பெட், தெரோன் மூவரும் கைதிகளைப் பார்க்க வந்தார்கள். கர்னல் பேடன் ஹோர்ட்ஸ் பற்றி மண்டேலா அவர்களிடம் முறையிட்டார். நீதிபதிகளின் முன்னிலையிலேயே ''நீ மிகவும் இன்னல் படப் போகிறாய்'' என்று மிரட்டினான். மண்டேலா அவனுடைய மிரட்டலையே சான்றாக அவர்களுக்குச் சுட்டிக் காட்டினார். விளைவு? அவன் மாற்றப் பட்டான்,

சிறைக் காவலர்கள், அதிகாரிகளின் கொடுமை, குற்றங்கள் குறித்து அவர்களிடமே மோதிக் கொண்டிருப் பதைத் தவிர்த்துத் தக்க நேரத்தில் மேலதிகாரிகளிடம் முறையிடுவதன் மூலம் தீர்வு காணும் முறையை மண்டேலா பின்பற்றியதால் நல்ல பலன் கிடைத்தது. சிறைப்பணி யாளர்களும் திருந்தி, கொடூரத்தைக் குறைத்துக் கொண் டார்கள்.

சிறைக்காவலர்கள் கடுமை காட்டினால், கைதிகள் வேலையின் வேகத்தைக் குறைத்து விடுவார்கள். தட்டிக கொடுத்துத்தான் வேலை வாங்க வேண்டுமென்பதைச் சிறைப் பணியாளர்களுக்குக் கற்றுக் கொடுத்திருந்தார்கள், கைதிகள்.

ஒரு நாள் 'ஒப்பர் மேன்' என்னும் சிறை அலுவலர் கைதிகளிடம்'' பெருமக்களே! நேற்றுப் பெய்த மழையில் சாலைக் குறிக்கோடுகள் அழிந்து விட்டன. அவசரமாக சுண்ணாம்பு தேவைப்படுகிறது. கொஞ்சம் உதவ முடியுமா?'' என்று கனிவோடு கேட்கும்படி நிலைமை உருவாக்கப்பட்டது மண்டேலாவால். சிறை அதிகாரிகளை யும் சீர்திருத்தியவர் அவர்.

சிறையில் கைதிகளுக்குக் கொடுக்க வேண்டிய உணவின் அளவும், தரமும் குறைந்து கொண்டே வந்தது. சிறைப் பணியாளர்கள் அவற்றைத் திருடி விற்று வந்தனர். நிலைமை திருந்தாததால் மண்டேலா அதிகாரிகளின் கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்றார். ஊழல் புரிந்த வர்கள் மாற்றப்பட்டார்கள். கைதிகளின் வயிற்றிலடிப் பதும் நின்றது.

கைதிகளுள் பலவேறு பண்பாளர்கள் உண்டு. அவர் களுள் கொடூரத்தன்மை கொண்டவர் சிறைப் பணியாளர் களுக்கு மட்டுமல்ல, கைதிகளுக்கும் தொல்லை தருவார்கள். அவர்களை நல்வழிக்குக் கொண்டு வருவதிலும் மண்டேலா வெற்றி கண்டார்.

சிறைக்குள் கைதிகளுக்குள்ளேயே ஒழுங்குக் குழு, கல்விக் குழு, கலைக்குழு, இலக்கியக்குழு, அரசியல் குழு எனக் குழுக்களை அமைத்து, அனைவருக்கும் பொறுப்பையும், சிறப்பையும் பகிர்ந்தளித்தார். இக் குழுக்களைச் சிறை அதிகாரிகளும் அங்கீகரித்தார்கள். இதன் பின் அங்கே ஒழுங்குமுறை கைதிகளாலேயே கட்டிக் காக்கப் பட்டது.

சிறையில் எல்லாம் எல்லாருக்கும் என்ற நிலை ஏற் பட்டது. ஒருவருக்குக் கிடைத்தது மற்றவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. அறிவு, அனுபவம், வசதிகள் யாவும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

மண்டேலா சிறைக்குள் கல்விக்கு முதலிடம் கொடுத் தார். இளைஞர்கள் கல்வி முன்னேற்றத்திற்கு அவர் நிதி திரட்டிக் கொடுத்தது உட்பட எல்லா உதவிகளையும் செய்தார். அவருடைய பணியும், பண்பும் கைதிகளி டையே அவருக்கு உயர்ந்த மதிப்பைப் பெற்றுத் தந்தன. அவரைப் பார்க்கவும், பேசவும் புதியவர்கள் ஆர்வப் பட்டனர். அவர் பேசவில்லை என்று சினங்கொண்டவர் களும் உண்டு.

கைதிகள் தங்கள் குடும்பப் பிரச்சினைகளை அவரிடம் எடுத்துச் சொல்வார்கள். அவர் அதற்குத் தீர்வு கூறு வார். தன்னால் இயன்ற உதவிகளையும் செய்வார். அது அவர்களுக்கு ஆறுதலளித்தது. சிறையிலும் சீர்திருத்த வாதியாகப் போராட்டவாதியாகக் கல்வியாளராகத் தலை வராகத் திகழ்ந்தார் மண்டேலா.

சிறை வாழ்க்கையின் போதே 1970-இல் மண்டேலா தனது வாழ்க்கை வரலாற்றை நூலாக எழுதி, மறைமுக மாக அச்சுக்கும் அனுப்பி வைத்தார்.

சிறைக் கொடுமையும் - கட்டுப்பாடுகளும் கொஞ்சம், கொஞ்சமாகத் தளர்ந்து, பத்திரிகைகள் வரவழைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. தொலைக்காட்சி, வானொலி வசதிகளும் செய்து தரப்பட்டன.

நெல்சன் மண்டேலாவின் இராபன் தீவுச் சிறை வாசம் 1982 - ஏப்ரல் திங்களோடு முடிவுக்கு வந்தது. இச்சிறையில் அவரின் பணி அவரைப் புகழ்ப்பாதையில் இட்டுச் சென் றதை அரசால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்பதும், மண்டேலாவுக்கு எலும்புருக்கி நோய் கண்டிருப் பதற்கு மருத்துவ வசதி செய்வதற்கேதுவாகவும் அவர் கேப் நகருக்கு அருகிலுள்ள போல்ஸ் மூர் சிறைக்குக் கொண்டு போகக் காரணங்களாயின.

போல்ஸ்மூர் சிறையும், இராபன் தீவுச் சிறையைவிட மேலான வசதி உடையதன்று என்றே மண்டேலா கருதினார்.

எந்தச் சிறையாக இருந்தாலும் கொள்கையாளரின் உறுதியைக் குலைத்துவிட முடியுமா என்ன?

## இருளும் ஒளியும்

அற்பர்களுக்கும், ஆணவக்காரர்களுக்கும் ஆன்றோரை அலைக்கழித்துப் பார்ப்பதிலும், அவமானப் படுத்துவதிலும் ஆர்வம் அதிகம்,

அன்னப் பறவையை வாத்துகள் வளைத்துக் கொண்ட கால கட்டம்!

ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நெல்சன் மண்டேலா சிறைக்குக் கொண்டு போகப்பட்ட போது நடந்த நிகழ்ச்சி இது.

கர்னல் ஜேக்கப் என்பவன் சிறை அதிகாரி. தங்கமீன் என்பதற்காகப் பூனை கடித்துப் பார்ப்பதைத் தவிர்ப்ப தில்லை. உரிமை இயக்கத்தின் உன்னதத் தலைவனை அவமதித்துப் பார்க்க ஆசை அவனுக்கு.

மாலை மணி ஒலித்தது. கைதிகள் அனைவரும் திறந்தவெளி அரங்கில் திரட்டப்பட்டனர். பழிவாங்கும் எண்ணம் வழிநடத்த அவன் கைதிகளை நோட்டம் விட்ட வாறு மண்டேலாவிடம் வந்து நின்றான்.

''இங்கே நீ அணிய வேண்டிய உடை என்ன தெரி யுமா?'' இந்த வினாவில் செருக்கும், கிறுக்கும் தோளில் கை போட்டுக்கொண்டு முன் வந்து நின்றன.

மண்டேலா பதில் கூறவில்லை. பதில் முரட்டு காவி நிற மேற்சட்டை, காக்கி நிற அரைக்கால் சட்டையாக அவனிடமிருந்தே ஆடையாக வந்தது.'' பிடி! என்றான் அந்தப் பேதை!

தன்னை அவமதிப்பதை அந்த மேதை எதிர்த்தார். ''உமக்கு முழுக்கால்சட்டை கொடுப்பதனால் நீர் தனிமைச் சிறையிலிருக்க வேண்டும்'' இது அவனுடைய கட்டளை, நிபந்தனை.

நெல்சன் தனக்கு வழங்கப்பட்ட உணவின் தரம் குறித்தும் எதிர்ப்பு தெரிவித்தார். உண்ணவும் மறுத்தார்.

'நீர் ஏற்றுக்கொள்ளக் கூடிய உணவுக்கும் நீர் விலை தர வேண்டியிருக்கும். தினமும் அரைமணி நேரம் மட்டுமே வெளியில் இருப்பீர். மற்ற நேரம் முழுதும் தனிமைச் சிறைக்குள்ளேயே அடைந்து கிடக்க நேரிடும்.'' குரைக்கும் நாய் கடிப்பதைப் பற்றிப் பேசியது.

மனிதத் தொடர்பற்றும், வெளிச் செய்தியை அறிய முடியாமலும் இருப்பதைவிட இந்த உடை உணவு

இவற்றை ஏற்பதே மேலென்ற முடிவுக்கு மண்டேலா வர நேர்ந்தது.

சிறையில் மண்டேலா ஆவேசப்பட்ட போதெல்லாம் அமைதி கொள்ளும்படி அறிவுரை பகன்று நெறிப்படுத்தியவர் பான் ஆப்பிரிக்கக் காங்கிரசின் தலைவர் சுபக்வே தான்.

சில முறையீடுகளைத் தெரிவிப்பதற்காக தங்களைச் சிறை அலுவலரிடம் அழைத்துச் செல்லும்படி காவலர்களைக் கேட்டுக் கொண்டார் நெல்சன். அவ்வாறே இருவரும் சிறை அலுவலரின் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அலுவலரை சந்திக்க இருவரும் வெளியே காத்திருந்தனர். சிறை அலுவலர் காவலரை மட்டில் அழைத்தார். ''கைதிகள் தான் அழைத்தால் வர வேண்டுமென்றும் அவர்களைத் திரும்பக் கொண்டு போ'' என்றும் கத்தினான். இதைக் கேள்விப்பட்டதும் நெல்சன் கொதித்படைந்து எதிர்ப்பு தெரிவித்தார்.'' நெல்! நெல்!! ஆத்திரப்படாதீர்கள். நீங்கள் இங்கே வாழ வேண்டியவர்'' என்று அமைதிப் படுத்தினார் சுபக்வே.

சுபக்பேவையும், நெல்சனையும் பிரித்துவிட வேண்டுமென்று அலுவலர்கள் திட்டமிட்டனர், இரண்டு தலைவர்களையும் ஒன்றாக வைத்திருக்க அவர்கள் விரும்பவில்லை. ஏனெனில் நெல்சனை, தனது முதிர்ச்சியின் காரணமாக சுபக்வே விரும்பத்தகாத விளைவுகளிலிருந்து காப்பாற்றி வந்தார்,

சிறைக்குள்ளே சில கைதிகள் சில வசதிகளுக்காகத் தன்மான உணர்வின்றி சிறை அலுவலர்களிடம் கீழ்த்தரமாக நடந்து கொண்டதைக் கண்டு மண்டேலா மனம் நொந்தார்.

மண்டேலாவும் மற்ற தோழர்களும் இராபன் தீவுச் சிறைக்குக் கொண்டுவரப்பட்டபோது நடந்த நிகழ்ச்சி இது.

கேப்டன் கேரிக் சிறை உயர் அலுவலர். இவனுக்கும் மண்டேலாவை இழிவுபடுத்திப் பார்க்க வேண்டுமென்ற ஆசை. தக்க வாய்ப்புக்காகக் காத்திருக்கும் பொறுமையின்றி ஆரம்பத்திலேயே அநாகரிகமாக நடந்துகொண்டான். மெலெட்டி என்பவர் தலைமுடியை சற்று நீளமாக வளர்த்திருந்தார். அதைச் சுட்டிக்காட்டும் வழியாக நெல்சனை சீண்டினான். நெல்சனை சுட்டிக்காட்டியவாறு அவன் பேசினான் ''ஏன் இந்தப் பையனைப் போல் இவ்வளவு நீளமான முடியை வளர்த்துக் கொண்டிருக்கிறீர்? கேட்பதற்கு ஆளில்லை என்ற நினைப்பில் இப்படியெல்லாம் இருப்பதை இராபன் தீவில் பொறுத்துக் கொள்ள முடியாது.''

''நெல்சன் இங்கே பார்!'' ஆள் காட்டி விரல் நெல்சனின் முகத்திற்கு நெருக்கமாக நீட்டி நின்றது. சுருள் புகை அடுத்தவர் முகத்தில் மேவிப் பரவியது. அதட்டல் தோரணையில் ''உன்னை எச்சரிக்கிறேன்'' என்றான். இவனுடைய பேச்சு, செயல்களால் சூடேறிக் கொண்டிருந்த சினம் வெடித்தது. ''நான் உம்மை எச்சரிக்கின்றேன். உம்மை உயர் அதிகாரிகளிடம் கொண்டு செல்வேன், அப்போது நீர் மூஞ்சுறுவைவிட பரிதாப நிலைக்கு ஆளாக்கப்படுவீர்.'' என்றார் நெல்சன்.

தனது பணிக்காலத்தில் இப்படி ஒரு கைதி பேசியதே இல்லை என்பதால் ஆத்திரமுற்ற அதிகாரி அதிர் வெடியெனக் கத்தினான். ''இன்னும் நீர் ஐந்தாண்டு காலம் இங்கே இருக்கப்போகின்றீர். அப்போதும் இப்படி நாவடக்கமின்றி நடந்து காட்டுவீரோ?'' என்று உறுமினான்.

நெல்சன் இதற்கு மிக அமைதியாகப் பதில் கூறினார். ''நகைப்பிற்கிடமளிக்கும்படி பேசாதீர்! விதிமுறைகளை மீறி எதையும் செய்ய உம்மை நான் அனுமதிக்கமாட்டேன்' ஆணித்தரமான இந்த மறுமொழியைக் கேட்ட கேரிக் ஆத்திரத்தாலும், ஆச்சரியத்தாலும் வாயடைத்துப் போனான்.

நீதியின் பகைவர்களையும், நெறிமுறை மீறுவோரையும் நெல்சன் மண்டேலா நேருக்கு நேர் எதிர்த்தார் என்பதற்கு மேற்குறித்த நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டு தான்.

மண்டேலாவைத் தீர்த்துக்கட்ட காவல்துறை கொடிய திட்டமொன்றைத் தீட்டியிருந்தது. பொதுவாகக் காவல் துறை குற்றவாளிகளிடமிருந்து பொதுமக்களைக் காக்கத் தான் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் சில நேரங்களில் அதுவே சமூக விரோதிகளின் சம்பந்தி ஆகிவிடுகிறது. திட்டமிட்டு குற்றச் செயலையும் செய்கிறது.

நெல்சன் மண்டேலா கோட்டைச் சிறை மருத்துவ மனையில் வைக்கப்பட்டிருந்தார். உடனிருந்த கைதிகளில் மூசா டினாத் என்பவர் நெல்சனுக்கு நெருக்கமானவர். வெளியே டினாத்தின் மனைவி வின்னிக்கு நட்பானார்.

சிறையில் டினாத்துக்கிருந்த செல்வாக்கு அவரைக் கைதி என்பதற்குப் பதில் முதலாளி என்றே எண்ணச் செய்தது. சிறை அலுவலர்கள் டினாத்தின் கட்டுப்பாட்டில் பணியாற்றுபவர்களைப் போன்றும், சிறைக் காவலர்கள் இவருடைய ஏவலாட்களைப் போன்றும் நடந்துகொண்டார்கள். டினாத்தின் உணவைச் சிறை அலுவலர்கள் உடனமர்ந்து உண்டார்கள். காவலர்கள் மிச்சம், எச்சத்திற்காக ஏங்கி நின்றார்கள்.

உச்சகட்டமாக ஒருநாள் இரவு, டினாத்தின் சிறைக் கதவை சிறை அலுவலர் ஒருவரே திறந்து, உடன்வந்திருந்த வழக்குரைஞருடன் அவர் உரையாடவும், வெளியே

சென்று அதிகாலை திரும்பிவந்து சிறைபுகுந்ததையும் மண்டேலா கவனித்தார்.

மூசா டினாத் சிறைத் திடலில் உடற்பயிற்சி செய்யவும் ஓடவும் கூட அனுமதிக்கப்பட்டார். இவற்றையெல்லாம் கவனித்த நெல்சன் அவருடைய செல்வாக்கை எண்ணி வியந்தார். சிறையில் மூசா டினாத்தால் சாதிக்க முடியாததே இல்லை என்பதையும் புரிந்து கொண்டார்.

ஒருநாள் டினாத் வின்னியை தனியே வந்து சந்திக்கும் படி செய்தி அனுப்பினார். வின்னியும் சிறையில் தலைவர் அறைக்குள் வந்து சேர்ந்தாள். உள்ளே அழைத்து அமரச் செய்தார். சுற்றுமுற்றும் பார்த்தார். கதவுகளை அடைத்தார். வின்னிக்கு உள்ளூர அச்சம் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் மூசா டினாத் அறைக்குள் வந்து சேர்ந்தார். இவர்கள் தனியே பேச வழிவிட்டு வெளியே சென்று விட்டார் சிறைத்தலைவர்.

டினாத் பேசினார். ''நெல்சனைத் தப்புவிக்கச் செய்ய ஒரு திட்டம் வைத்திருக்கிறோம். அதற்கு 10,000 ராண்ட் தேவைப்படும். ஏற்பாடு செய்ய முடியுமா?'' என்று கேட்டார். இது குறித்து நெல்சனின் நண்பர்களிடம் பேசி ஏற்பாடு செய்வதாகக் கூறிச் சென்றார் வின்னி.

வின்னி நெல்சனின் நண்பர்களிடம் இத் திட்டத்தை எடுத்துரைத்தார். அவர்கள் டினாத்தின் திட்டம், காவல் துறைக்கு நெல்சனை சுடுவதற்கு வாய்ப்பளிக்க ஏதுவானதென்றும், டினாத்தை நம்பமுடியாதென்றும் கூறிவிட்டனர். பின்னர் டினாத்தே, இத்திட்டத்தில் தனக்கு ஐயம் உள்ளதாகக் கூறி, தப்புவிக்கும் திட்டத்தைச் செயற்படுத்தாமல் விட்டுவிட அறிவுரை கூறினார்,

சிறையிலிருந்து நெல்சனைத் தப்பவிட்டு, அவரைப் பிடிக்கும் முயற்சியாகச் சுட்டுவிட காவல்துறை திட்டமிட்டதை இருபதாண்டுகளுக்குப் பின்னர் கார்டன்வில்டர்

என்ற ஓற்றர், மாநில பாதுகாப்பு அலுவலகம் 1969-இல் தீட்டிய இத்திட்டத்தை அம்பலப்படுத்தினார். நெல்சனின் நண்பர் சற்று அவசரப்பட்டு திட்டத்தை ஏற்றிருந்தால், ஓர் இலட்சியவாதி இறந்த காலமாகிவிட்டிப்பார்.

காவல் நாய்கள் கடிப்பதையும், குரைப்பதையும் மண்டேலாவோடு மட்டுமே நிறுத்திக் கொள்ளவில்லை. வின்னியும் அவர்களின் அநாகரிக, அடாவடித்தனத்திற்கு நேருக்குநேர் பதிலடி கொடுக்கவும் தவறவில்லை.

கொள்கைக் கோட்பாட்டினைக் கட்டிக் காக்கவும் அவர் பந்தபாசங்களை வென்று செயல்பட்டுள்ளார். இரண்டு நிகழ்ச்சிகளை மட்டில் இங்கே குறிப்பிடுவதே வின்னியின் தெளிவுக்கும் தீரத்திற்கும் போதுமான எடுத்துக்காட்டாகும்.

ஜோகனஸ்பர்க் செல்வதற்காக வின்னி கேப்டவுன் விமான நிலையம் வந்திருந்தார். காவல் அவரை கண் காணித்து தொடர்ந்து வந்து விசாரித்தது. ''உங்கள் பெயர் முகவரி என்ன?'' காவலர் கேட்டார். என் பெயரும் நான் யாரென்பதும் உங்களுக்குத் தெரிந்ததால் தானே என்னை நீங்கள் கண்காணித்தீர்கள்?'' என்று எரிச்சலுடன் பதில் கேள்வி கேட்டார்.

வின்னிமீது வழக்குத் தொடுக்க காவலுக்கு ஒரு காரணம் கிடைத்துவிட்டது. அனுமதியின்றி கேப் நகருக்கு வந்ததாகவும், காவலர்களுக்கு விவரம் கொடுக்க மறுத்த தாகவும் வின்னிமீது வழக்கு தொடுக்கப்பட்டது.

கடமை உணர்வுக்குக்காட்டான நிகழ்ச்சி இது:-வின்னி தென்னாப்பிரிக்கபழங்குடி இனத்துப்பெண். பழங்குடிகளில் தெம்புகள் ஒரு பிரிவினர். இவர்கள் பாண்டீட்டு நிர்வாகத் திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். அப்போது கிழக்கு பாண்ட்டோலாந்தின் போத்தா சிக்கெளவும், மட்டன் சிம்மாவும் தெம்புகளின் சினத்திற்கு ஆளாகி இருந்தார்கள்.

இவர்களின் ஆதரவாளர் குடிசைகள் கொளுத்தப்பட்டன. பாண்டு நிர்வாகிகள் பலர் கொல்லப்பட்டனர். கெய்சர் மட்டன்சிம்மா என்பவர் நெல்சனின் இனத்தலைவர். இவருக்கெதிராக தனது பூர்வகுடிகளே கிளர்ந்தெழுந்திருந்தது மண்டேலாவுக்கு நெருக்கடியை உண்டாக்கியது.

போத்தா சிக்கெளவுக்கெதிரான நடவடிக்கைகளைத் திட்டமிட 'இங்குவா' குன்றில் 400 பழங்குடிகள் கூடினர். இத்திட்டத்தை ஒற்றர்மூலம் அறிந்த அரசு காவலர்களை அனுப்பி சுற்றி வளைத்து சுட்டது. எட்டுபேர் இறந்தனர். எஞ்சியவர்கள் தப்பியோடி காட்டுக்குள் மறைந்தனர். மீண்டும் ஒன்று கூடி எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஆயத்தமானார்கள். அரசுக்கு ஆதரவாகச் செயல்படும் பழங்குடித் தலைவர்களை எச்சரித்தார்கள். பொருட்படுத்தாதவர்களைத் தாக்கி நிர்வாகத்தை நிலைகுலையச் செய்தார்கள். போராட்ட உணர்வும் கூட போதையைப் போன்றதுதான். இன்னல்களை எண்ணிப் பார்த்து அதை விடமுடிவதில்லை.

கேப் பகுதியில் லாங்காவிலிருந்து நெல்சனின் இனத்தைச் சார்ந்த பழங்குடிகளும், தெம்புவிலிருந்து வந்த ஆள்களும், பான் ஆப்பிரிக்கக் காங்கிரசின் போக்கோ போராளிகளும் ஒன்று சேர்ந்து மட்டன் சிம்மாவைக் கொல்வதற்காக உடலில் பச்சிலை மருந்து பூசிக்கொண்டு தொடர்வண்டியில் புறப்பட்டார்கள். இச்செய்தி ஒற்றர் மூலம் அரசுக்கு எட்டியது. விளைவு? அனைவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். விசாரணைச் சடங்கு முடிந்தது. பலர் மரண தண்டனைக்கும் — எஞ்சியவர் சிறைத் தண்டனைக்கும் ஆளானார்கள். இதனாலெல்லாம் மட்டன்சிம்மா மீதான பழிவாங்கும் எண்ணம் மேலும் வலுத்தது.

வின்னியின் தந்தை மட்டன் சிம்மாவின் ஆதரவாளர்; ஆட்சி மன்றக்குழு உறுப்பினரும் கூட. இதனால் இவர் மகள், மருமகன், ஏன் மகனுக்கும் எதிரான கொள்கைக் கூட்டாளியாகி விட்டார். பெற்ற மகனே எதிரணியில்

சேர்ந்து விட்டார். மகள் தந்தை பாசத்திற்கும், கொள்கை நேயத்திற்குமிடையே தாம்பரம் — கடற்கரை மின்தொடர் வண்டியானார். 'இன்டபா' இயக்கத்தினர் வின்னியின் தந்தை கோக்கனியின் பேருந்தைக் கேட்டதற்கு அவர் கொடுக்க மறுத்து விட்டார். போராளிகள் பேருந்து ஓட்டுநரை பிணையாளியாகப் பிரித்துச் சென்று விட்டதோடு, அன்றிரவே கோகனியின் வீட்டைத்தாக்கினார்கள். சாளரத்தின் வழியாகக் குதித்து கோகனி தப்பிவிட்டார். வின்னியின் பாட்டி மக்குலு போராளிகளின் தாக்குதலில் இறந்து விட்டார். வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டது.

மண்டேலாவின் இல்லத்தில் டிரான்ஸ்கய் பழங்குடிகள் சிலர் கூடினர். தாங்கள் மட்டன்சிம்மா மற்றும் போத்தா சிக்கெள ஆகியோரால் அடையும் துன்பங்களை எடுத்துரைத்தனர். சிறியகூடத்தில் நிரம்பியிருந்த இக் கூட்டத்திற்காக வின்னி உணவு தயாரித்துக் கொண்டிருந்தார். தொடக்கத்தில் இவர்கள் தனது தந்தைக்கெதிராகவும் திட்டம்தீட்டுகிறார்கள் என்பதை அறியவில்லை. சமையல் கூடத்திற்குள் நுழைந்த ஆளொருவன் இங்கிதமின்றி வின்னியிடமே ''உங்கள் தந்தை கொடுத்து வைத்தவர். தப்பிவிட்டார். ஆனால் அடுத்தமுறை அப்படிஏற்படாது'' என்று கூறி எரிச்சலூட்டினான். சமைத்துப் பரிமாறியபின் வின்னி படுக்கையில் விழுந்து அழத் தொடங்கிவிட்டார். பாசம் நெருக்கிய போதும், கடமையும் கொள்கையும் பிறழவில்லை.

இலட்சிய நெஞ்சங்கள் பாசத்தையும் போராடி வென்றுள்ளன. போராட்டத்திற்கு உடலுரம் மட்டும் போதுமானதல்ல. உள்ள உரந்தான் மிகத்தேவை. அந்த நெஞ்சுரம் மண்டேலாவைப் போலவே வின்னிக்கும் இருந்தது.

## அரசின் முப்படைத் தாக்குதல்
## இன்னல் - இழிவு - இழப்பு

1964-ஆம் ஆண்டு-ஜூன் மாதம், 11-ஆம் நாள்.

நெல்சன் மண்டேலாவுக்குக் குற்றவாளி என்ற முள் முடி சூட்டப்பட்ட நாள்.

கைதிகளின் அரண்மனையான சிறைக் கதவுகள் மண்டேலாவுக்காக மறுமுறையும் திறக்கப்பட்டன.

ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசு. விழுந்து வெடித்த விமானத்தைப்போல் நொறுக்கப்பட்டிருந்தது. அந்த இயக்கம் தடைசெய்யப்பட்டிருந்தது.

தலைமறைவானவர்கள், அண்டை நாடுகளுக்குப் தப்பிச் சென்றவர். ஆயுள் தண்டனை பெற்றுச்சிறைக்குச் சென்றவர்கள் போக எஞ்சியவர்களுக்குத் தடை. ஆப்பிரிக்கத்தேசியக் காங்கிரசின் ஆணி வேரையே அகழ்ந்தெடுத்து விட்டதாகத் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டிருந்தது தேசிய அரசு! இதன் தொடர்ச்சியாக மண்டேலாவின் குடும்பத்தையும், குடும்பப் பெருமையையும் அழிக்கவும் திட்டமிட்டுச் செயல்பட்டது.

முதற்பணியாக, வின்னியின் வேலைக்கு வேட்டு வைத்தது. தடை விதித்தது, தடையை மீறியதாகக் குற்றமும் சுமத்தியது.

காவல்துறை, வேட்டை நாயாக மாறி வின்னியைத் துரத்தியது - துன்புறுத்தியது.

நெல்சன் ராபன் தீவுச் சிறையில் அடைக்கப்பட்ட நான்காம் மாதம், வின்னியை 90 நாள் சிறைச் சட்டத்தின் படி காவல் நிலையத்திற்குக் கொண்டு போயிற்று அரசு.

காவல் துறையின் அத்துமீறிய, அநாகரிகச் செயல்களை எதிர்கொண்டு, வின்னி மீள வேண்டியிருந்தது.

வின்னிக்குக் களங்கம் கற்பிக்கும் முயற்சியில் கூடக் காவல் துறை வெட்கமின்றி ஈடுபட்டது.

வின்னிக்கு ஆதரவாக இருப்பவர்களோடு சம்பந்தப் படுத்தி, அவருடைய ஒழுக்க நெறியிலேயே ஓட்டைபோடப் பார்த்தது காவல் எலி.

தனது அவதூறு நடவடிக்கைக்குத் திருமதி சோமனா என்பவரைக் கருவியாக்கிக் கொண்டது. அவரை மண விலக்குகோரி வழக்கு தொடுக்கச் செய்து, அதில் வின்னியை தொடர்பு படுத்தியது. இந்த அவதூறு செய்தித்தாளில் ஊர்வலம் விடப்பட்டபின், மணவிலக்கு வழக்கைத் திருமதி சோமனா திரும்பப் பெற்றார்.

மண்டேலாவைப் பார்க்க அனுமதிக்காமல் இரண் டாண்டுக்காலம் வின்னியை ஏங்கவிட்டது.

அஞ்சல்வழிக் கல்லூரியில் அவருக்குக் கிடைத்த வேலையிலிருந்து வின்னியை நீக்கிவிடத் "தடை" ஆணையைப் பயன்படுத்தியது காவல்.

1966-ஆம் ஆண்டு முதல், 1969 ஆம் ஆண்டு முடிய வின்னி 491 நாள்கள் சிறை வைக்கப் பட்டிருந்தார். 1970-க்கும்-1978-க்கும் இடையில் மூன்று முறை குற்றம் சுமத்தப் பட்டு ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றார்.

1977இல் பிராண்ட் போர்ட்டுக்கு நாடு கடத்தப் பட்டார்.

காலிகள் வீட்டுக்குள் நுழைந்து அவரைக் கழுத்தை நெறித்துக் கொல்ல முயன்றார்கள். அவருடைய வீட்டில் கல்லெறிந்து சேதப் படுத்தினார்கள். தொலைபேசியைத் துண்டித்தார்கள். இப்படித் தொல்லைகளைத் தொடர்ந்து கொடுத்து வந்தார்கள்.

காவல் துறையும் அவரைத் தொடர்ந்து நெருக்கி வந்தது. ஆசை காட்டிச் சிலருக்கு எதிராக வாக்கு மூலம் பெற முயன்றது. முடியாதபோது அச்சுறுத்தியது— முடிவாக அலைக் கழித்தது.

குடும்பத் தலைவன் இல்லாமல், இளமையும். அழகும் உடைய பெண், இரண்டு சிறு பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டு, காலிகளுக்கும், காவல் துறைக்கும் ஈடு கொடுத்து வாழ்ந்தாரென்றால் அது சாதாரண சாதனையல்ல.

வின்னி போராட்டத்தோடு வாழ்ந்தது மட்டுமல்ல, தன் கணவர் மூட்டிய போராட்டக் கனல் களத்தில் சில்லிட்டுப் போகாமலும் பார்த்துக் கொண்டார்.

சிறைக்குள்ளிருந்த நெல்சன் மண்டேலா தனது குடும்பத்தைப் பற்றிச் சிந்திக்காமலில்லை, குடும்பத்தை யும் அவர் நேசித்தார். குழந்தைகளின் கல்வி குறித்து அவர் கவலைப் பட்டார்.

பழி வாங்குவதில் அரசு விண்கல வேகத்தில் செயல் பட்டது. மண்டேலாவின் குடும்பத்தை ஆதரவற்றதாக்கி அலைக் கழிப்பதில் முனைப்பாக இருந்தது. ஆனால் வின்னி வெயிலில் வைத்த வெண்ணெயாக இல்லாமல், எஃகாக நின்று, எதிர் நீச்சல் போட்டார்.

ஆப்பிரிக்கப் பெண்கள் கூட்டமைப்பை ஏற்படுத்தி, அதன் தலைவரானார் வின்னி. அதே போல் ஆப்பிரிக்கப் பெற்றோர் சங்கத்தையும் உருவாக்கினார். சுவெட்டோ எழுச்சியின் போது பெண்கள் கூட்டமைப்பை அரசு தடை செய்தது. அரசின் அடுக்கடுக்கான அடாவடித்தனங்கள் கண்டு எழுதமுடியாத அளவுக்கு ஏராளமானவை.

மண்டேலாவின் தாய் நோசக்கேனி 1968-இல் கால மானார். அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளக் கூட நெல்சன் மண்டேலாவை அனுமதிக்கவில்லை அரசு.

மாறாக. மக்கள் கொதித்தெழுவார்களோ என அஞ்சி இறுதிச் சடங்கு நிகழும் இடத்திற்கு, எப்போதுமில்லாத அளவிற்குக் காவலர்களை அனுப்பி வைத்தது.

மண்டேலாவின் அன்பு மகன், முதல் பிள்ளை தந்தையின் கட்டளைப்படி இட்டபணியை இயல்பாகச் செய்து வந்த 'தெம்பி' ஐயத்திற்கிடமான முறையில், மோட்டார் சைக்கிள் விபத்தில் மாண்டார்

ரிவோனியா வழக்கில் குற்றம் சுமத்தப் பட்டவர்களுக்காக வாதாடிய வழக்கறிஞர், பொதுவுடைமைக் கொள்கைக் கோட்டம் பிராம் பிஷர், 1965-ஆம் ஆண்டு முதல் தலைமறைவாகி இருந்தவரை, 1967-இல் கைது செய்து சிறையிலடைத்து; 1977-இல் அவர் உயிர் துறக்கச் செய்தது ஆட்சி!

ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசின் தலைவர் ஆல்பர்ட் லுத்துலி, தான் வழக்கமாக உலாவச் செல்லும் பாதையில் தொடர் வண்டியில் அடிபட்டு இறந்ததாக உலகம் நம்பும்படி கொலை செய்யப் பட்டார்.

இப்படி நெஞ்சை நெகிழச் செய்யும் நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தன. இன்னல்களும் இழப்புகளும் மண்டேலாவுக்கும், அவர் குடும்பத்திற்கும் அரசின் பரிசாக அளிக்கப் பட்டன. சிறைக் கொடுமையைப் பொறுத்தவரை, அவரை விடவும் அதிகம் அனுபவித்தவர்கள் உண்டு.

1968-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க மாணவர் இயக்கத்தைத் தோற்றுவித்த ஸ்டீவ்பிக்கா, இலாகூர் சதி வழக்கில், சிறை பிடிக்கப் பட்ட பந்த சிங், அந்தமான் சிறையில் அதிகாரிகளாலும், காவலர்களாலும் அடித்தே கொல்லப் பட்டதைப் போல் சிறைக்குள் கொடுமைப் படுத்தியே கொல்லப் பட்டார். எனினும் குடும்பமே கொச்சைப் படுத்தப்பட்டுக் கொடுமை இழைக்கப்பட்டது மண்டேலா குடும்பத்திற்கே உரிமை!

வஞ்சக எண்ணத்தோடு மண்டேலாவுக்கு மட்டில் சில வசதிகளை அறிவித்து அவரைத் தனிமைப் படுத்த முயன்றது ஆட்சி. "என் தோழர்களுக்குக்கிடைக்காத எந்த வசதியையும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்," என்று மறுத்துத் தான் யார் என்பதை அரசுக்கு உணர்த்தினார்.

நிபந்தனையோடு அவரை விடுதலை செய்வதாக அரசு பலமுறை அறிவித்தது. "எந்த நிபந்தனைக்கும் நான் இணங்க மாட்டேன்" என்று கொள்கைப் பிடிப்போடு கூறி விட்டார் மண்டேலா.

தென்னாப்பிரிக்க அரசின் இனவேற்றுமைக் கெதிராக, உலக நாட்டமைப்பு, பொருளாதாத் தடையை விதித்தது. நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்யும்படி நெருக்குதல் செய்தது, உள் நாட்டிலும், உலக நாடுகளிலும் மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வலுத்தது. எனவே அரசு தனது பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

1985-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கத் தேசிய அரசின் தலைவர் பி.டபிள்யு. போத்தாரிவோனியா வழக்குக்கைதிகளை நிபந்தனைகளுடன் விடுதலை செய்வதாக அறிக்கை விட்டார். அந்த அறிக்கையின் சொற்றொடர்கள் வெறுப்பூட்டக் கூடியதாக இருந்தன.

அதற்கு நெல்சன் மறுமொழி எழுதினார். அரசுமட்டுமல்ல மக்களும் அறிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக அதைத்திறந்த மடலாக்கினார்.

நெல்சன் மண்டேலாவின் திறந்த மடல், அவருடைய மகள் சிந்தி அவர்களால், சுவெட்டோ ஜபுலானி அரங்கில் 1985 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 10-ஆம் நாள், பொது மக்கள் முன்னிலையில் படிக்கப் பட்டது. கடிதக் கருத்து தோ:-

''நான் ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரஸ் உறுப்பினன்; எப்போதும் அதன் உறுப்பினன் தான். நான் இறக்கும் நாள் வரை, ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசின் உறுப்பின னாகவே இருப்பேன்.

ஆலிவர் டாம்போ எனது உடன்பிறப்புக்கும் மேலான வர், அவர் எனது ஐம்பதாண்டுக் கால தலையாய நண்பர், தோழர்.

நீங்கள் எனது விடுதலையை முக்கியமெனக் கருது கிறீர்கள். என்னுடையதைவிட முக்கியம் டாம்போவின் விடுதலை. என்னை விடுதலை செய்ய, அவர் தனது ஆவி யையும் கொடுப்பார். எங்களுக்குள் கருத்து வேற்றுமை குருத்து விட்டதில்லை.

அரசு என் மீது திணிக்க விரும்பும் நிபந்தனைகள், எனக்கு வியப்பைத் தருகின்றன. நான் வன்முறையாள னல்லன். என் தோழர்களும், நானும், 1952-ஆம் ஆண்டே நாட்டுப் பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்காக வட்ட மேசை மாநாட்டைக் கூட்டும்படி மலானுக்கு எழுதினோம். ஆனால் அது புறக்கணிக்கப்பட்டது.

இஸ்ட்டிரிஜ்டோம் அதிகாரத்திலிருக்கும் போதும் இதைத் தெரிவித்தோம். அப்போதும் அது புறக்கணிக்கப் பட்டது.

இவர்களுக்குப்பின் பதவிக்கு வந்த வெர்வூர்டுவிடம் தென்னாப்பிரிக்க மக்கள் எல்லாரும் தங்கள் எதிர்காலத் தைத் தீர்மானிக்க ஏதுவாக; தேசியக் கருத்தரங்கைக் கோரினோம். அதுவும் பயனற்றுப் போயிற்று. எல்லா விதமான எங்கள் கோரிக்கைகளும், காட்டிய எதிர்ப்பும் புறக்கணிக்கப்பட்ட பிறகே நாங்கள் ஆயுதப் போராட்டத் திற்கு ஆயத்தமானோம்.

மலான், இஸ்ட்டிரிட்ஜ்டோம், வெர்வூர்டு ஆகியோரி லிருந்து தான் மாறுபட்டவரென்பதை போத்தா நிரூபிக் கட்டுமே!

போத்தா வன்முறையைக் கை விடுவதாகக் கூறட்டும்,

நிறவேற்றுமையை ஒழித்துக் கட்டுவதாக உறுதியளிக் கட்டும்

மக்கள் இயக்கங்கள் மீதும், ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசு மீதும் உள்ள தடையை அவர் விலக்கட்டும்.

பாகுபாடின்றிச் சிறையிலடைக்கப் பட்டவர்களையும், நாடு கடத்தப்பட்டவர்களையும், தடை செய்யப்பட்டவர் களையும் அவரவர் நிலைக்கே கொண்டு வரட்டும்.

தங்களை யார் ஆள வேண்டுமென்பதை மக்களே தீர்மானிக்கக் கட்டுப்பாடற்ற அரசியல் நடவடிக்கைகளை அனுமதிப்பதாக அவர் உறுதி கூறட்டும்.

எனது சுதந்தரத்தைவிட, நான் உங்கள் சுதந்தரத்தில் அதிக அக்கறை உடையவனாக உள்ளேன். நான் சிறைப் படுத்தப்பட்டதிலிருந்து ஏராளமானவர்கள் ஆவி நீத்துள் ளார்கள், விடுதலை வேட்கையால் எண்ணற்றோர் இன்னல்களுக்கு ஆளாகியிருக்கின்றார்கள்.

கணவனை இழந்த விதவைகள், அனாதையாகிவிட்ட குழந்தைகள், பிள்ளையைப் பறிகொடுத்து ஆற்றாதழுத தாய்-தந்தையர்கள்; இவர்களுக்கெல்லாம் நான் கடமைப் பட்டவன். இந்த நீண்ட, தனிமையான; பாழடிக்கப் பட்ட காலத்தில் நான் மட்டுமே இன்னல் பட்டவனென்று எண்ணவேண்டாம்.

உங்களைப் போலவே நானும் வாழ்க்கைப் பிடிப்புள் ளவன் தான். ஆனால் அதற்காக எனது பிறப்புரிமையை விற்க முடியாது. எனது மக்களின் பிறப்புரிமையையும் எனது விடுதலைக்காக நான் விற்கவோ, விட்டுக் கொடுக் கவோ விரும்ப மாட்டேன்.

நான் மக்கள் பிரதிநிதி — உங்கள் இயக்கமான தடை செய்யப்பட்ட ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசின் தொண்டனாகவே சிறைக்குள் இருக்கின்றேன்.

மக்கள் இயக்கம் முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றது, ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசுக்குத் தடை!

அனுமதிச் சீட்டில்லை என்று என்னைக் கைது செய்யலாம்.

எனது அன்பிற்கினிய துணைவிக்குத் தடை. அவர் பிராண்ட்போர்ட்டுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார். ஒன்று பட்ட எனது குடும்ப வாழ்க்கைக்கு ஊறு செய்யப்பட்டுள்ளது.

நான் நகரத்தில் குடியிருக்கவே அனுமதி பெற்றாக வேண்டும்,

எனக்கொரு வேலையைத் தேடிக் கொள்வதற்குக்கூட அனுமதிச் சீட்டும், அதில் முத்திரையும் தேவைப்படுகிறது.

எனது தென்னாப்பிரிக்கக் குடி மக்கள் மதிக்கப்படவில்லை. இந்த நிலையில் எனக்கு விடுதலை என்றால் அது என்ன விடுதலை? எதிலிருந்து விடுதலை?

சுதந்தரமான மனிதன்தான் பேச்சு வார்த்தையில் ஈடுபட முடியுமே தவிரக் கைதிகள் ஒப்பந்தம் செய்ய முடியாது.

ஹெர்மன் டொய்வோ-ஜா டொய்வோ விடுதலை செய்யப்பட்டபோது, அவரிடம் உறுதிமொழி ஏதும் கேட்கப்படவுமில்லை. அவர் கொடுக்கவுமில்லை.

நானும் எனது மக்களாகிய நீங்களும் சுதந்தரமாக இல்லாதபோது, என்னால் எவ்வித உறுதிமொழியும் தர முடியாது- தரவும் மாட்டேன்.

எனது விடுதலையும், உங்கள் சுதந்தரமும் பிரித்துப் பார்க்க முடியாதவை.

நான் திரும்பி வருவேன்.''

மக்களுக்கும் — அரசுக்கும் மண்டேலாவின் இந்தக் கடிதம் அவருடைய தன்னிலை விளக்கமாகித் தெளிவு படுத்தியது.

## புகழ்ப் பூக்கள்

மனிதர்களுக்கு மறதி அதிகம். தேவை தீர்ந்தபின் நினைவு நீர்த்து விடுகிறது.

எதற்குமுள்ள விதிவிலக்கு இதற்கும் பொருந்தும்.

பொதுநலத் தொண்டர்கள் பலர் புது முகத்திரையால் மறைக்கப்பட்டிருக்கின்றார்கள்; மறக்கப் பட்டிருக்கின்றார்கள். அரசியல் இலக்கணத்தில் இது ஓர் அணி.

பொது மக்களுக்காகப் போராடுபவர்களுக்குத் தொடக்க காலம், தொல்லைகளின் எல்லைகளை நீளமாக்கி வைத்திருக்கும்.

நெல்சன் மண்டேலா 1962 ஆம் ஆண்டு தண்டனை பெற்று சிறைக்குச் சென்ற செய்தி, உலக ஏடுகளில் உள்ளடக்கமாகக் கூட வரவில்லை, உள்ளூர் செய்தித்தாள்களே அச்செய்தியை உச்சியில் ஏந்தி வந்தன.

பழுத்தபின் தானே பலாப்பழம் கூடப் பக்கத்து வீட்டுக்காரரின் மூக்கு முகவரியைக் கேட்கிறது!

சிறையும், சிறுமைப் படுத்தலும் மண்டேலாவின் கொள்கைப் பிடியைக் குரங்குப் பிடியாக்கியதே தவிர, நெகிழச் செய்து நெடும் பயணத்தை முடக்கிட முடியவில்லை.

பதினெட்டாண்டு காலத்தை, உலகம் விதையுறக்கக் காலமாக வீணாக்கியபின், 1980 ஆம் ஆண்டு விழித்துக்

கொண்டது. ''மண்டேலாவை விடுதலை செய்'' என்ற கோரிக்கை தென்னாப்பிரிக்காவில் மட்டுமின்றி, உலக நாடுகளிலெல்லாம் ஓங்கி ஒலித்தது,

உள் நாட்டில் அமைதி குலைந்தது!

உலக நாடுகளின் உறக்கம் கலைந்தது!

விடுதலைக் கோரிக்கையில் வேகம் பிறந்தது. நினைவு அலைகளின் மேல் மண்டேலாவின் புகழ் பவனி வந்தது.

போற்றத் தொடங்கி விட்டால் புரிந்து கொள்ளாமலேயே மக்கள் புயலாகி விடுகிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டுக்கு மேலும் ஓர் இலட்சியவாதியின் முகவரி கிடைத்தது. பெருமையைத் தழுவிப் பெருமை பெறுவதென்பது அறிவார்ந்த உலகின் அறிமுக வியூகம். அந்த வியூகத்தின் வெற்றிப்பட்டியல் மண்டேலாவின் பெயர் வழியில் பயணப்பட்டது.

மண்டேலாவின் புகழுக்கு மகுடம் சூட்ட ஆர்வப்பட்ட நாடுகளுள் இந்தியா முந்திக் கொண்டது.

எவருடைய புகழும் பரிதியின் ஒளிக்கரத்தைப் போல் மக்களை நேரடியாகத் தீண்டி விடுவதில்லை.

ஆற்றில் வெள்ளம் கரை புரண்டாலும் அது நெல் வயலுக்கு நேரடியாகச் சென்று பாய்வதில்லை. வாய்க்கால்கள்தானே அருவி நீரைப் பயிரின் வேர்களோடு பந்தப்படுத்துகின்றன? புகழும் அப்படியே!

எடுத்துக்கூற எவருமில்லை என்றால் திருவள்ளுவர் கூட நமக்குத் தெரிந்தவராகி இருக்கமாட்டார். அறிமுகப்படுத்த ஆளில்லாத காரணத்தால் எத்தனையோ ஆற்றலாளர்கள், காசில்லாதவன் வீட்டுக் கன்னிப் பெண்களைப் போல் கண்டு கொள்ளப் படாமலிருக்கின்றார்கள்!

1979ஆம் ஆண்டு, நேரு விருதுக்கு நெல்சன் மண்டேலாவின் பெயரைப் பரிந்துரைக்கும்படி திருமதி இந்திரா

காந்திக்குத் தென்னாப்பிரிக்காவிலிருந்து பாத்திமா எழுதினார். இந்திராகாந்தி முடியிழந்து குடிமகளாகி இருந்த கால கட்டம் அது.

நேரு பரிசு, அரசு முடிவெடுத்து அளிப்பது. எழுபத்தொன்பதில் இந்திரா பரிந்துரை ஏற்கப்படுமா? எனினும், தான் வேறு வழியில் நெல்சன் மண்டேலாவுக்கு நேரு பரிசு கிடைக்க முயற்சி செய்வதாக இந்திரா பாத்திமாவுக்குப் பதில் எழுதினார்.

1979-ஆம் ஆண்டு, நேரு விருது நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்பட்டது.

இன்னலுக்கே தன்னைக் கொடுத்து விட்டிருந்தவரை, தென்றலின் இதம் தீண்டிப் பார்த்தது. மண்டேலாவின் குடும்பத்தினரும், நண்பர்களும் மகிழ்ச்சி மழையில் நனைந்தனர். அவருடைய புகழ்ப் பயணத்தில் 1979-ஆம் ஆண்டும் நேரு விருதும் மறக்கமுடியாத மகிழ்ச்சி நிகழ்வாயின. எதிலுமே 'முதல்' என்பதற்குத் தனி முத்திரை உண்டல்லவா?

பரிசும் பாராட்டும் தகுதியானவர்களைத் தள்ளி நடப்பதுண்டு. தொட்டுப் பார்த்து விட்டாலோ தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். மண்டேலாவை மதித்துப் போற்றும் பணியை இந்தியா தொடங்கி வைத்தது, உலக நாடுகள் தொடர்ந்தன.

சைமன் பொலிவர் விருது, ஸ்பெயின் நாட்டவரோடு மண்டேலாவுக்குக் கூட்டாகக் கொடுக்கப்பட்டது.

இலண்டன் பல்கலைக் கழகத்திற்கு இவர் பெயர் முன்மொழியப்பட்டது, இளவரசி அன்னியும், பெயர் பெற்ற ஜாக் ஜோன்சும் இவரோடு போட்டிக்களத்திலிருந்தார்கள். நூறு வாக்குகளே கிடைக்காதென்ற நிலைமை! புருவப் பாலங்கள் புடைத்து நொறுங்கும்படி நெல்சன் மண்டேலா, மேட்டுக் குடியினர்களுக்கெதிராக 7199 வாக்குகள் பெற்

றார். இது சாதாரணன் சாதித்த அசாதாரணம். நிகழ்ந்தது 1980-ஆம் ஆண்டில்.

1981-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிக்குழு ஹெறரால்ட். வோர்ஃப் தலைமையில் மண்டேலாவைச் சந்திக்க அனுமதி கோரியது. ஆனால் அனுமதி மறுத்ததன் மூலம் தென்னாப்பிரிக்கா அரசு சுரங்கத்திற்கும் கீழே தன் தரத்தைத் தாழ்த்திக் கொண்டிருப்பதை உலகிற்கு உணர்த்தியது.

பிரான்சில் மிட்ராண்ட் தலைமையிலான சமநீதிக் கட்சி உட்பட ஆறு அமைப்புகள் ஒருங்கிணைந்து, மண்டேலாவை விடுதலை செய்யக் கோரி 1700 கையொப்பங்களைப் பெற்றுத் தென்னாப்பிரிக்கத் தூதரகத்திடம் கொடுத்தது.

1983-ஆம் ஆண்டு, பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் போட்டியிட்டன மண்டேலாவுக்கு மதிப்பளிக்க!

இலண்டன் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தங்கள் அமைப்பில் நெல்சன் மண்டேலா 'உயிருள்ளவரை உறுப்பினர்' என்ற பெருமையை உரிமையாக்கிற்று.

கிளாஸ்கோ, நெல்சன் மண்டேலாவைத் தனது நகரின் சுதந்தர மனிதரென அறிவித்தது.

தெருக்கள் பல தங்கள் பெயர்களைத் திருத்திக் கொண்டன. வடகிழக்கு இலண்டன் முதல் தெரு, நெல்சன் மண்டேலா பெயரைச் சூட்டிக் கொண்ட தெருக்களில் ஒன்று.

பூங்காக்களும் இந்தப் போட்டியில் கலந்துகொண்டன. பூக்களின் அந்தப்புரங்கள் மண்டேலாவின் பெயரால் தங்களைப் புதுப்பித்துக் கொண்டன.

புரூனோ கிரென்ஸ்க்கி அறக்கட்டளை ஆஸ்திரிய மனித உரிமை விருதை வழங்கியது.

பிரிட்டனின் தொழிற் கட்சி, தனது மாநாட்டிற்கு மண்டேலாவை அழைத்தது.

1988 இல் மொசாம்பிக் அரசு, தனது மிக உயர்ந்த விருதை மண்டேலாவுக்கு வழங்கியது.

உலகக் குத்துச்சண்டை வீரர் மைக் டைசன், தனக்கு உலக வீரர் என்ற பட்டத்தை வாங்கித் தந்த குத்துச் சண்டைக்கையுறையை நெல்சன் மண்டேலாவுக்கு அனுப்பி வைத்தார்.

ஹாலந்தின் 'புதிய தேசம்' என்ற ஏடு, நெல்சன் மண்டேலாவுக்குப் பிறந்த நாள் வாழ்த்து அட்டைகள் 1, 70, 000 வந்ததாக 27-11-88 இல் செய்தி வெளியிட்டது.

இலண்டனில், மண்டேலாவின் பிறந்த நாளுக்காகப் புகழ்பெற்ற பாடகர்களைக் கொண்ட மிகப் பெரிய இசை விழா நடைபெற்றது.

முத்தாய்ப்பாக, 1990, அக்டோபர் 16 ஆம் நாள், இந்தியாவின் உச்ச விருதான 'பாரத ரத்னா' நமது குடியரசுத் தலைவரால் நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப் பட்டது. சோவியத் நாட்டின் இலெனின் பரிசும் மண்டேலாவை அடைந்து மதிப்புப் பெற்றது. வரலாற்றுத் தலைவனின் புகழ்ப்பூக்கள் மலர்ந்து மணம்வீசுவது தொடர் கிறது, தொடரவேண்டும்' கியூபாவின் உச்ச விருதான ஹோஸ் மார்ட்டி பதக்கம் நெல்சன் மண்டேலாவுக்கு அதிபர் பிடல் காஸ்ட்ரோவால் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

## இலக்கை நோக்கி

மண்டேலாவின் 'விடுதலை' மக்கள் அகமகிழ்வின் ஆணி வேர்!

'விடுதலை' என்னும் வெல்லச் சொல்லோ நீர்க் கோழியைப் போல் அடிக்கடி வெளிப்பட்டு மறைந்து கொண்டிருந்தது.

1989-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள்.

மண்டேலா விடுதலை செய்யப்படுவார்?... ஏடுகளின் தலைப்பில் பூச்சூடிக்கொண்டு வந்த செய்தி இது.

செய்தித்தாள்களின் தலைப்பில் இடம்பெறும் முற்றுப் புள்ளிக்கும்: வினாக்குறிக்கும் உள்ள வேறுபாடு, விண்ணுக்கும் மண்ணுக்கும் உள்ள இடைவெளி அளவு என்பது சிலர் மட்டுமே அறிந்த உண்மை! செய்திக்கு அடிப்படை திருமதி தாட்சர் தென்னாப்பிரிக்காவில் பயணம் செய்து, வெளியுறவு அமைச்சர் பிக் போத்தாவுடன் பேசியதுதான்.

மக்கள் மனதில் விழாக்கால விசை ஏறியது. அமைப்புகளில் ஆயத்தம் சூடுபிடித்தது, விழாவுக்கும், விருந்துக்கும் அரங்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

போல்ஸ்மூர் சிறைவாயிலில் மக்கள் கூட்டம் மண்டேலாவை வரவேற்கக் காத்திருந்தது.

கேப் பல்கலைக் கழகத்திலிருந்து ஓர் உண்மை புயல் வடிவில் புறப்பட்டு வந்தது,

மண்டேலாவை விடுதலை செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லை. இதுதான் புறப்பட்டுவந்த புயல்.

ஊராட்சித் தேர்தலுக்கு வேட்புமனு கொடுக்கக் காத்திருந்தவர்களைப் போல் மக்கள் ஏமாற்றத்தைச் சுமந்து கொண்டு திரும்பினர்.

மண்டேலாவின் 'விடுதலை' என்பது கனவுக் காட்சி தானா?

ஓராண்டுக்குப் பிறகு இந்த வினாவுக்கு விடை கிடைத்தது.

அரசியல் உலகம் அந்த நாளை ஆர்வத்தோடு எதிர் பார்த்தது. உற்றநாள் வந்ததும் உவகையோடு கொண் டாடியது.

உலகமே கொண்டாட அது என்ன இரண்டாவது கிறித்துமசா?

11-2-1990-ஆம் நாளுக்கு அப்படி என்னதான் சிறப்பு?

மின்னல் கோடுகளால் கறுப்பு மேகங்கள் கனைக்க மட்டுமல்ல சிரிக்கவும் தெரியுமென்று அறிவித்ததைப் போல், சுதந்தரப்பரணி பாடுபவர்களால் சோகங்களைச் சுமந்து காட்டவும் முடியுமென்று மெய்ப்பித்த நெல்சன் மண்டேலா விடுதலையான விழா நாள் அது!

அந்த மக்கள் தலைவனின் அகவை அப்போது 72. இந்த எண்கள் இடம் மாறினால் 27. ஆம் இருபத்தேழு ஆண்டுகள் கடின சிறைக்குள், சிறகு வெட்டப்பட்ட செம் போத்தாக இருந்த மண்டேலா, விக்டர் வெர்ஸ்டர் சிறையிலிருந்து துளிர்த்த இறகுகளோடு விடுதலை பெற்று வெளியே வந்தார்.

உலகம் போற்றும் உரிமைப் போராளியின் தடயம் தங்கள் நாட்டில் பதிய வேண்டுமென்பதற்காகப் பல நாடுகள் அவருக்கு அன்பு அழைப்பு விடுத்தன. தில்லியிலி லிருந்தும் திருமுகம் சென்றது.

தன்னலந்துறந்த அந்தக் கறுப்புத் தாமரையைத் தடாகங்களெல்லாம் தங்கள் வாவிக்கு வருமாறு அழைத்த தில் அசாதாரணம் ஏதுமில்லை.

எதிர்நீச்சல் போட்டு இயங்கிக் கொண்டிருந்த ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசுக்குப் பொருள் தேவைப் பட்டது. தென்னாப்பிரிக்க அரசின் மீதான பொருளா தாரத் தடையை நீக்கி விடக் கூடாதென்பதை நிலை நாட்ட வேண்டியதும் அவசியமாயிற்று.

நிதி திரட்டவும். நிலைமையை நேரில் விளக்கவும் நெல்சன் மண்டேலா உரிமைப் போராட்டத் தூதுவராக உலக நாடுகளுக்குப் பயணமானார். தென்னாப்பிரிக்க அதிபர். டபிள்யு.எப்.டி.கிளார்க் ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் ஏற்படுத்தி இருந்த தவறான கருத்தைத் தகர்க்கும் பொறுப்பு நெல்சன் மண்டேலாவுக்கு இருந்தது. சென்ற நாடுகளில் எல்லாம் தெ.ஆ.அரசுக்கு எதிரான பொருளாதாரத் தடை நீடிக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

டி-கிளார்க் தென்னாப்பிரிக்க அரசின் முன்னாள் நிலையைத் தவறு என ஒப்புக் கொண்டதற்காக. அவரைப் பாராட்டலாமென்றாலும், அவருக்கு அதை உணர்த்த ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசு விலை கொடுத்திருக்கிற தென்பதையும் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் ஜப்பான், ஜெர்மனிக்கும் விளக்கினார்.

நெல்சன் மண்டேலாவின் விடுதலையைத் தொடர்ந்து 'வெள்ளையர்கள் மட்டும்' என்னும் அநீதியின் அடையாள அறிவிப்புப் பலகைகள் நிதி, வணிக நகரங்களிலிருந்து நீக்கப் பட்டன.

சிறுபான்மை வெள்ளையர்கள் 87% நிலத்திற்கு உரிமை கொண்டவர்களாக இருக்கும் நிலையை மாற்ற அரசு கொள்கை அறிவிப்புச் செய்திருந்தாலும், அரசு அதைச் செயற் படுத்த வெள்ளையர்கள் அவ்வளவு எளிதில் அனுமதிக்க மாட்டார்களென்பதற்கான அறிகுறிகளும் தென்படாமலில்லை.

1989-செப்டம்பரில் பொறுப்புக்கு வந்த அதிபர் டி-கிளார்க், தாம் பல அரசியல் சீர்திருத்தங்கள் செய்திருப்பதாகவும், மேலும் தொடர்ந்துபல சீர்திருத்தங்களைச் செயற்படுத்தப் போவதாகவும் அறிவித்துபொருளாதாரத் தடையை நீக்குமாறு பல உலக நாடுகளைக் கேட்டுக் கொண்டார்.

மண்டேலாவுடன் நடத்திய பேச்சில் மூவாயிரம் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக் கொண்ட டி-கிளார்க் அதை முழுமையாகச் செயற்படுத்தவில்லை. அதனால் ஆர்ப்பாட்டம் வலுத்து, வின்னி மண்டேலாவை அரசு கைது செய்யவும் நேர்ந்தது.

சூழ்ச்சிப் பின்னலில், சிலந்திகளுக்கே பேராசிரியர்களாக இருக்கும் பெருமை பெற்றவர்கள் வெள்ளையர்கள்.

மோதலை உருவாக்குவதிலும், அதை முன் நின்று தீர்த்து வைத்து ஆதாயம் பெறுவதிலும் அவர்கள் சாதித்தவைதான் ''சாம்ராஜ்ய'' சரித்திரம்.

தென்னாப்பிரிக்காவிலும் இந்தத் தீமையை அவர்கள் பயிரிடத் தவறவில்லை. சூலு இனத்தவரை மோதல் வித்தாக்கி அங்கே வெள்ளையர்கள் வேளாண்மை செய்தார்கள்.

கறுப்பர்களின் குடியிருப்பான சுவெட்டோவில் சூலு இங்காத்தா இயக்கத்தினர், தங்கள் ஈட்டிக்கும் பிற போர்க் கருவிகளுக்கும் ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரசு ஆதரவாளர்களை இரையாக்கினார்கள்.

துப்பாக்கிகளின் தோழர்களான தென்னாப்பிரிக்கக் காவல்துறையினரோ, கலவரத்தை அடக்குவதாகக் கூறிக் கொண்டு, கறுப்பர்களின் கல்லறைக் கணக்கை அதிகரித்தார்கள். இப்படி ஆயிரத்துக்கும் நேற்பட்டவர்கள் அங்கே கொல்லப் பட்டார்கள்.

கொலைகளையும், கொடூரத் தாக்குதல்களையும் தடுக்க வேண்டுமென நெல்சன் மண்டேலா, அரசுக்கு விடுத்த அடுக்கடுக்கான வேண்டுகோள்கள் அலை மேல் எழுத்தாகிக் கொண்டிருந்தன. எனவே சூலுக்கள் ஆயுதமேந்தி நடமாடுவதற்குத் தடை விதிக்க வேண்டுமென்றும், சட்டம் ஒழுங்கு அமைச்சர் பதவி விலக வேண்டுமென்றும்

மண்டேலா கோரினார். அரசு விரும்பிய பேச்சு வார்த்தைக்கு இணங்க இவற்றை நிபந்தனையாக்கினார்.

படுகொலைகள் அன்றாட நிகழ்ச்சிகளாக இன்றும் நடந்து கொண்டு தானிருக்கின்றன. எனவே அரசு கூட்டிய அமைதி மாநாடு நெல்சன் மண்டேலாவும் மற்ற முக்கிய இயக்கங்களும் பங்கேற்காமலேயே நடந்தேறியது. சூலுக்களின் இங்காத்தா இயக்கத் தலைவர் மொங்குஸ்து புத்தலேசி மட்டில் இம்மாநாட்டில் கலந்து கொண்டார்.

மண்டேலாவின் குடும்பத்தில் மகிழ்ச்சி குடியிருக்கக் கூடாதென்பதில் வெள்ளையர்கள் விருப்பமுடையவர்களாக இருந்தார்கள்.

இனவெறி ஆதரவாளர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்கியதாகத் தொடுக்கப்பட்ட வழக்கில் வின்னி மண்டேலாவைத் தொடர்பு படுத்தி, நீதி மன்றம் அவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இத்தீர்ப்புக்கெதிராக வின்னி மேல் முறையீடு செய்துள்ளார்.

தீர்ப்புக் கெதிராக மக்கள் ஆர்த்தெழுந்தார்கள். ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அமைதிக்கு நோயூட்டும் நிலைமை தோன்றியது.

தொண்டுக்கும், தூய்மைக்கும் துணிவுக்கும் தோழனான நெல்சன் மண்டேலா மக்களைத் தூண்டிவிடவில்லை. அமைதி காட்டும்படி ஆணையிட்டார். இதனை நீதிமன்றத்தின் முடிவுக்கே விட்டுவிடுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார். இதன் மூலம் தான் ஒரு பக்குவப்பட்ட, பண்பாடான தலைவர் என்பதை மெய்ப்பித்தார்,

வீரன் விவேக மானவனாகவும், கோழைகள் கொடூரமானவர்களாகவுந்தான் இருப்பார்கள். மண்டேலா ஒரு மாவீரன். அவர் கீரைப் பாத்தி அல்ல. பைன் மரக்காடு,

கறுப்பின மக்களின் நலனுக்காக அவர் ஏற்றுக்கொண்ட இலட்சியப் பயணம் எவ்வளவு நீண்டதாக இருந்தாலும் இடைவெளியின்றித் தொடர்கிறது.

○ சம நீதியும், சமூக நீதியும் நிலை நிறுத்தப்பட வேண்டும்.

○ பெரும்பான்மைதான் ஆள வேண்டும்.

○ உரிமை சமம். உடைமை பொது.

இந்த இலக்கை நோக்கியே அவர் பயணம்.

தூய்மையானவர்களின் முயற்சிக்குத் தோல்விஎன்பது என்றுமேயில்லை.

அதோ மண்டேலாவின் பார்வையும் பாதங்களும் இலக்கை நோக்கியே இயங்குகின்றன.

□

# கறுப்புத் தோழனே!

சமநீதியை அழித்தாண்டிடச்
சதிகாரர்கள் நினைத்தார்!
அமர்தானவர் முடந்தானென
அறிய — வினை — புரிய
எழுவாய் — விழி — மழுவாய்!

நமதாகிய நிலமீதினில்
உமதாளுகை பறித்தார்!
சமமாகவும் நடத்தாதவர்
சதியால் — செய் — விதியால்
நொடித்தார் — நலம் — முடித்தார்!

துய ரேதினி தொடராதினி
துணிவாய் செயல்முனைவாய்!
அயலாரிடம் முயலாகிடோம்
அரியே — செயல் — சரியே
துடிப்பாய் — வினை — முடிப்பாய்!

□□□